# தமிழரசு

திங்கள்இருமுறை செப் 1. 1971 - 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

TIDCO

AC-11



# தமிழரசு

மலர் 2 1-9-1971 இதழ் 5

கோட்டை கொத்தளத்தில்......
தடையுடைத்து வா! வா! (கவிதை)
அண்ணா பண்ணை ஆற்றிடும் சேவை
அந்தக் குரல்
அகராதிச் செய்தி
தில்லையாடித் திருவிழா
திருவாளர் பொன்மொழியார்
பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள்
கேளுங்கள் கொடுக்கப்படும்
வறட்சியைத் தாங்கும் புதிய வரகு
உலகப் பெருங்காடுகள்
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்

## விடுதலை நாள் விழா

வானொலிப் பேச்சு

**அரசுத்துறை ஒப்பந்தங்கள் (டெண்டர்),**
**வேலை வாய்ப்பு விளம்பரங்கள்**

பக்கம் 29—52

# அறியாமை இருள் அகன்றிட உழைப்போம்!

ஆகஸ்ட் 15! ஆனந்த சுதந்திரம் அடைந்த இந்த நாளில் கொண்டிடும் மகிழ்ச்சியை, இந்த ஆண்டு, நான் இரண்டு நாட்களுக்கு முன்பே பெற்றுத் திளைத்திட்டேன்.

ஆம்; ஆகஸ்ட் 13-ஆம் நாள் தஞ்சைத் தரணியெங்கும் ஆரவாரம்! எழுச்சி முரசம்! உணர்ச்சிப் புதுவெள்ளம்! கரிகால் பெருவளத்தான் ஆண்டிருந்த கவின்மிகு சோழப் பேரரசின் ஒரு பெருந் தலைநகராம் காவிரிப்பூம்பட்டினத்தைச் சூழ்ந்துள்ள எழில்நிறை சிற்றூர்களில் ஒன்றுதான் தில்லையாடி! அந்தத் தில்லையாடி தியாகிகளின் திருத்தலம்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகளின் காலடிகள் முதன் முதலாகப் பதிந்த வீரம் செறிந்த தமிழ் மறவர் கிராமம். அங்கேதான் நேற்று முன் தினம் நெஞ்சையள்ளும் திருவிழா.

தஞ்சைக்கேயுரிய கலைக் கோலத்துடன் நடைபெற்ற பெருவிழா. தரையினில் உதிர்ந்தனவோ வானத்துத் தாரகைகள் என வியப்புறும் வண்ணம் ஒளியுமிழ் மின்விளக்குப் பந்தல்! வீதியெல்லாம் தோரணங்கள்! செந்தேனை மிஞ்சிடும் சுவை படைத்த செந்தமிழ்ச் சொற்கோவைகள் தாங்கிய பதாகைகள்! தேர் காணவும் தெப்பம் காணவும் திரண்டிடும் மக்கள் கூட்டம் அன்றைக்குத் தில்லையாடி ஊர் காணப் பொங்கி வழிந்தது.

புத்தாடைச் சிறுர்கள்-புன்னகை மாதர்கள்-புலிநிகர் தமிழர்கள்-அணிவகுத்த மாட்சி, கண்கொள்ளாக் காட்சி! இந்திய விடுதலைக்கு அறப்போர்க்கொடியேந்திய அண்ணல் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய நிறவெறி எதிர்ப்புப் போரில் அவருக்குத் தோள் கொடுத்துத் துணை நின்று, தேள் கொடுக்கெனும் அடக்குமுறையால் உயிர் நீத்த தியாகச் சுடர்களின் பிறப்பிடமே தில்லையாடியாகும்! பத்தினிப் பெண் கண்ணகி வழிவந்த பதினாறுட்டைப் பிராயத்தினள் வள்ளியம்மையும்-நாகப்பன்-நாராயணசாமி எனும் தமிழ்க்குல மறவர்களும் உரிமைக்குக் குரல் கொடுத்து அதற்குத் தம் உயிரையே விலையாகக் கொடுத்த கதையை, வேதனை நெஞ்சைப் பிளக்கக் காந்தியடிகளே எழுதிக் காட்டியுள்ளார்.

அந்த வீரர்கட்கும், வீராங்கனைக்கும் நன்றிக் கடனாற்றிடத் தமிழக அரசு விரும்பியது. 1969-ஆம் ஆண்டு இறுதியில் அதற்காக அடிக்கல் நாட்டு விழா! இந்த ஆண்டு தில்லையாடி, வள்ளியம்மை நகர் என்னும் பெயர் பூண்டது.

ஐம்பத்தாறு ஆண்டுகட்கு முன்பு தில்லையாடிக்கு வந்த காந்தியடிகள் அங்கே எந்த அரிசன மக்களைக் கண்டு மனம் வருந்தினரோ, அந்த அரிசன மக்களுக்கு 150-க்கு மேற்பட்ட வீடுகள், நாகப்பன் நகர் என்ற பெயரால் இன்று திறக்கப்பட்டுள்ளன. காந்தியடிகள் அமர்ந்து பேசிய இடத்தில் கமல மலர் குவிந்ததுபோல் கல்தூண் ஒன்று எழுந்து நிற்கும் கம்பீரந்தான் என்னே!

தென்னாப்பிரிக்காப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு பற்றி விளக்கிடும் உயிர் ஓவியங்கள் கொண்ட வள்ளியம்மை மண்டபம்! அதன் வாயிற்புறத்தே அந்தக் கொழுந்துப் பெண்ணின் கோலமிகு சிலை! அவள் பெயரால் உயர்நிலைப் பள்ளி! தியாகச் சுடர்களின் திருநாமம் தாங்கிய மருத்துவ மனை! மாணவர் விடுதி! இன்னபிற எழுச்சி நிறை சின்னங்கள்! எனது மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி!

நெஞ்சில் பதிந்திருக்க வேண்டியவர்களின் நிரந்தரத் தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் அழிந்துவிடாமல் அரசின் சார்பில் அவற்றைக் காப்பாற்றிவிட்டோமே என்கிற ஆறுதல்! இந்த ஆண்டு விடுதலை தினத்தில் எந்த ஆண்டுமில்லாத மன நிறைவு; தில்லையாடியின் புது வடிவத்தின் காரணமாகப் பெறுகிறேனெனினும் வந்து முட்டி மோதும் பிரச்சினைகள் பலவற்றை நாடு சந்திக்கவும் சமாளிக்கவும் வேண்டியிருக்கிறதே என்கிற பெருமூச்சு, நாட்டு நலனின்பால் அக்கறை கொண்ட அனைவர்க்கும் ஏற்பட்டே தீரும்!

கிழக்கு வங்கத்துப் பிரச்சினையில் இந்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்களின் வலுவான ஆதரவு என்றைக்கும் உண்டு. அந்நியப் பகைவர்களால் ஏற்படும் இடையூறுகளைத் தகர்த்தெறியக் கிளர்ந்தெழும்போது, உள்ளுக்குள் கலாம் விளைத்து அமைதியை உருக்குலைத்துத் தடைக்கற்களாய் நிற்கின்றோர் எட்டப்பர், மீர்ஜாபர் வரிசையிலே இடம் பெறுவர். எந்த வகையில் வன்முறைக்கு அவர்கள் வித்திட்டாலும் அதனைத் தொடக்கத்தில் தூக்கி எறிவதே அரசியல் தூய்மை



# இல்லாமைக் கொடுமை தொலைந்திட உழைப்போம்!

யாளர்களின் பணியாக இருந்திடல் வேண்டும். தன்னைத் தானே அர்ப்பணிக்கும் உள்ளமின்றி, 'தலைகள் சில கொய்யப்படுவதால் தழைத்திடும் வளங்கள் தரித்திர நாராயணர்க்கு' என்று கூறு வோன் அமைதியின் பகைவன்! சமுதாயத்தின் புல்லுருவி! வன்முறையின் வார்ப்படம்! அவனைச் சட்டம் கண்காணித்துக் கண்டிக்கிறதெனினும் சமு தாயமும் அவன் விஷயத்தில் எச்சரிக்கையாயிருந்து, பெற்ற சுதந்திரத்தைப் போற்றி வளர்த்திட வேண் டும். வன்முறையாளர்களுக்கு வாயிற்கதவு எங்கே திறக்கப்படுகின்றது ? அதனையும் அறிந்திடல் நலமன்றோ ?

எங்கே இல்லாமை நெளிகிறதோ-எங்கே சிலர் வாழப் பலர் வதைப்படுகிற நிலை இருக்கிறதோ-எங்கே உழைப்பவன் உருக்குலைந்து, உயர்ந்தவன் மேலும் உயர்ந்து கொண்டே போகின்றானோ-எங்கே வறுமையின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக் கிறதோ-அங்கெல்லாம் நெருப்புக்கேற்ற பஞ்சு மெத்தை போல், வன்முறையாளர்க்கேற்ற வாய்ப் புக்கள் உருவாகின்றன. அந்த வாய்ப்புக்களைத் தான் இல்லாது ஒழிக்க வேண்டும். அதற்குப் படிப் படியாக-பரவலான திட்டங்களைத் தீட்டிக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

இருண்டு கிடக்கும் கிராமங்கள் ஒளிபெறத் தீவிரத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

குடி தண்ணீர்த் தட்டுப்பாடு நீக்கக் குடிநீர் வாரி யத்தின் முயற்சிகள்!

குடிசைப் பிரச்சினை தீரப், பலகோடி ரூபாயில் குடிசைமாற்று வாரியத்தின் அதிவேகப் பணிகள்!

செல்வம் சிலரிடத்திலே மட்டும் குவியக்கூடாது என்ற சமதர்ம அடிப்படையில் நிலத்திற்கு உச்ச வரம்பு-அந்த உச்ச வரம்பிற்கு அளிக்கப்பட்ட விதி விலக்குகள் ரத்து.

பேருந்துகள் உச்ச வரம்பு-பெரிய பேருந்து நிறுவ னங்கள் நாட்டுடைமையாக ஆக்கப்படும் திட்டம்!

**நிரந்தர தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் நெஞ்சில் பதியட்டும்**

நிலமற்ற-மனையற்ற எளியோர்க்குப் பட்டா வழங் கிடும் பாங்கு! விவசாயத் தொழிலாளர்கள் குடி யிருப்புக்களை அவர்களுக்குச் சொந்தமாக்கும் புரட் சிச் சாதனை!

பின்தங்கியோர் அரிசனங்கள், நலங்காக்கப் புதிய புதிய ஏற்பாடுகள்!

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கான ஆக்க வேலை கள்!

பட்டதாரி மாணவர்களுக்கான 'இளைஞர் அணி" வேலை வாய்ப்பு!

பள்ளி இறுதி வகுப்புத் தேறியோர்க்குக் காவல் துறையில் புதிய பதவி!

தொழில் நுணுக்கப் படிப்பில் தேர்வு பெற்றோர் சிறு தொழில் துவங்கிட அரசின் கடன் உதவி!

ஆசிரியர்கள், பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு!

கிராமப் பகுதிகளில் முப்பதாயிரம் பேருக்கு வேலைத் திட்டம்!

சமதர்ம சமுதாயம் காணுகின்ற இலட்சியத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதற்கு மேற் கூறிய சிரிய திட்டங்கள் ஏற்றமிகு சான்று களன்றோ?

புதிய வளங்கள் நாட்டில் அமைந்திடப் பாடுபடும் அதே, நேரத்தில் இருக்கின்ற வளங்கள் பறிபோய் விடாமல் பாதுகாப்பதும் நமது தலையாய கட னாகும். அதற்காகவே காவிரித் தண்ணீரில் நமக்குள்ள உரிமையைப் பெற நியாயம் கேட்டு நிற்கிறோம். கட்சிச் சார்பற்ற முறையில் தமிழர்கள் நல்ல காரியங்களுக்கு ஒன்று திரளுவார்கள் என்ப தற்கு இஃதோர் இணையற்ற சான்றென்பேன்.

தேசிய உணர்ச்சியில், தேசிய விழாக்களில், தேசிய முயற்சிகளில்-கட்சி வேறுபாடுகள் தேவை இல்லை. அத்தகைய முறையில் இந்த ஒரு நாளில் நாம் தனித்து நிற்காமல் ஓரணியில் நின் றிட வேண்டும். அதற்கெனவே 1969 முதல் சென்னை கோட்டை கொத்தளத்துக் கொடி மரத் துக்கடியில் அனைத்துக் கட்சியினரும் கூடி விடுதலை நாள் கொண்டாடும் ஏற்பாடு தொடங்கிற்று.

இந்த ஆண்டு எவ்வளவோ மனவேதனைகளுக் கிடையே, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மது விலக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழு மைக்கும் இந்தக் கொள்கை, மத்திய அரசு அளவில் அதிகாரப் பூர்வமாக நிறைவேற்றப்பட்டாக வேண்டும். இல்லையேல், சுற்றிலுமுள்ள சூழலில் மதுவிலக்கை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியே நமக்கு இல்லாமற் போய்விட்டது. மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட போதிலும், மதுவினால் விளை யும் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லல் இன்றியமையாததாகும். மதுக்கடைகளையும் அனு மதித்துவிட்டு மதுவிலக்குப் பிரச்சாரமா எனக்

# வன்முறைக்கு வித்திடுவோரைத் தூக்கி எறிவோம்!

கேட்கத் தோன்றும். நூற்பாலைகளையும் நெசவாலைகளையும் அனுமதித்துவிட்டுத்தான்—கதர் கட்டுவதிலும், கைத்தறி கட்டுவதிலுமுள்ள சிறப்புக்களைப் போதித்து வருகிறோம்! புலால் உணவுக் கடைகளை அனுமதித்துள்ள நாட்டில் தான் புத்தர், வள்ளுவர் வழி நின்று 'புலால் மறுத்தல்'' நன்மையென்று கூறி வருகிறோம்.

ஆனால், அதனினும் ஒரு படி மேலே போய், இந்திய மாநிலங்கள் அனைத்திலும் மதுவிலக்கைச் சட்டம் செய்யும் பொறுப்பை மதிப்பு வாய்ந்த மத்திய அரசு ஏற்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். மதுவிலக்கு ஒத்திப் போடப்பட்டாலும், மதுவருந்துவோர் சேட்டைகளில் ஈடுபடின், ஒழுக்கம் குலையக் காரணமாக இருந்திடின், சட்டம் மீறப்படின், அவர்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாவர் என்பதையும் அறிவித்தல் என்னுடைய பொறுப்பாகும்.

மதுவிலக்கினால் மட்டுமல்ல, மக்கள் நலம் பாதுகாக்கப்படும் எல்லாத் துறைகளிலும் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பேண இந்த நல்ல நாளில் உறுதி பூணுவோம்.

பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்.
உற்றார்-சுற்றம்; ஒருவர்-இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆகுமோ?
கற்றார்-கல்லார்-கழனியில் உழல்வோர்
சிற்றாள்-கொல்லர்-சிறு தொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
திதறு வாழ்வில் திளைத்தலே....சுதந்திரம்—

இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை மாய்ந்து விலக
சங்கத் தமிழில் ஒலிப்போம் இன்று !

அறியாமை இருள் அகன்றிட உழைப்போம் !
இல்லாமைக் கொடுமை தொலைந்திட உழைப்போம்!
பொறாமைச் சாத்தான் புதைந்திட உழைப்போம்!
புத்தொளி கண்டிட உழைப்போம்-
தாயின் மணிக் கொடி
பட்டொளி, பாரில் பரவிட உழைப்போம்.

வணக்கம்.

(15-8-1971 அன்று, தமிழக முதல்வர் வானொலியில் ஆற்றிய விடுதலை நாள் உரை).

## வெண்பாப் போட்டி

17. ஈற்றடி: வன்முறையை வேரறுப்போம் வா !

முடிவுத் தேதி 15—9—1971

18. ஈற்றடி: நாட்டுக் கென்செய்தோம் நவில்.

முடிவுத் தேதி 20—9—1971

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

குறிப்பு :—

ஒவ்வொரு ஈற்றடிக்கும் உரிய வெண்பாவைத் தனித் தனியாக எழுதி அனுப்ப வேண்டும் ; இரண்டையும் ஒன்றாக எழுதி அனுப்பக் கூடாது ! அஞ்சலட்டையில் எழுதினால் போதுமானது.

# கோட்டை கொத்தளத்தில் கொடிமரத்தடியில்...



24 ஆண்டுகளுக்கு முன்னே ஆகஸ்ட் 15-ம் தேதியன்று அனைத்திந்தியாவிற்கும் ஆங்கிலேயனுக்கும் இருந்த ''கணக்குத் தீர்க்கப்பட்டது''. ஆண்டுகள் 24 ஓடி விட்டன. ஆனல், இன்னல்கள் ஓடவில்லை. இடுக்கண்கள் ஓடவில்லை. இல்லாமை ஓடவில்லை, கல்லாமை ஓடவில்லை, வறுமை ஓடவில்லை, வாட்டம் ஓடவில்லை. நாட்டு மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழியவில்லை. மக்களைத் தரம் பிரித்துப் பேசுகின்ற சாதித்திமிர் ஒழியவில்லை. இதற்கெல்லாம் காரணம் ஆண்டு தோறும்வருகின்ற ஆகஸ்ட் 15-ம் நாளிலே நாட்டுமக்கள் 'கணக்குப் பார்க்கவில்லை'. அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு அந்தக் 'கணக்குப்பார்க்கும்' நற்பணியை நாட்டு மக்களுக்குக் கூறவில்லை. அந்தக் குறையை நீக்கத்தான் தமிழ்நாடு அரசு—டாக்டர் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு—'விடுதலை நாள்' விழாவினை அனைத்துக் கட்சிக்கும் சொந்தமாக்கி-உரிமையாக்கி—அவர்கள் அனைவரும் ஒன்றுகூடிக்''கணக்குப் பார்க்கும்'' வழக்கத்தையும், விட்ட கணக்கினை விரைந்து முடிக்கச் சபதம் எடுக்கச் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது-கொடுத்து வருகின்றது.

கணக்குப் பார்க்கும் மாபெரும் விழா—மக்கள் விழா—விடுதலை நாள் விழா இந்த ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் தமிழக முதல்வரின் தலைமையில், கோட்டை கொத்தளத்தில் கொடிமரத்தடியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

மாலைநேரம்! மனம் குளிரும் இளந் தென்றல் வீச்சு! எங்கும் மின்ஒளி—தமிழ்நாடுஅரசின் தலைமைச் செயலகம் ஒளி சிந்தும் நிலவெனக் காட்சி தந்தது. அதன் அருகே ஒப்பற்ற தாரகைகள் போல் 'தாயின் மணிக்கொடி'யை தாங்கி நிற்கும் கொடி மரத்தின் அடிவரை மின் விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அழகு ஒழுகும் இந்தப் பின்னணியிலே அமைக்கப்பட்ட மேடையின் முன்னே—தமிழ்நாடு அரசின் தனிமுயற்சியால் உருவாக்கப்பட்ட பூஞ்சோலையொத்த புல் தரையிலே மக்கள் கூடியிருந்தனர். மேடையின் வடக்கே வழி எங்கும் ஒளி சிதற—வடகோடியிலே, மின் விளக்கால் எழில் பெருக்கிய, துறைமுக அலுவலகம் வரை, தெற்கே தேம்ஸ் நதியை விஞ்சும் வகையில் மாறி வரும் கூவம் நதி கடலோடு இணையும் இடம் வரை, 'ஒளி விளக்கே நீ பாய்கின்ற இடமெல்லாம் நாம் இருப்போம்' என்று போட்டியிட்டுக் கொண்டு மக்கள் குழுமி இருந்தனர்.

விழாவிற்கான நேரம் நெருங்கியது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் பெரும்பாடல்—தமிழ்நாடு அரசு வடித்துத் தந்த வண்டமிழ்'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடப்பட்டது. பாட்டின் இனிமையிலே மக்கள் செயல் மறந்து வீற்றிருந்தனர்.

டாக்டர் கலைஞரின் வானொலிப் பேச்சு ஒலிபரப்பப்பட்டது. செயல்மறந்து வீற்றிருந்த மக்கள் கூட்டம் கலைஞரின் செந்தமிழ் ஒலி கேட்டுப் புல்லரித்துப் போயினர்-புளகாங்கிதம் அடைந்தனர்.

வரையறுக்கப்பட்ட வானொலி உரை முடிந்தது! கலைஞர் தித்திக்கும் தீந் தமிழிலே தலைமை உரையை ஆரம்பித்தார்!

''விடுதலைக்கென அனைத்துக் கட்சியினரும் அரும்பாடுபட்டனர் அன்று! எனவே விடுதலை நாள் விழா அனைத்துக் கட்சிக்கும் சொந்தமுடையது. ஆகவேதான் அனைத்துக் கட்சியினரும் இவ் விழாவில் பங்கு பெறத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சி எடுத்துக் கொண்டது''—என்றார்.

அடுத்து அனைத்துக் கட்சியின் தலைவர்கள் பேசினர்.

முதலில் பேசிய பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியைச்சேர்ந்த திரு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள், "அண்மையில் அரசு நிறைவேற்றிய நிலச் சீர்த்திருத்தச் சட்டம்" வரவேற்கத்தக்கது. பொருளாதார வளர்ச்சிக்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அதே நேரத்தில் அமைதியான வழியில் இந்த அரசு பாடுபடும் என்றும் நம்புகிறேன்''—என்றார்.

அடுத்து, சுதந்திராக் கட்சியின் சார்பில் பேசிய திரு ஜி. சுவாமிநாதன், '' அடுத்த ஆண்டு நாம் சுதந்திர தினத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறோம். ஆனல் சுதந்திர தினத்தின் பெருமை தெரியாத இளைய சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு விடுதலை வீரர்களின் வீர சரித்திரம் சொல்லப்படவேண்டும். அப்போதுதான் சுதந்திரத்தின் பெருமை தெரியும்'' —என்றார்.

அடுத்துப்பேசிய திரு ராஜாராம் நாயுடு (சாதிக் அலி காங்கிரஸ்) ''அனைத்துக் கட்சித் தலைவர்களை ஒரே மேடையில் சந்திக்கவைத்து ஒருவரைஒருவர் புரிந்துகொள்ளச் செய்யும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளன. சுதந்தரம் கிடைத்து 24 வருடங்கள் கழிந்து விட்டன. நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு அளவற்ற சாதனைகளைப் புரிந்த பின்னும் பிரச்சினைகள் தீரவில்லை.



வீடற்றோர், வேலையற்றோர் வளர்ந்து கொண்டிருக்கின்றனர். அதற்குக் காரணம் ஜனத்தொகை வளர்ச்சிதான். எனவே அரசாங்கம் மட்டுமே எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடியாது. நம்நாடு குடியரசு நாடு. ஒவ்வொருவருக்கும் பொறுப்புள்ளது; எனவே மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்"—என்றார்.

அதன் பின், முஸ்லிம் லீக்கைச் சார்ந்த திரு திருப்பூர் முகைதீன், நான் சமயத்தால் முஸ்லிம், மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், பிறப்பால் இந்தியன்; எனவே இரண்டாகப் பிரிந்த இந்தியாவில் வேலி போட்டு வேறு படுத்திய பிறகு வேலியைத் தாண்டி வருபவன் என் சகோதரனாக இருந்தாலும் அவன் மீது உங்கள் அடி விழு முன்னே என் அடி விழும்" என்று கூறினார்.

திருப்பூர் முகைதீனுக்குப் பின், தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த திரு தி. க. சண்முகம், நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தேச பக்தர்களுக்கு ஆழ்ந்த நன்றி உணர்வோடு தன் கட்சிச்சார்பில் தலை வணங்குவதாகக் கூறியதுடன் அமைதி வழியில் தமிழ் மாநிலம் அமைந்த பெருமையையும், அமைதிவழியில் நற்செயல்களைப் புரிந்து வரும் தமிழ்நாடு அரசினைப் பாராட்டியும், குறிப்பாக, தமிழ் மொழியின் ஏற்றத்திற்கு ஆற்றும் பணிகளைப் பாராட்டியும் உரையை முடித்தார்.

பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர். பெருமாள் அவர்கள் அடுத்துப்பேசினார்.

"ஆட்சியில் இருப்பவர்கள் மற்றவர்களது வரலாற்றை மறைப்பார்கள். ஆனால் தமிழகத்தில் அனைத்துக் கட்சிக்கும் மரியாதை அளிக்கும் அரசு இந்த அரசு! ஆகவே அதன் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலைவெளியிட்டு அதில் விடுதலைப்போரில் ஈடுபட்ட தமிழகத்துத் தியாகச் சீலர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து எழுத வேண்டும். ஏனெனில் மத்திய அரசுதயாரித்த நூலில் தமிழகத்து வீரர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும்" என்று கூறி முடித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு மணலி கந்தசாமி அவர்கள்,

'தமிழ் நாடு இன்று உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுள்ளது. எண்பத்தி ஏழு கோடிக்கு மேல் கல்விக்காகச் செலவழிக்கும் அளவிற்கு முன்னேற்றம் பெற்றுள்ளது. கலைஞர் ஆட்சியில்தான் இந்தச் சாதனைகள் ஏற்பட்டுள்ளன. கலைஞர் இன்று சமுதாயத் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். அண்மையில் நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டம் 75 சதவீதக் குடிமக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்காகக் கலைஞரைப் பாராட்ட வேண்டும்.

"பாரதியார் கண்ட கனவை, பாரதிதாசன் கண்ட கனவை, விடுதலை வீரர்கள் கண்ட கனவை இன்று கலைஞர் நிறைவேற்றி வருகிறார். எனவே கலைஞரின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும்"—என்றார்.

அடுத்துப் பேசிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், "ஒரு நாட்டில் விடுதலை பெற்ற திருநாள் ஒப்பற்ற திருநாள். அந்த விடுதலை நாள் அன்று அனைத்துக் கட்சியினர் தங்கள் மணிக்கொடியின் கீழ், நாட்டு ஒற்றுமைக்கு அணி வகுத்து நிற்க, இந்த அரசு—கலைஞர் அவர்களின் அரசு ஏற்பாடு செய்துள்ளது. அதற்காக நெஞ்சு













நிறைந்த பாராட்டுகள்! நான்கு பேர் கூடினுல் தலைமை பறி போகுமே என்ற அச்சம் அனைத்துக் கட்சியினரைக் கூட்ட மறுக்கும். அதற்கு அஞ்சாத கலைஞரைப் பாராட்ட வேண்டும்.

இசைக் கச்சேரியில் பக்க வாத்தியம் பங்கு கொண்டாலும், நாயனக் கச்சேரியில் ஒத்து ஊதினுலும், ராகமும் சுருதியும் மாறுவதில்லை. அதைப்போல் அனைத்துக் கட்சியினர் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்''—என்ருர்.

அடுத்து, தி.மு. கழகத்தின் சார்பில் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 'சமுதாயத்தில்கீழே உள்ள ஏழைகளிடம் வசதிகள் வந்து சேர வேண்டும். அல்லது ஏழைகளை அந்த இடத்திற்குத் தூக்கி விட வேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும். அதனை இந்த அரசு செய்கிறது. நாட்டில் அனைவருக்கும், ஒழுகாத வீடு, கிழியாத வேட்டி, சூடான சோறு கிடைக்க வேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. நிலக்கரியும் இரும்பும் இல்லாத ஜப்பான் அனைத்து நாடுகளுடன் போட்டியிட்டுச் சிறந்து விளங்குகிறது. நம் நாட்டில் எல்லாம் இருக்கிறது. நம் நாட்டில் முக்கடல் இருக்கிறது. அதிலே முத்து இருக்கிறது. நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது. அந்நியச் செலாவணி ஈட்டும் மிளகு, ஏலம் இருக்கிறது. மீன் இருக்கிறது. ஏற்றுமதிக்கு ஏற்ற 'எரா' இருக்கிறது. சுவை மிகுந்த மாம்பழம் இருக்கிறது. அத்துடன் தேனில் நனைத்த பலா இருக்கிறது. உரித்தவுடன் சாப்பிடக் கூடிய வாழையும் நம் நாட்டில் இருக்கிறது. இவ்வளவு இருந்தும் வறுமையில் வாடுகிருேம். இல்லாமை இருக்கிறது. இதற்குக் காரணம் அறியாமை—அறியாமைக்குக் காரணம் கல்லாமை. கல்லாமை விரைந்து நீங்க—எதிர்காலத்தில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட 'விடுதலை நாள் விழாவில்' சபதம் ஏற்க வேண்டும்.

''மக்கள்—வளம்—அறிவு மூன்றும் நம் நாட்டில் உள்ளன. இம்மூன்றும் இணைந்தால் முன்னேற்றம் காண முடியும். எனவே அரசு எடுக்கும் சீரிய முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

கடைசியாக டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதின் ஒரு பகுதி :







'' இங்கு பேசிய அனைவரும் ஒரே சுருதியில் தமிழ் உணர்வும், இன உணர்வும் கொண்டு இப்படிப்பட்ட தேசிய நிகழ்ச்சிகளில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒரு நிலையில் நின்று, ஒருமித்த கருத்தோடு இயங்க வேண்டுமெனத் தெளிவு படுத்தினார்கள்.

இவ்விழாவினை — இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றினை நாம் உருவாக்கியுள்ளோம்.

சுதந்திர நாளைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள், வெள்ளையனை வெளியேற்றிக் கணக்குத் தீர்த்த நாள். அதன் பிறகு வரும் சுதந்திர தினமெல்லாம் கணக்குப் பார்க்கும் நாள்.

வெள்ளையனை வெளியேற்றி 1947-ல் கணக்குத் தீர்க்கப்பட்டது. பிறகுஒவ்வொருசுதந்திரதின விழாவின்போதும்சுதந்திரத்தைக் காக்க என்னசெய்யப்போகிறோம். சுதந்திரத்திற்குப் பிறகு மக்களுக்கு என்னென்ன செய்யப் போகிறோம், என்று கூறி மக்களை ஒன்று சேர்த்தோம். இன்றைய தினம்சுதந்திரத்திற்காகத் தங்கள் ஆவியை இழந்தவர்கள்—சொத்து சுகத்தை இழந்தவர்கள்—எதை எண்ணி அந்தத் தியாகத்தைச் செய்தார்களோ அவைகளை நிறைவேற்றி விட்டோமா, என்ற கேள்விகளை மக்கள் கேட்கிறார்கள்.

ஆட்சியில் உள்ளவர்கள் மக்களுக்கு என்ன செய்தார்கள், என்ற 'கணக்கினை'க் கேட்கிறார்கள். அந்தக் கணக்கினை மத்திய அரசும், இந்த அரசும் காட்ட வேண்டும். எனவேதான் இன்றைய தினம் நான் வானொலியில் பேசும் போது—தமிழக அரசில் நாங்கள் பொறுப்பேற்றபிறகு என்னென்ன செய்தோம் என்ற கணக்கினைப் பட்டியல் போட்டுக்காட்டினேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரு நாளாவது ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளாமல் ஒரு மேடையில் சந்திப்போம் என்றுதான் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் பேசும் போது சுதந்திர தின விழாவைக் கொண்டாட எல்லாக் கட்சிக்கும் உரிமை உள்ளது, அதனை நிலைநிறுத்திய தமிழக அரசுக்குப் பாராட்டு என்று கூறினார்.

ஒவ்வொரு கட்சிக்கும் தியாக வரலாறு இருக்கிறது. கட்சித் தலைவர்களுக்குத் தியாகமுத்திரை இருக்கிறது. ஒரு கட்சியையும் சாராத—ஆனால் ஆண்டவன் கட்சியைச் சார்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப் பட்டுத் தண்டனையைப் பெற்றவர்; போராட்ட வரலாறு பெற்றவர்!

தேசியக் கொடியைக் கையிலேந்திச் சிறைசென்ற மணலி கந்தசாமி, சுதந்திரம் அடைந்த பின் எவ்வளவு கொடுமைகளை அடைந்தார் என்பதை நானறிவேன்.

சுதந்திரம் பெற்ற பிறகு சென்னைக் கடற் கரையில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கூட்டம். அப்போது மணலி கந்தசாமி தலைமறைவாக இருக்கிறார். காவல்துறையினர் அவரைக் கைது செய்யக் காத்திருக்கின்றனர்.

திடீரென்று இப்போது 'மணலி கந்தசாமி பேசுவார்' என்று அறிவித்தார்கள். மக்களும் காவல் துறையினரும் திகைத்தார்கள். மணலி கந்தசாமி பேசிவிட்டு மேடையை விட்டு இறங்கினார். சற்று நேரத்திற்கெல்லாம் காணவில்லை.

இப்படிப் பல கட்சிக்கும் வீர வரலாறு உண்டு. தி.மு.க.வுக்கும் வீர வரலாறு உண்டு.

வைக்கம் வீரராக—மகாத்மா காந்திக்கு உற்ற நண்பராக—தமிழகத்தின் விடுதலைப் போராட்டத்தின் தானைத் தலைவராக இருந்த தந்தை பெரியார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர்.

ஆகவேதான் இந்த விழாவில் எல்லாக் கட்சிக்கும் பங்குண்டு.

அடிகளார் பேசும்போது, இந்த விழா வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி கொண்டாடப்பட வேண்டுமெனக் கூறினார். ஒரு கட்சிக்கே உரிய விழா என்ற நிலையை மாற்றிவிட்டால் இந்த நிலைமை உருவாகிவிடும்.

இத்தாலிக்கு நான் சென்றிருந்த போது ரோமாபுரியின் விடுதலை நாள் விழாவைக் கண்டு களிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அங்கே இரவெல்லாம் விடுதலையைக் கொண்டாடுகிறார்கள். ஆடம்பரமாக—விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். அவை எல்லாம் என் கண் எதிரே தோன்றுகின்றன.

அப்படிப்பட்ட பெரிய தேசிய விழாவாக இந்த விழா கொண்டாடப்படவேண்டும்.

இந்த விழாவில் பங்கு கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மக்களுக்கும் நன்றி! வணக்கம்.''

**கலைஞரின் செந்தமிழ்ப் பேச்சு முடிவடைந்தது. நாட்டுப் பண் இசைத்தவுடன் விழா முடிவடைந்தது.**

**கணக்கைப் பார்த்த களிப்பில் மக்கள் கலைந்து சென்றனர்.**

---

### ஒரு சொல் கேளீர் !

எண்ணற்ற அன்பர்கள் 'தமிழரசு' இதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் அனுப்பி வருகிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தைப் போற்றும் அதே நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

எழுத்தாளர்கள் தங்கள் ஊரைப் பற்றி, வட்டாரத்தைப் பற்றி, மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தெரியாத சிறப்புகளை, பெருமைகளை செழுந் தமிழில், ஆதாரத்தோடு எழுதினால் அதிகம் பயன்படும்.

சொன்னதையே, வேறு சொற்களில் திரும்பச் சொல்லுவதைத் தமிழ்ப் பெருமக்கள் ரசிப்பதில்லை. மக்களின் அறிவுப் பசிக்கேற்ற அரிய எழுத்துரைகளை வேண்டுகிறோம்; வரவேற்கிறோம்.

ஆசிரியர்,
''தமிழரசு''

# கதர்ப்பட்டு

விற்பனை

**10** சதவிகிதம்

தள்ளுபடி
கொடுக்கப்படும்



உங்கள் தேவைக்கு

## கதர் கிராமத்தொழில்

விற்பனை
நிலையங்களுக்கு

## வருகை தாருங்கள்!



# தடையுடைத்து வா வா!

புன்செயை நன்செய் தன்னைப்
        பொன்கொழித் திடவே செய்யும்
பொன்னியே! வான்பொய்த் தாலும்
        பொய்யாமல் வளஞ்சு ரக்கும்
கன்னியே ! காவி ரிக்கும்
        காவிரித் தாயே ! தூய
அன்பினுல் எமைப்பு ரக்கும்
        ஆருயிர் அன்ணுய் வாழி !

கொழித்திடும் தேன்ம ணக்கும்
        குடகினில் பிறந்தே அத்தேன்
அளித்திடும் சுவையை மிஞ்சும்
        அருந்தமிழ் கொழிக்கும் மண்ணைச்
செழித்திடச் செய்தாய்! பச்சைப்
        புரட்சியை அந்நாள் செய்தாய் !
வழுத்திடும் அன்பால் எங்கள்
        மனத்தினைக் குளிர்வித் தாயே !

பொன்னியின் செல்வன் எங்கள்
        புகழ்மிகு சோழன் உன்றன்
அன்பினில் திளைத்தான் ; நீயும்
        அமுதினைப் பொழிந்தே காத்தாய் !
என்றுநீ பிறந்தாய் ? எம்மை
        என்றுநீ அணைத்தாய் ? எவ்வண்
நன்றுறக் காத்தாய்? யாவும்
        நவில்வதும் எளிய தாமோ ?

அன்னைதன் மகவை அள்ளி
        அணைத்திடத் தடைவி திக்கும்
வன்மனக் காரர் போல,
        வளந்தரும் தாயே உன்றன்
அன்பினை மாய்க்க உன்பால்
        அணையெனும் தடைஎ ழுப்ப
முன்வரும் போக்கை எண்ணி
        முடிவிலாத் துயரம் பெற்ருேம்.

அன்னையே நீயின் ருகில்
        அருந்தமிழ் நாட்டில் உன்றன்
அன்பினுல் பசுமை யுற்ற
        அனைத்துமே பாலை யாகும் !
அன்பினைச் சுரக்கும் நல்ல
        அன்னைதன் மதலை வாட
என்றுமே விரும்பாள் ! ஆமாம் !
        எப்படிப் பொறுப்பாள் அம்மா !

அமிழ்தினைச் சுரக்கும் பொன்னி
        அன்னையே ! கறையு னக்குச்
சுமத்திட முனைவோர் தம்மின்
        சூழ்ச்சியைத் தூள்தூ ளாக்கிக்
கமழ்புகழ் சேர்க்க இந்நாள்
        கரிகாலன் இல்லை யேனும்
இமையென எம்மைக் காக்கும்
        ஈடிலாக் கலைஞர் உள்ளார்.

தமிழர்தம் உயிர்கள் யாவும்
        தங்குநல் உடல மாகித்
தமிழினம் துறைகள் தோறும்
        தகுமுயர் வெய்த நாளும்
அமைவுறு செயலை ஆய்ந்தே
        ஆற்றிடும் கலைஞர் எங்கள்
தமிழக முதல்வர் அன்ணர்
        தண்ணருள் மிக்க நல்லார் !

தண்ணளி யுடைய ரேனும்
        தமிழர்க்குத் தீமை என்ருல்
மண்சுடும் தணலாய் மாறும்
        மாவலி யுடையார் ; அன்ணர்
எண்ணிய முடிக்கும் வீரர் ;
        ஏற்காத ஒன்றை என்றும்
எண்ணிடார்; எங்கள் வாழ்வின்
        இதயமே இடமாக் கொண்டார் !

தலைமுறை பலவாய் நம்முள்
        தழைத்துமிக் கோங்கி நின்று
நிலவிடும் உறவை நீக்க
        நினைத்திடும் கொடுமை போக்கத்
தலைபறி போயிற் றேனும்
        தவிசினை உதறித் தள்ளும்
நிலையுறு மேனும் ஏற்கும்
        நெஞ்சுரம் யாமே கொண்டோம் !

அன்பினுக் கென்றும் உண்டோ
        அடைக்குந்தாழ் ? ஆத லாலே
பொன்னியே ! உன்பால் அன்பு
        பொதுளிய தமிழர் சீரை
நன்றிசைத் தோடி வா வா !
        நல்லிசை பாடி வா வா !
குன்றிடு தடைகள் யாவும்
        துகளுற நொறுக்கி வா ! வா !

கவிஞர் சாமிபழனியப்பன்



# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈசன் பம்புகள்




## ஈ·சன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

**5-7 செகண்ட் லைன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 2932**

# அண்ணா பண்ணை ஆற்றிடும் சேவை!



பேரறிஞர் அண்ணாவின் நினைவாக விளங்கும் '' அண்ணா பண்ணை' தரம் மிகுந்துள்ள பொறுக்கு விதைகளையும், வீரிய விதைகளையும் உற்பத்தி செய்து உழவர் பெரு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுடன், புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய பண்ணையான அண்ணா பண்ணையில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் பயனாகப் புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருமளவில் பெருக்க முடியும் என்பது தெளிவாகியுள்ளது.

புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்காக அண்ணா பண்ணையில் '' கலைஞர் கருணாநிதி அனுசரணை ஆராய்ச்சி நிலையம் '' (Kalaignar Karunanithi Adaptive Research Centre) அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்ணா பண்ணையில் நடத்தப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் பொதுவாகத் தமிழ் நாடெங்கும் உள்ள புன்செய் நில உழவர்களுக்குப் பயன் அளிப்பதாக உள்ளன என்பதை அண்ணா பண்ணையில் பணியாற்றும் மாவட்ட வேளாண்மை அலுவலர் திரு கே. பெருமாள் அவர்கள் அண்மையில் தனது வானொலி உரையில் தெளிவுபடுத்தியுள்ளார். உழவர் பெருமக்களின் நலன் கருதி அவரது உரையின் ஒரு பகுதியைக் கீழே கொடுத்துள்ளோம்.

### இலைகளின் மூலம் உரமளித்தல்

''பயிர்கள் வேரின் மூலம் தான் தமக்கு வேண்டிய தழைச்சத்தை எடுத்துக் கொள்வதில்லை. இலைகளின் மூலமாகவும் தழைச்சத்தை எடுத்துக் கொள்கின்றன. யூரியா போன்ற செயற்கை உரங்களைத் தண்ணீரில் கரைத்துப் பயிர்களுக்குத் தெளிக்கலாம். சமீபத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.ஏ.ஆர்.ஐ), கோடா என்ற ஊரில் 5,000 ஏக்கரில் விமானம் மூலம் யூரியாவைத் தெளித்ததன் பயனாக 35 முதல் 40 சதம் அதிகப் பருத்தி மகசூல் கிடைத்திருக்கிறது. அங்கு மாத்திரமல்லாது, இந்த அனுபவம் அண்ணா பண்ணையிலும் பொதுவாக இம்மாதிரி இலைகளின் மூலம் பயிருணவைக் குறிப்பாக, தழைச் சத்தைக் கொடுப்பதனால் மிகச் சிறந்த பலன் கிடைத்திருக்கிறது. இது மானாவாரிப் பயிருக்கும் இறைவைப்பயிருக்கும்ஏற்றதாக இருக்கிறது. 1 முதல் 2 சதம் சத்துள்ள யூரியா நீர்க்கரைசல் விசைத் தெளிப்பானால் இலைகளின் மேல் தெளிக்கப்படுகிறது. இதற்கு 1 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் சேர்ப்பதனால், 1 சத வீரியக் கரைசலும், 2 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் சேர்ப்பதனால் 2 சத வீரியக் கரைசலும் கிடைக்கும். ஆகவே, ஏக்கருக்கு ஒருமுறை 2 கிலோ யூரியாவை இலைகளின் மூலம் தெளிப்பதன் மூலம் பயிர் நல்ல வளர்ச்சி பெறுகிறது என்பதும் மேலுரமாகப் போடும் அளவை விட மிகக் குறைந்த அளவு போதுமானது, என்பதும் தெளிவாகிறது. இவ்வாறு நாம் இருமுறை அல்லது மூன்று முறைமருந்தை இலைகளில் தெளிப்பதன் மூலம் பயிரின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தி அதிகப்பலன் பெற முடியும். இது தவிர, பூச்சிக் கொல்லிகளையும், யூரியாக் கரைசலையும் பூச்சிகள் தோன்றும்போது சேர்த்துத் தெளிப்பதனால் செலவும் மிச்சமாவதோடு பூச்சியின் தொல்லை நீங்கி, வளரும் பயிர்களுக்கு வீரியம் ஊட்டும் 'டானிக்' போன்று அமையும். இம்மாதிரி யூரியாக் கரைசலை மழை பெய்து இளந்துளிர்கள் வரும்போது தெளிப்பதனால் இலைகள் விரிந்து பெரிதாக ஆவதுடன் செடிகள் வளர்ச்சியும் பெறும். இது வளரும் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் கொடுக்கும் ஊட்ட உணவைப் போன்றது.



இது தவிர, அண்ணா பண்ணையில் மணிச்சத்தும், தழைச்சத்தும் உள்ள டை—அம்மோனியம் பாஸ்பேட் அல்லது அம்மோனியம் பாஸ்பேட் போன்ற செயற்கை உரத்தையும் பாசிப் பயறுக்கு 1 சதம் வீரியத்தைத் தெளித்ததில் சுமார் 10 சதம் அதிக மகசூல் கண்டது. மேலும் இது பற்றிச் சோதனை செய்யப்படுகிறது. ஆகவே மானாவாரிப்பயிருக்குச் செயற்கை உரம் இடுவது நல்லது. அதிக மகசூல் கொடுக்கக் கூடியது. அது, சமயத்தையும், அனுசரிக்கும் முறையையும் பொறுத்தது.

### குறுகியகாலப் பயிர்கள் கொடுத்திடும் நல்ல மகசூல்

இனி, நிலத்திற்கேற்ற இலாபகரமான பயிர்களையும் பயிர் தினுசுகளையும் பார்க்கலாம். மானாவாரி நிலம் மழையை நம்பிய நிலம். ஆகவே குறுகிய வயதுடைய வறட்சியைத் தாங்கக்

கூடிய பயிர்த் தினுசுகளுக்குப் பதிலாக ஒன்றுக்கு மேற்பட்ட குறுகிய கால கலப்புப் பயிர்களைச் சாகுபடி செய்தல் அவசியம். இதில், பருத்தி, துவரை போன்ற ஆழமான வேர் கொண்ட பயிர்களுடன் குறுகிய காலப் பயறு வகைகளைப் பயிரிடலாம். வேளாண்மை ஆராய்ச்சிகளின் மூலமாகத் தற்பொழுது குறுகிய கால விதைகள் ஒவ்வொரு பயிருக்கும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இப் பகுதியில் 4 மாதமே வயதுள்ள கோ.1 துவரையைப் புஞ்சையில் பயிரிடலாம். மற்ற துவரைகளைவிட $1\frac{1}{2}$—2 மாதம் வயது குறைவு. இத்துடன் 105 நாட்கள் வயதுள்ள டி. எம். வி. 7, பொள்ளாச்சி போன்ற கொத்துக் கடலை வகைகளை ஊடு பயிர் செய்வதன் மூலம் மண்ணின் பல்வேறு தட்டிலுள்ள சத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகிறது. இதனால் பயிர்கள் ஒன்றுக்கொன்று தங்களுக்கு வேண்டிய உணவினை எடுப்பதில் போட்டியில்லாது வளர்ந்து அதிக மகசூல் தருகிறது. வருமானம் பெருகும்; விதைப்பதற்கு முன் பயறு வகை விதைகளுடன் நுண்ணகங்களைச் (பாக்டீரியா கல்சர்) சேர்த்துப் பின் நிழலில் உலர்த்தி விதைப்பது மிக்க நல்லது. ஏக்கருக்கு 20 கிலோ டை—அம்மோனியம் பாஸ்பேட்டுடன் 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஸ் கலந்து முன் சொன்னது போல் விதைகளுக்கு அடுத்த சாலிலோ, அதே சாலிலோ போடுவது நல்ல பலன் தரும். இந்நிலத்தைச் சுற்றி அருணா என்ற $3\frac{1}{2}$ மாத ஆமணக்கு விதையை ஊன்றி விடுவதனால் 50–75 கிலோ ஆமணக்கு கிடைக்கும்.



தமிழக முதல்வர் கலைஞரும் வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களும் அண்ணா பண்ணையைப் பார்வையிடும் காட்சி.

கோ. 1. துவரையைவிட இன்னும் சற்றுக் குறுகிய காலத் துவரையும் 65 நாட்களில் அறுவடைக்கு வரும் குறுவை உளுந்தும் திருச்சி மாவட்டம் ஆலங்குடிப் பகுதியில்பயிரிடப்பட்டுவருகின்றன. துவரை ஏறத்தாழ 100 நாட்களில் பலன் தரக் கூடியது. துவரை சற்றுப் பருமனில் குறைவாக இருப்பினும், இக்குறுகிய கால வித்து, தனியாக ஒதுக்கி எடுக்கப்பட்டுப் பயிரிடப்படுமானால் கடலையும் துவரையும் கலப்புப் பயிராக மானாவாரி நிலத்தில் பயிரிடப்பட்டு ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும். இப்பண்ணையில் இந்த அனுபவம் மேற்கொண்டும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதில் வெற்றி கிடைக்குமெனில் பயறு உற்பத்தியில் புதிய திருப்பம் ஏற்படும். மானாவாரி நிலங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

### காலம் தாழ்த்தி விதைத்தாலும் காணலாம் நல்ல மகசூல்!

'காலத்தே பயிர் செய்' 'ஆடி மாதம் தேடி விதை' என்பன பழமொழிகள். ஆடிப்பட்டத்தில் பருவமழைக் கோளாற்றினால் துவரையை விதைக்கா விட்டால் தக்க பலன் கிடைப்பதில்லை என்ற எண்ணம் விவசாயிகளிடையே இருந்து வருகிறது. இது உண்மையே. காலம் கடந்து விதைத்தாலும் நல்ல மகசூல் பெற வழியுண்டு. காலம் தாழ்த்தி விதைக்கும்போது ஏக்கருக்கு விதை அளவை அதிகப் படுத்திச் சற்று நெருக்கமாக விதைப்பின் காலத்தால் இழந்த மகசூலையும் பெறலாம். அதிகமான எண்ணிக்கை இருப்பதால் மகசூலை ஈடுசெய்ய முடியும். சென்ற ஆண்டு, புதுக்கோட்டைப் பகுதியில் மழை பிந்தி விட்டது. ஆகஸ்டு மத்தியில்தான் அண்ணா பண்ணையில் துவரை விதைக்க முடிந்தது. ஆனால் விதை அளவைச் சற்று அதிகரித்ததனால் ஏக்கருக்கு 175 கிலோ வரை மகசூல் கிடைத்தது.

கடலைக்குப் பதிலாகப் பாசிப் பயறு அல்லது தட்டைப்பயறு தினுசுகள் ஊடு பயிராக விதைக் கலாம். ''பைசாகி மூங்'' என் னும் பாசிப்பயறும், ''தோப சலி'' என்ற தட்டைப் பயறும 60—65 நாட்களில் 150 முதல் 175 கிலோ வரை மகசூல் தர வல்லது. தோபசலி என்னும் தட்டைப் பயற்றுக்கு5-லிருந்து 6 அங்குல மழை அளவு இருந் தாலே போதுமானது. இம்மா திரிப் புதுவகைக் குறுகிய காலப் பயறு வகைகள் தென் மேற்குப் பருவக் காற்றி னால் அனுகூல மடையும் மா வட்டங்களுக் குச் சிறந்தது. இவை தவிர ''காப்பர்கான்'' என்ற பாசிப் பயறு 45—50 நாட்களிலே அறுவடைக்கு வருவதுடன் 100—லிருந்து 150 கிலோ வரை மகசூலும், கொடுக் கிறது. இத் தகைய குறு கிய காலப்பயி ரின் தன்மையை வைத்துத் தான் அண்ணா பண்ணையில் ஒரு புதிய முயற்சி செய் யப்பட்டது.




**புன்செய் நிலப் புரட்சி**

புன்செய் நிலத்தில் இரு போகப் பயிர்கள் பயிரிடும் புதுமைப் புரட்சிதான், அது. தென்மேற்கு, வட கிழக்கு இவ் விரு பருவக் காற்றுகளினால் மழை கிடைக்கும் இடங்களில், இரு குறுகிய காலப் பயிர்களைச் சாகு படி செய்ய முடியும் என்று முயற்சி செய்யப்பட்டது. அந்த முயற்சி நல்ல பலனைத் தந்துள் ளது. ஜூலை மாதத்தில் விதைக் கும் கம்பு அல்லது கொத்துக் கடலைப் பயிர் செப்டம்பர் மாதம் அல்லது அக்டோபர் மாத முதல் வாரத்தில் அறுவடைக்கு வருகிறது. கம்பு அறுவடைக் குப் பின் குறுகிய காலப் பாசிப் பயறு அல்லது தோபசலி என் னும் தட்டைப்பயற்றை இரண்டு மூன்று உழவுகளுக்குப் பின் விதைத்து விடலாம். கடலைப் பயிரைப் பொதுவாக ஈரத்தில் பிடுங்குவதுதான் வழக்கம். அவ் வாறு கடலைச் செடியைப் பிடுங் குவதற்கு முன்னால் 5 கிலோ தட்டைப்பயறு அல்லது பாசிப் பயறு தெளித்து விடவும். கடலைச் செடியைப் பிடுங்கி விடு வதனால் மண் புரளும் போது பயறு விதைகள் மூடிக் கொள் ளும். அதே ஈரத்தில் முளைத்து விடவும் செய்யும். இம்மாதிரிச் செய்வதன் மூலம் பயறு வகை களுக்கு உழவு செய்வது கூட மிச்சமாகிறது. 20 நாட்களில் களை வெட்டும்பொழுது 20 கிலோ டை அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை இடுவத னால் பயிர் செழித்து வருவ தோடு ஏக்கருக்கு 150—175 கிலோ பச்சைப் பயறு 55—60 நாட்களில் கிடைக்கும். இது அண்ணா பண்ணையில் அனுபவம்

வட கிழக்குப் பருவ மழை டிசம்பர் மாத காலம் வரை நீடிக்கும் வாய்ப்பு ஏற் பட்டால் தோ பசலி என்ற தட்டைப் பயற்றுச் செடி களை அறுவடை முடிந்தவுடன் மறுபடியும் செடிகளை அடி மட்டத்தில் அறுத்து விட்டு விட்டால், மறு முறையும் துளிர்த்து மக சூல் 20—25 நாட்களில் கொடுக்கும். இந்நிலை ஏற் படும் காலங் களில் மானா வாரி நிலத்தில் மூன்று பயிர் கள்கூட எடுக்க ஏதுவாகும். பயிர் சாகு படிக்கு ஏற்ற தினுசாகும்.

வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரும் எச்.பி. 3 கம்பு 85 நாட்களில் மகசூலுக்கு வரும். ஆகவே இம்மாதிரிக் குறுகிய கால வறட்சியைத் தாங்கக் கூடிய புதிய தினுசுகளைப் பயன் படுத்துவதன் மூலம் புஞ்சைப் பயிர்ச் சாகுபடியில் ஒரு மகத் தான மாறுதலைச் செய்வதுடன் மானாவாரி நிலத்தை நம்பி வாழும் மக்களுக்கு ஒரு வள மான வாழ்க்கையை மலரச் செய்ய முடியும்.

புஞ்சை நிலங்களில் காணும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு உற்பத்தியைப் பெருக்கி அங்குவாழும்மக்களின் பொருளா தாரத்தாழ்வை நீக்கி அவர்களின் வாழ்வு மலர எண்ணற்ற முயற்சி களில் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. அதன் முக்கிய அம்ச மாகத் தற்போது அண்ணா பண் ணையில் கலைஞர் கருணாநிதி அனுசரணை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன''.




Shilpi BOB 10/71 Tam



# அந்தக் குரல்

அன்று முழுநிலவு.

'வேலன் கைப் பந்தென' நீல வானிலே கோல முழுமதி தவழ்ந்தது.

சான்றோர் முகமென மலர்ந்த முல்லையும் மல்லிகையும் அந்தச் சோலையிலே வெள்ளிபூத்த நீலவானை நினைவூட்டின. மலர்களின் தளிருடலைத் தொட்டு நீவிக்கொண்டு மிதந்து வந்த இளந் தென்றல், மணத்தோடு நல்ல குளுமையும் வழங்கியது.

நிலவு புதிதன்று-சோலையும் புதிதன்று. சோலையில் தவழ்ந்து வரும் தென்றலும் அப்படித்தான். என்றாலும், அந்தப் பூங்கோதையின் உள்ளத்தில் மட்டும், நேற்றிருந்த பெருமகிழ்ச்சியோ நிறைவோ இன்றில்லை. ஆம். இன்று அவள் உள்ளம் எருமை உழக்கிய சேறுபோல ஆகிவிட்டது. ஆடிப்புயலிலே சிக்கிய துரும்புபோல அலைக்கழிந்து அவதியுறுகிறாள். நிலவு நெருப்பாகித் தென்றல் சீறும் புலியாகி அவளை வதைக்கின்றன. தண்ணென்றிருக்கும் அவள்மேனி தணலாகத் தவிக்கிறது.

இன்று அவள் தன்னந்தனிமையிலே யாருடைய வருகைக்காகவோ ஏங்கித் தவித்து நிற்பதை அவள் முகம் தெளிவாக உணர்த்திற்று. பெண் என்றால் பேயும் இறங்கும் என்பார்கள். அப்பப்பா! அந்த நிலவுக்குக் கொஞ்சம் கூட ஈவிரக்கமே இல்லை போலும். இல்லையானால் மேகத் திரையின் ஊடே ஒளிந்தும் வெளிப்பட்டும் இப்படிக் கண்ணாம்பூச்சி விளையாடி அவளைச் சித்திரவதைப் படுத்துமா ?




-இலக்கியப்பித்தன்-

அவன் வந்தான். ஆம். பூங்கோதை யாருக்காக இதுகாறும் எதிர்பார்த்து ஏங்கி நின்றுளோ அந்தப் பொன்முடிதான் வந்தான். அவள் உள்ளத்திலேதான் எத்துணை மகிழ்ச்சி! இன்பப் பூரிப்பு!

பூங்கோதை நின்ற நிலைகண்டு அவன் பூரிப்பெல்லாம் கற்றரையில் விழ்ந்த கண்ணாடிப் பாத்திரமாயிற்று. பதறினன்-துடித்தான்-செய்வதறியாமல் திகைத்தான்.

''அன்பே! ஏனிப்படி ?''-பொன்முடி கேட்டான். பூங்கோதையோ, செங்கனி வாய் திறக்காமல் 'சீனத்துப் பொம்மை' போல நின்றுள்.

'கண்ணே! கலங்காதே! எதுவாயினும் துணிந்து சொல்! அவள் தாடையை நிமிர்த்திப் பணிவோடும் பாசத்தோடும் கெஞ்சினன் பொன்முடி.

'அத்தான்!...'

'அன்பே!...'

'நம் இருவரின்....!'

'திருமணம் தானே! நடத்திவிட்டால் போகிறது.'

'அதுவல்ல நான் சொல்ல வந்தது. நம் தொடர்பு என் பெற்றேருக்குத் தெரிந்து விட்டது, அவர்கள்...!

'என்ன சொன்னர்கள்?'

'சொல்வதாவது! எனக்குத் திருமணம் பேச ஆரம்பித்து விட்டார்கள்'

'திருமணம் பேசுகிறர்களா!...' பரபரப்போடு கேட்டான்.

'ஆம். நான் எவ்வளவு மறுத்தும் அவர்கள் கேட்பதாயில்லை. இனி, நான் சாவது தவிர வேறு வழியில்லை'

'நீ சாவதா? கண்ணே! எனது உடலில் உயிர் உள்ளளவும் அதற்கு நான் ஒப்ப மாட்டேன். நமது காதலைப் பறிக்க யாராலும் முடியாது'

'முடியாதுதான். ஆனல்...'

ஆனல் என்ன?'

அவள் தனது மெல்லிய காலடிகளைப் பார்த்தாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

'அத்தான்! இதுதவிர வேறு வழியில்லை'

அவனும் புரிந்து கொண்டான். சோலையிலே கனியும் இல்லை; அந்தச் செல்வப் பிள்ளையும் இல்லை. வானே நிலவு தழுவிற்று. சோலை தனிமையில் தூங்கி வழிந்தது!

* * * *

பூங்கோதை வீட்டிலே ஒரே பரபரப்பு; அவள் தாய், கண்ணீரும் கம்பலையுமாகக் கிடந்தாள். தந்தையோ பித்துப் பிடித்தவர் போலானர்.

'ஊரிலே தெரிந்தால்...!' இப்படி நினைக்கும் போதே அவர்கள் உள்ளம் கரையிலே தூக்கிப் போட்ட மீன்போலத்துடித்தது!

பெற்றவளைக் காட்டிலும் பேரன்பும் ஆதரவும் காட்டி வளர்த்த பூங்கோதையின் வளர்ப்புத்தாய் (செவிலி)க்கும் உள்ளம் நிலை கொள்ளவில்லை. ஆம். அந்த முதியவளின் உள்ளம், மகளைப் பிரிந்த அதிர்ச்சியைச் சமாளிக்க முடியாமல் தள்ளாடியது. 'பிள்ளைப் பாசம்' அவளைப் பின்னிருந்து தள்ள, அவள் தளர்ந்து நடந்தாள். நடந்து கொண்டேயிருந்தாள். சோலைகள் தோறும் சென்று துழாவினுள். விழாக்கள் நடைபெறும் இடங்களிலே சென்று எங்கெங்கும் கூர்ந்து நோக்கினுள். ஆனலும் என்ன? அவள்-அந்தச் செவிலித்தாய் யாருக்காகத் தேடி அலைந்தாளோ அவளைப் பார்க்க முடியவில்லை.

அவள் கால்கள் வலியெடுத்தன. இனி அவளால் ஓரடிகூட எடுத்து வைக்க முடியாது. கால்கள் தடுமாறின. கண்கள்தாம் என்ன? எங்கும் கூர்ந்து கூர்ந்து நோக்கியமையால் ஒளி மங்கின.

''வானத்திலே மின்னும் மீன்களைக் காட்டிலும் இங்கு பலர் வாழ்கின்றனரே'' என்ற வியப்பு! அடுத்த மணித்துளியில், ''இவ்வளவு பேர் இருந்தும் தன் மகள், இல்லையே!'' என்ற ஏக்கம் இரண்டையும் தொடர்ந்து ''எவ்வளவு பேர் இருந்தென்ன? அத்துணைபேரும் தனக்குத் தொடர்பில்லாத மற்றவர்கள் தாமே!'' என்னும் சலிப்பு. இவ்வாறு வியப்புக்கும் ஏக்கத்திற்கும் சலிப்புக்கும் இவற்றிற்கெல்லாம் மேலாக ஏமாற்றத்திற்கும் ஆட்பட்ட அவளது-அந்தத் தாயினது உள்ளம் பேசுவதை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் வாழ்ந்த வெள்ளி வீதியார் என்னும் பெண்பாற் புலவர் நான்கே வரிகளில் நயமாக-ஓர் உன்னதமான கவிதையோவியமாக ஆக்கித் தந்திருக்கிறர். இப்பொழுது நாம் அந்தப் பாடலைப் பாடினலும், அந்தத் தாய்க் கிழவியின் உள்ளம்-அவள் பேசிய பேச்சு-அந்தக் குரல் இன்னும் நம் செவிகளில் நின்று ஒலிக்கிறது. அந்தக் காட்சி நம் மனத்தகத்தே நீங்காத ஓவியமாக நிலைபெற்றுவிடுகிறது. பாடல் இதோ:

'' காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந்தனவே;
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றயிவ் வுலகத்துப் பிறரே''

நான்கே வரிகள்! எனினும், தற்காலத் திரைப் படங்களில் கையாளப்படும் உத்திகளையெல்லாம் மிஞ்சத் தக்கவகையில் பாடல் அமைந்திருப்பதைக் காணுங்கள். பலமுறை பாடிப்பாடி, எண்ணி எண்ணி வியந்து மகிழத் தக்க நயங்கெழுமிய இனிய பாடல். இத்தகு பாடல்கள் சங்க இலக்கியங்களில் ஏராளம். ஆம். சங்க இலக்கியப் பெருங்கடலில் சிதறிய, ஒரு சிறு துளிதான் இந்தப் பாடல்!

# அகராதிச் செய்தி



வ. சம்பந்தம்

ஒரு மொழியிலுள்ள சொற்களை அகரவரிசையில் நிறுத்தி அவற்றுக்குப் பொருள் கூறும் நூல் அகராதி எனப்படும்.

சொற்களின் தோற்றம், அவற்றின் வகைகள், அவை தரும் பொருள்கள், அவற்றை ஆளும் முறைகள் முதலியன பற்றிக் கூறும் அமைப்பு பொதுவாகச் சொல்லிலக்கணம் (Etymology) எனப்படும். இத்தகையசொல்லிலக்கணத்தை, கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் 'சொல்லதிகாரம்' என்னும் பகுதியில் காணலாம்.

எனவே, தமிழில் அகராதிக் கலை கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் தொல்காப்பியக் காலத்திலேயே தோன்றியிருந்தது எனலாம்.

தமிழ் போலவே உலக மொழிகள் பலவற்றிலும் மிகப் பழங் காலத்திலேயே அகராதிகள் தோன்றின. ஆசியாவில் கி.மு. 669—626-ஆம் ஆண்டுக் காலத்தில் வாழ்ந்த அசுர்பானிபல் (Ashurbanipal) என்னும் மன்னனது ஆட்சியில் சொற்பொருள் விளக்கும் அசிரிய மொழியகராதி களிமண் பலகைகளில் அமைக்கப்பட்டிருந்தது. வடமொழியிலும் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் அகராதி அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. கி.மு. 150-ல், 10,000 சொற்களுக்குப் பொருள் விளக்கும் அகராதி ஒன்று சீன மொழியில் தொகுக்கப் பெற்றிருந்ததாம். ஐரோப்பாவிலும் கிரேக்கம், லத்தீன் முதலிய பழம்பெரும் மொழிகளில் பழங்காலத்திலேயே அகராதிகள் தோன்றியிருந்தன.

தமிழ் மொழியைப் பற்றிய வரையில், சொல்லிலக்கணத்தின் ஓர் உறுப்பாக இருந்த அகராதித் துறை, நாளடைவில் அதிலிருந்து பிரிந்து ஒரு தனிக்கலையாகவே வளரத் தொடங்கியது.

இம்முறையில் தமிழில் பல நூற்கள் எழுந்தன. அவற்றுள் மறைந்தவை போக எஞ்சியிருப்பவை சிலவே; இருப்பனவற்றுள் காலத்தால் முற்பட்டவை 'சேந்தன் திவாகரம்', 'பிங்கலம்' என்னும் நூற்கள். இவை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டன என்று சொல்லப்படுகின்றது. இவற்றிற்கு அடுத்தபடியாகக் கிடைத்திருக்கும் நூற்களுள் 'சூடாமணி' முற்பட்டது. இது பதினாறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதெனக் கருதப்படுகிறது.

சூடாமணி என்னும் நூல் 'நிகண்டு' என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. சூடாமணிக்குப் பின் செய்யுள் வடிவில் எழுந்த அகராதித்துறை நூற்கள் அனைத்தினுக்கும் நிகண்டு என்னும் பொதுப் பெயரே வழங்கப்பட்டது. இப்பழக்கத்தால், சூடாமணிக்கு முன் தோன்றிய நூற்களும் நாளடைவில் நிகண்டு என்றே அழைக்கப்படலாயின.

நிகண்டு என்றால் தொகுதி அல்லது கூட்டம், நீளம் என்று பொருளாம். சொற்கள் தொகுதியாக நீளமான வரிசையாகக் கொடுக்கப்பட்டிருப்பதால், அகராதித்துறை நூற்களுக்கு நிகண்டு என்ற பெயர் அளிக்கப்பட்டது.

உலக மொழிகள் பலவற்றிலும் சொற்பொருள் விளக்கும் அகராதித்துறை நூற்கள் பல தோன்றினவேனும், பதினாறாம் நூற்றாண்டு வரையிலும் எந்த மொழியிலும் சொற்கள் அகர வரிசையில் நிறுத்திப் பொருள் கூறப்படவில்லை. இக்காரணத்தால் குறிப்பிட்ட ஒரு சொல்லை உடனே கண்டுபிடிக்க முடியாமல் முதலிலிருந்து இறுதிவரை சொற்களைப் படித்துப் பார்த்துத் தேடி, இடர்ப்பட வேண்டியிருந்தது.

இதனால் திவாகரம், பிங்கலம் போன்ற நூல்கள் ஆதியில் அகர வரிசையில் அமைக்கப்படாமல் இருந்தும், பின் வந்தவர்கள் அவற்றின் சொற்களைத் தாமாக அகரமுதலாக வரிசைப் படுத்தினர். இந்த வசதியைக் கருத்திற் கொண்டு, 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சூடாமணி நிகண்டை இயற்றிய மண்டல புருடர், சொற்களைக் 'ககர எதுகை' முதல் 'னகர எதுகை' ஈறாக வரிசைப் படுத்திப் பொருள் கூறியுள்ளார்.

மண்டல புருடருக்குப் பின்னர் அகராதிக் கலையில் மேலும் ஒரு வளர்ச்சி காணப்பட்டது. கி.பி. 1594-ல் சிதம்பர இரேவண சித்தர் என்னும் தமிழ்ப் புலவர் ஒருவர், சொற்களை முதலெழுத்து வாரியாக அகர வரிசையில் அடுக்கி, 'அகராதி நிகண்டு' என்ற பெயரில் தமிழில் ஓர் அகராதி நூல் இயற்றினார். உலகத்திலேயே சொற்களின் முதலெழுத்துக்களை அகர வரிசையில் அடுக்கி அமைக்கப்பட்ட முதல் அகராதி நூல் 'அகராதி நிகண்டு' தான். அடுத்து, இரண்டாவதாக கி.பி. 1612-ஆம் ஆண்டில் இத்தாலி மொழியில் அகர வரிசையில் அமைந்த ஓர் அகராதி தோன்றியது. பின்னர் நாளடைவில் உலக மொழிகள் பலவற்றிலும் இத்தகைய அகராதிகள் தோன்றலாயின.

அகராதித் துறை நூற்கட்கு வேற்று மொழிகளில் பல பொருளில் பல பெயர்கள் வழங்கப்படினும், தமிழில் உரிச்சொல், நிகண்டு என்னும் பெயர்கள் மறைந்தொழிய, அகராதி என்

னும் பொருத்தமான பெயர் நிலைத்துவிட்டது. இதுபோலவே ஆங்கில மொழியிலும் பல பெயர் தோன்றி மறைந்த பின்னர், சர் தாமஸ் எலியட் (Sir Thomas Elyot) தொகுத்த அகராதியின் 'டிக்ஷனரி' (Dictionary) என்ற பெயர் நிலைத்துவிட்டது.

தமிழைப்பற்றிய வரையில் அகராதிக் கலை வளர்ச்சியில் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து முன்னேற்றங்கள் தோன்றின. அவை : 1. சொற்களை அகர வரிசையில் அடுக்கிப் பொருள் கூறியது ; 2. சொற்பொருள் விளக்கம், நிகண்டுகளில் உள்ளதைப் போலச் செய்யுள் வடிவில் அளிக்கப் பெறாமல், இக்கால அகராதிகளில் உள்ளபடி சொற்களைத் தனித்தனியாக ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்திப் பொருள் கூறியது ; 3. அரிய சொற்களுக்குப் பொருள் கூறுவதுடன் வேறு பல துறைகளிலும் கலையகராதிகள் தோன்றினமை.

இந்த மறுமலர்ச்சியில் ஐரோப்பாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த பெஸ்கி (Beschi), போப் (G. U. Pope) முதலிய கிறித்தவப் பாதிரிமார்கள் ஏற்ற பங்கு மிகப் பெரியது. அகராதி நூற்கள் செய்யுள் வடிவில் இருந்த நிலையை மாற்றி, அகர வரிசையில் தொகுத்துத் தமிழகராதிகள் செய்தவர்கள் அவர்கள்தாம். அரிய சொற்களுடன் எளிய சொற்களையும், கிளைமொழிச் (Dialects) சொற்களையும் சேர்த்து அகராதியை விரிவுபடுத்தினர். வீரமாமுனிவர் என அழைக்கப்படும் பெஸ்கியவர்கள் தொகுத்த 'சதுர் அகராதி' என்ற நூல் இங்கே குறிப்பிடத் தக்கது.

'தமிழுக்குத் தமிழ்' என ஒரு மொழியகராதியேயன்றி, தமிழ்-போர்ச்சுகேசிய அகராதி, தமிழ்-லத்தீன் அகராதி, லத்தீன்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, போர்ச்சுகேசிய லத்தீன்-தமிழ் அகராதி, லத்தீன், பிரெஞ்சு தமிழ் அகராதி முதலிய இருமொழி மும்மொழி யகராதிகளும் அவர்கள் படைத்தனர். இவற்றை முன் மாதிரியாகக் கொண்டு, சமஸ்கிருதம், கிரந்தம், தெலுங்கு, இந்தி, மராத்தி, மலாய், ரஷ்யன் முதலிய மொழிகளோடு தமிழ் இணைந்த அகராதிகள் பிற்காலத்தில் தோன்றின.

இவ்விதமாக 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பல மொழியகராதிகள் தோன்றின. இவையேயன்றி, இருபதாம் நூற்றாண்டில் மேற்கோள்களும் படங்களும் கூடிய அருஞ்சொல் விளக்க அகராதிகள் (Glossaries), மருத்துவம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய தனித் துறைகளில் ஆக்கப்பட்ட அகராதிகள், ஒரு நூலில் அடங்கியுள்ள சொற்களையும் செய்திகளையும் சுட்டிக் காட்டும் சொல் தொகுதி (concordance) அகராதிகள், பதவியல் அகராதிகள் (Etymological) ஒப்பியல் மொழி (comparative) அகராதிகள், தொகையகராதி, தொடையகராதி பலவகைக் கலைச்சொல் (Technical Terms) அகராதிகள், கலைக் களஞ்சியம் (Encyclopedia) பழமொழியகராதி, புலவர் அகராதி, இலக்கிய அகராதி முதலிய பலவகை அகராதிகள் தோன்றின.

இதுவரை தமிழில் ஏறக்குறைய ஐம்பது நிகண்டுகளும் நூற்றைம்பது அகராதிகளும் வெளிவந்துள்ளன.

இன்றைய உலகில், ஆங்கில அகராதிகளில் மிகச் சிறந்தது எனக் கருதப்படுவது 'வெப்ஸ்டர் அனைத்து நாட்டு அகராதி' (Webster's InternationalDictionary) யாகும். இது அளவில் மிகப் பெரியது. 2728 பக்கங்கள் உள்ளன. நாலரை இலட்சம் சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த அகராதியைத் தயாரிக்க ஆன செலவு மூன்றரை மிலியன் டாலர்கள்.

தமிழரசு
இதழுக்கு
அனுப்பப்படும்
கவிதை-கதைகள்
முதலியன
எக்காரணம்
கொண்டும்
திருப்பி
அனுப்பப்படமாட்டா.
அவை வெளியிடுதல்
பற்றிய
கடிதத் தொடர்பு
வைத்துக் கொள்ள
இயலாது!
அஞ்சல் தலைகளோ
அஞ்சல் அட்டைகளோ
அனுப்ப வேண்டாம்
என்றும்
தெரிவித்துக்
கொள்கிறோம்.
— ஆசிரியர்



# ஏன் இந்தக் காதல்?



## 4. மனச்சுமை இறங்குமா?

கண்ணீர்த் துளிகளை வழித்தெறிந்து விட்டுப் புடைவைத் தலைப்பால் அவசரம் அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்ட தேன்மொழி, கதவைத் திறந்து பார்த்த பொழுது அங்கே புன்னகையைச் சிந்தி நின்றவள் டாக்டர் பூங்கொடிதான்.

'' வணக்கம், டாக்டர்; வாங்க''

'' வணக்கம், வணக்கம் ; உங்கள் உடம்பு இப்போது எப்படி இருக்கிறது ?''

'' உடம்புக்கு என்ன கேடு ? நன்றாகத்தான் இருக்கிறது.''

—வறட்டுச் சிரிப்புடன் அலுத்துக் கொண்ட தேன்மொழி, அறையினுள்ளே திரும்பிச் சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு நாற்காலியைத் தன் கட்டிலை ஒட்டியே இழுத்துப் போட்டாள்.

அதிலே வந்து அமர்ந்தவாறே, ''நான் நினைத்தது சரிதான் போல் இருக்கிறது''

—என்று நகைத்தாள் பூங்கொடி.

'' என்ன டாக்டர் நினைச்சீங்க ?''

''உங்களுக்குத் தேவையானது உடல் சிகிச்சை இல்லை; உள்ளச் சிகிச்சையே என்றுதான் நினைத்தேன். அதை உறுதிப் படுத்துகிற மாதிரிதான் உங்கள் பேச்சு இருக்கிறது. ஆமாம்; உங்கள் அப்பா இப்போது வீட்டில் இல்லையா ?''

''இந்த நேரத்திலே அப்பா எங்கே இங்கே இருக்கப் போகிறார் ? எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலகம் எதிலாவது வேலை வாங்கிக் கொண்டிருப்பார் ; அல்லது தம் நண்பர்களோடு 'கிளப்' எதிலாவது 'சதுரங்கமோ' 'பில்லியர்ட்சோ' ஆடிக்கொண்டிருப்பார்.''

—என்றவாறே கட்டிலின்மீது தானும் வந்து அமர்ந்து கொண்டாள் தேன்மொழி.

''உங்கள் அப்பாவை நான் உடனே சந்தித்துப் பேச வேண்டுமே !''

''அப்போ, தொலைபேசி மூலம் அவர் எங்கேதான் இருக்கிறார் என்று துப்பறிந்து வரவழைப்போமா ?''

''வேண்டாம், வேண்டாம்! அப்படியெல்லாம் அவரை இப்போது பரபரப்பில் ஆழ்த்த வேண்டியதில்லை. நாளைக் காலையிலோ மறுநாளோ நானே நேரில் வந்து கூறிக்கொள்கிறேன்.''

'' எதைப் பற்றிப் பேச விரும்புகிறீர்கள் என்று தெரிவித்தால் நான் வேண்டுமானால் முன் கூட்டியே அவருக்குச் சொல்லி வைக்கிறேன்.''

''உங்களைப் பற்றித்தான் பேச நினைக்கிறேன். அதை உங்கள் வாயாலே உங்கள் அப்பாவிடம் நீங்களே சொல்ல முடியாதே என்றுதான் யோசிக்கிறேன்.''

—தன் கொவ்வை இதழ்களிலே குறும்பு நெளிந்திடக் கூறினாள் பூங்கொடி.

'' என்னைப் பற்றி அவரிடம் அப்படி என்னதான் பேசப் போகிறீர்கள் என்று நானும் தெரிந்து கொள்ளலாமா, டாக்டர் ?''

''ஓ! கண்டிப்பாக உங்களுக்கும் அது தெரிந்திருக்க வேண்டியதுதானே ! வேறொன்றும் இல்லை ; உங்கள் மன நோய்க்கான மருந்தைப் பற்றித்தான் பேசப் போகிறேன். அது என்ன மருந்து தெரியுமா ?''

''என்ன மருந்து டாக்டர்? ''

''உடனடியாக உங்கள் மனத்துக்கு இனியவரை நீங்கள் மணந்து கொண்டு விட வேண்டும் ; அதுதான் நான் உங்கள் அப்பாவிடம் சொல்லப்போகிற மனநோய் மருந்து.''

—நான் இப்படிச் சொன்னதும் தேன்மொழி—நாணத்தால் தலை கவிழ்வாள்; நகத்தைச் சுவை பார்ப்பாள்; தேனூற்றில் நீந்துகின்ற திளைப்பில் முகம் மலர்வாள் என்றெல்லாம் எதிர் பார்த்தாள் பூங்கொடி.

ஆனால் அவளோ . . . . . . . ?

அ. மறைமலையான்






அகங்குளிர்ந்தால் அல்லவா முகம் விரியும் பூவாக? மனமே நெருப்பாகும் போது முகம் அதன் புகையாக இருளாதா?

சிறிது நேரத்திற்கு முன்னர் தன்னந்தனியாகக் கண்ணீரை வழிய விட்டதால் களைத்துப் போன அவளது கரு விழிகள் சன்னல் வழியே தோட்டத்துப் பக்கம் சென்றன. அங்கோ, கடுமையாக வீசுகின்ற காற்றுச் சுழிப்பிலே, சருகுகள் சில 'தட்டித்தாண்டல்' ஆடித் தடுமாறிப் பறந்தன; தரையில் போய் விழுந்தன. அவற்றோடு ஒரு பச்சை இலையுமா படாத பாடு பட்டுப் பறந்து விழவேண்டும்?

'புறக்கணிக்கப்பட்டு விட்ட எதுவுமே முதுமை வருகிறவரை எதற்குத்தான் காத்திருக்க வேண்டும்?'

'பழுப்பாகிச் சருகாகிப் பலருடைய நையாண்டிக்கும் இலக்காகி-அழுகையிலேயே அழுகிச் சிதைவதை விட, அதோ அந்த இலையைப் போல இளமை மெருகின் பொலிவு இருக்கும் பொழுதே 'இறப்பு' என்னும் அழகிய பேழைக்குள்ளே ஒளி முத்தாக உறக்கம் கொண்டால் தான் என்ன? அதற்கும் ஒரு தனிச்சுவை-தனிப்புகழ் இல்லையா?........'

—அதற்கு மேல் தேன்மொழியின் பொருளற்ற கற்பனைகளுக்குச் சிறகு முளைக்காத வண்ணம் பூங்கொடியின் குரல் எழுந்து குறுக்கிட்டது:

''என்ன தேன்மொழி, திருமணத்தைப் பற்றிய பேச்சை எடுத்ததும், ஒன்றுமே வாயைத் திறக்காமல் மவுனமாக இருக்கிறீர்கள்? வெட்கத்தினாலா?''

''வெட்கப் படும்போது மட்டுந்தானா? துக்கப் படும் போதுங்கூடத்தான் வாயைத் திறக்க முடிவதில்லை.''

''அப்படி என்னதான் பெரிய துக்கம் உங்கள் இதயத்தை இப்போது அரிக்கிறது? அதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''ஓ! அதெல்லாம் ஒன்றும் இல்லை, டாக்டர்! நான் ஏதோ ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன்.''

சமாளிக்கப் பார்த்தாள் தேன்மொழி.



ஆனால், மருத்துவக் கலையோடு இணைப்பாக மனோதத்துவமும் பயின்றுள்ள பூங்கொடிக்கு அவளுடைய உள்ளத்தினுள்ளே சுழன்று கொண்டிருக்கும் புகைச் சலை-பொருமலை-புரிந்து கொள்ள முடியாதா?

''இதோ பாருங்கள், தேன்மொழி! என்னிடம் நீங்கள் எதையுமே ஒளிக்கத் தேவையில்லை; கூடவும் கூடாது. சிறிது நேரமாவது நான் உங்கள் குடும்ப டாக்டர் என்பதையும் நீங்கள் என்னிடம் சிகிச்சை பெறுகின்ற நோயாளி என்பதையும் மறந்துவிடுங்கள். உண்மையில்.. நான் சொன்னால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். உங்களைக் காண நேர்கின்ற ஒவ்வொரு கணமும் என் நெஞ்சினுள்ளே எவ்வளவு வேகமாகப் பாச ஊற்றுப் பொங்கிப் பெருக்கெடுக்கின்றது தெரியுமா? நம்முடைய வாழ்க்கைப் பயணத்திலே நாமும் எத்தனையோ பேர்களைச் சந்திக்கத்தான் சந்திக்கிறோம்; எல்லாரிடமுமா நாம் நம் இதயத்தைப் பறிகொடுக்கிறோம்? எல்லாரையுமா நாம் நிழல் மரங்களாகக் கருதி நெருங்குகிறோம்? சிலர் கருவேல மரங்களாகவே நம்மைக் குத்துவதும் இல்லையா? அதே சமயம் ஒரு சிலரோ நிழலை மட்டுமின்றிப் பழமும் தருகிற மாமரமாகவே நமக்குப் பயன்தருவதில்லையா? என்னைப் பொறுத்தவரை எனக்குத் தங்கையோ தமக்கையோ யாரும் இல்லை; உடன் பிறப்பு யாரும் இல்லாத அந்த 'வெறுமை'யினாலோ என்னவோ, உங்களை முதன்முதலில் மூன்றாண்டுக்கு முன்னே சந்தித்தவுடனேயே என் அருமைத் தங்கையாகவே நான் என் மனத்திற்குள்ளே வரித்துக் கொண்டு விட்டேன். இல்லையென்றால் என்னைத் தேடி எத்தனையோ நோயாளிகள் வந்து ஏமாந்து திரும்புவார்கள் என்பது தெரிந்தும்கூட உங்களுக்காக இவ்வளவு அமைதியாக இப்படி நேரத்தைக் கழிப்பேனா? ஆகையாலே உங்கள் நெஞ்சக் குமுறலை என்னிடம் கொஞ்சமாவது ஏன் நீங்கள் திறந்து காட்டக்கூடாது? ஒருவேளை, உங்களுடைய ஆசைகளையும், அவை தந்த அதிர்ச்சிகளையும் தெரிந்துகொண்டு விட்டால், நான் எங்கே பிறகு உங்களைத் தாழ்வாக—தரக் குறைவாக-

கேலி செய்வேனே, அல்லது மற்றவர்களிடமும் உங்களை ஒரு கேலிக்குரிய பொருளாக்கி விடுவேனே என்று அஞ்சுகிறீர்களா?"

''அய்யய்யோ, அப்படியெல்லாம் உங்களைப் பற்றி நான் குறைவாக நினைக்கவில்லை, டாக்டர். நீங்கள் என் மீது வைத்திருக்கும் அளவுகடந்த பாசத்தை -பற்றுதலை-நானும் அறிய மாட்டேனா? மேலும், என்னைப் போன்ற ஒரு சாதாரணப் பிறவியைப் பற்றியெல்லாம் 'புழுங்கல் குத்திக்' கொண்டிருக்க உங்களைப்போல் சுறுசுறுப்பாக இயங்குகின்ற டாக்டர்களுக்கு -பெரியவர்களுக்கு-நேரம், காலந்தான் ஏது?......''

''பிறகு என்ன? உங்கள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருக்கும் அந்த முள்ளை என்னிடம் காட்டிவிட வேண்டியது தானே! அப்படிக் காட்டினீர்களானால் அதைக் களைந்து எறிவதற்கு என்னாலான முயற்சிகளையும் நான் ஓர் உயர்ந்த கடமையாகக் கருதிச் செய்வேன் இல்லையா?''

—பூங்கொடியின் இந்த உருக்கமான வேண்டுகோள் தேன்மொழியின் தயக்கத்தையெல்லாம் சுருட்டி மடக்கித் தூர வீசியெறிந்தது.

நெஞ்சை அழுத்தும் கனமான சுமை இருக்கிறதே அதை எங்காவது, யாரிடமாவது இறக்கி வைக்கத்தான் வேண்டும்—தோன்றும்; இல்லையென்றால் இரண்டு கொடுமைகளுக்கு இரையாக வேண்டுமே! ஒன்று மூளை குழம்பி மண்டை வெடித்துப் பைத்தியமே பிடித்துவிடும்; அல்லது இருதயம் வெடித்துச் சாவே வந்துவிடும். அந்த ஆண்மை குன்றிய நிலைமைகளுக்குக்கெல்லாம் எதற்கு இடந்தரவேண்டும்? தன்னுடைய மனப் பளுவை இறக்கி வைக்கக் கூடிய சுமை தாங்கியாக இந்த டாக்டர்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே!

''சரி, டாக்டர்; நீங்கள் இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்ன பிறகு நானும் எதையும் ஒளிக்கவோ மறைக்கவோ விரும்பவில்லை; எல்லாவற்றையுமே சொல்லி விடுகிறேன். மற்றப் பெண்களைப் போல நானும் ஒருவரை முட்டாள் தனமாகக் காதலித்து விட்டேன். அதுதான் என் மன உளைச்சலுக்கே காரணம்......''

''அதனால் என்ன, தேன்மொழி? அவரையே நீங்கள் அறிவுக்கூர்மையோடு காதலித்தால் போகிறது!''

—என்று மெல்ல நகைத்தாள் பூங்கொடி.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் டாக்டர்?''

—விளங்காமல்தான் வினவினாள் தேன்மொழி.

''நீங்கள் என்னவோ காதலித்ததையே முட்டாள்தனம் என்பதாக உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னீர்களே அதைத்தான் நான் கொஞ்சம் திருத்திக் கூறினேன். காதலிப்பது எப்படி முட்டாள்தனம் ஆகும்? காதல் புரிவது முட்டாள்தனம் என்றால், பிறகு அழகுள்ள பெண்ணும் வலுவுள்ள ஆணும் படைக்கப்பட்டதே கூட முட்டாள் தனந்தான்! நம்மால் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை என்பதற்காகவே நம் நெஞ்சத்தில் அரும்புகின்ற நியாயமான உணர்வுகள் கூடக் கேவலமானவை ஆகிவிடுமா? எதற்காகச் சொல்கிறேன் என்றால், காதலித்ததையே பாவச் செயலாக எண்ணிப் புழுங்குகின்ற ஒரு கழிவிரக்கம்—தவறான கண்ணோட்டம்—உள்ளத்தொய்வு—உங்களுக்கு உண்டாகி விடக் கூடாதே என்பதற்காகத்தான்! போகட்டும்; அந்த ஆள் இப்போது உங்களை ஏமாற்றி விட்டாரா?''



—இந்தக் கேள்விக்கு எப்படி விடையளிப்பது என்றே தெரியாமல் திணறினாள் தேன்மொழி.

மாதவன் அவளை ஏமாற்றினான் என்று எப்படிச் சொல்ல முடியும்? எந்த ஒரு வாக்குறுதியையும் அவன் அவளுக்கு அளிக்கவில்லையே! பிறகு, அதிலிருந்து அவன் வழுக்கியும் செல்லவில்லையே!

''அந்த மாதிரியெல்லாம் அவர் என்னை ஏமாற்றினார் என்று பழி சொல்வதற்கு இடம் இல்லை, டாக்டர்.''

''பின்னே? .... உங்களுடைய தகுதிக்கும் திறமைக்கும், கொள்கைக்கும், குணத்துக்கும் ஒத்துவரக்கூடியவராக இருக்கமாட்டார் என்கிற புதிய அறிவுத் தெளிவினாலே நீங்களாகவே ஒதுங்கிக் கொள்வதைப் பார்த்து அவர் ஏதாவது அவமானப் படுத்தி விடுவாரோ என்று அஞ்சுகிறீர்களா?''

''அய்யோ, அந்த அளவுக்கெல்லாம் என்னுடைய காதல் முற்றிக் கனியவோ பிறகு மோதலைச் சந்திக்கவோ இல்லை டாக்டர்!''

''வேறே என்னதான் சிக்கல்? அதைக் கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்!''

''என்னுடைய காதல் இருக்கிறதே அது கொஞ்சம் வேடிக்கையானது! நான் நெஞ்சார நேசிக்கிறேனே அந்த மனிதர் இன்னும் தன்னுடைய வாயைத் திறந்து 'உன்னை நான் காதலிக்கிறேன்'—என்று கூறவே இல்லை!''

''அய்யய்யோ! அவ்வளவு அழுத்தக்கார மனிதரிடம் நீங்கள் ஏன் உங்கள் மனத்தைப் பறிகொடுத்து விட்டு இப்படி அவதிப்பட வேண்டும்?''

''அதுதானே டாக்டர், எனக்கும் புரியவில்லை!''

—தேன்மொழி இவ்வாறு கூறும் பொழுதே, வானொலி வழங்கிய திரைப்படப் பாட்டல் ஒன்று அவளைக் கேலி செய்வது போலக் காற்றிலே மிதந்து வந்தது.

நினைக்கத் தெரிந்த மனமே—
உனக்கு
மறக்கத் தெரியாதா?
பழகத் தெரிந்த உயிரே—
உனக்கு
விலகத் தெரியாதா?

—இந்த இனிமையான ஏக்கந் துளும்பும் வரிகளைக் கேட்டதும்,

''ஏதேது? உங்களுக்காகவே இந்த நேரம் பார்த்து இந்தப் பாட்டைப் போட்டிருக்கிறார்கள் போல் இருக்கிறதே!

—என்று சிரித்தாள் பூங்கொடி.

தேன்மொழியும் மவுனமாகச் சிரித்துக்கொண்டாள்.

''ஆமாம்; தொடக்கத்திலே அந்த ஆளும் உங்களைக் காதலிக்க முடியும் என்று உங்களுக்கு எப்படித்தான் தோன்றியது? எப்படித்தான் நம்பிக்கை வைத்தீர்கள்?''

''அவருடைய பார்வை, பேச்சு, சிரிப்பு—இவற்றைக் கொண்டுதான் நான் நம்பிக்கை வைத்தேன். இதிலே இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா டாக்டர்? நான் எத்தனை பெண்களுக்கு இடையிலே இருந்தாலும் சரி; அவர் என்னை மட்டுமேதான் பார்ப்பார்; என்னோடு மட்டுமேதான் பேசுவார்; சிரிப்பார்; வேறு எவளையுமே ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்.''

''அப்படிப்பட்டவர், தன்னுடைய உள்ளக் கிடக்கையைத் தானாக ஏன் வெளிப்படுத்தவில்லை? அதுவும் இந்த மாதிரி விவகாரங்களிலே ஆண்கள் தானே முந்திக் கொள்வார்கள்—முந்திக் கொள்ளவும் வேண்டும்! ஆனால் அவர்தான் வாயை இறுக்கி மூடிக்கொண்டு இருந்தார் என்றால் நீங்களாவது அவரது கருத்தை வெளிப்படையாகத் தெரிந்துகொள்ள ஏதாவது குறிப்புக் காட்டியிருக்கலாமே?''

''அப்படிக் குறிப்புக் காட்டுவதற்காக நான் எடுத்துக் கொண்ட முயற்சிதான் டாக்டர் எனக்கு, இப்போது அதிர்ச்சியையே கொடுத்திருக்கிறது!''

''ஏன்? அவர் உங்களைக் காதலிக்கவே இல்லை என்று அப்பட்டமாகச் சொல்லிவிட்டாரா?''

''அப்படியும் அவர் சொல்லவில்லையே?''



''பின்னே?''

''நான் மயக்கமடைந்து விழுந்தேனே அன்று காரிலே போய்க் கொண்டிருக்கும் பொழுதே, என் கையிலே இரத்தக் கறை இருந்ததால் அவரை என் தலைக்குப் பூச்சூட்டுமாறு கேட்டுக் கொண்டேன். அவர் அதற்கு என்ன சொன்னார் தெரியுமா?...... 'நானாவது இனிமேல் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது?'—என்று ஒரேயடியாகக் கூறிவிட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது டாக்டர்?''

''முன்பே ஒரு பெண்ணுக்குப் பூச்சூட்டி இருக்கிறார் என்று தெரிகிறது.''

''அப்படியானால் எனக்கு முன்பே எவளோ ஒருத்தியை அவர் காதலித்திருக்க வேண்டும்; அல்லது திருமணமே செய்து கொண்டிருக்க வேண்டும் என்று தெளிவாகவில்லையா?''

''அந்த மாதிரியும் எடுத்துக் கொள்ளலாம்.''

''அப்படிப்பட்டவர், என்னையும் ஏன் ஆசைபொங்கப் பார்க்க வேண்டும்? கேலி பேசிச் சிரிக்க வேண்டும்? 'டேபிள் டென்னிஸ்' கற்றுக் கொடுக்கிற சாக்கிலே என் கைகளைத் தொட்டு எதற்காகப் பழக வேண்டும்? .. நான் எப்படியெல்லாம் கனவுகள் கண்டேன் தெரியுமா, டாக்டர்?......''

—'கோ' வென்று குமுறிக் கதறத் தொடங்கிவிட்டாள் தேன்மொழி.

அவளை எவ்வாறு தேற்றுவது என்றே தெரியாமல் பூங்கொடி திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது—

சமையல்காரி சண்பகம் பரபரப்போடு அந்த அறையினுள் ஓடிவந்தாள்.

''டாக்டரம்மா! உங்க ஆஸ்பத்திரியிலே யாருக்கோ ரொம்ப ஆபத்தாம்! உடனே வரச் சொல்லி 'போன்' வந்திருக்கு''—என்றாள்.

உடனே தேன்மொழியிடம் விடை பெற்றுக்கொண்டு பூங்கொடி புறப்பட்டுவிட்டாள்.

* * *

மறுநாள் காலை பத்து மணி இருக்கும்.

வழக்கம்போலப் படுக்கையில் கிடந்தவாறு சன்னல் வழியாகத் தன் பார்வையைப் பறக்க விட்டுத் தோட்டத்தின் பசுமையான எழிலையும் சிட்டுக் குருவிகளின் சிரிப்பையும், அணில் பிள்ளைகளின் விளையாட்டையும், வண்ணத்துப் பூச்சிகளின் சிறகடிப்பையும், பருகித் திளைக்கவில்லை தேன்மொழி.

அவளுடைய கண்ணும் கருத்தும், மராட்டிய மொழியின் மாபெரும் காவிய எழுத்தாளரான வி. ச. காண்டேகர் தீட்டிய 'எரிநட்சத்திரம்' என்னும் புதினக் கடலிலேயே புதைந்து அமிழ்ந்தன.

அதிலே வரும் 'உல்கா' என்னும் ஓவியப் பாவையின் வாழ்வைப் படிக்கப் படிக்கத் தேன்மொழியால் அழுகையை அடக்க முடியவில்லை. அவளது கன்னக் கதுப்புகளில் கண்ணீர் வழிந்தது தாரை தாரையாக!

சிறிது நேரத்தில்,

''உள்ளே வரலாமா?''

—என்கிற 'கணீர்'க் குரல்.

தேன்மொழி திரும்பிப் பார்த்தாள்.

மாதவன் புன்சிரிப்பை இழைய விட்டுக் கொண்டு அவளை நோக்கி வந்தான். அந்தக் குறுஞ் சிரிப்பிலேதான் எவ்வளவு குறும்பு?

(தொடரும்)

# தில்லையாடித் திருவிழா!



அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி, தியாகிகள் கோட்டமான தில்லையாடியை, வள்ளியம்மை நகராக உருவாக்க நமது அரசு முன் வந்தது.

தில்லையாடி—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோவில் அருகிலுள்ள சிற்றூர்.

அண்ணல் காந்தியடிகளுடன் தென்னாப்பிரிக்க நாட்டில் அறப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களான வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் ஆகியோர் பிறந்த மண்.

அந்த ஊரில், காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி 1969-ஆம் ஆண்டில் அமைக்கத் தொடங்கிய நினைவுச் சின்னங்களாக வள்ளியம்மை நகர், வள்ளியம்மை மண்டபம், வள்ளியம்மை உயர்நிலைப் பள்ளி, நாராயணசாமி மாணவர் இல்லம், நாகப்பன் நகர் முதலியவற்றைக் கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 13—8—1971 அன்று திறந்து வைத்தார்கள்.

அன்று தில்லையாடியே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அன்று முதல்வர் ஆற்றிய உரை தமிழ் மறவர்களின் தியாக வரலாற்றை விளக்கும் பேருரையாக அமைந்தது. அந்தப் பேருரையின் ஒரு பகுதி :—

'' இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கொண்டாடவில்லை என்று பாராட்டத்தக்க அளவுக்குத் தமிழகத்தில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை நாம் கொண்டாடிக் காட்டினோம். அப்படிக் கொண்டாடப்பட்ட போதுதான், காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு உயிரைப் பணயமாக வைத்து, அவருக்கு உற்ற தோழர்களாக இருந்து கொண்டு, சிறைச்சாலைக்குச் சென்றால் அவர்கூடச் சென்று, நாடு கடத்தப்பட்டால் அவரோடு நாடு கடத்தப்பட்டு நலிந்து, வாழ்வை நாசமாக்கிக் கொண்ட தமிழ் மறவர்களுக்கு தமிழ் மறத்திக்கு நாம் ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டோம்.

தில்லையாடியிலேதான் வள்ளியம்மையின் பெற்றோர்கள் பிறந்தார்கள். 16 வயதுடைய வள்ளியம்மை தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் உத்தமர் காந்தியுடன் பணிபுரிந்து சிறைச்சாலைக்குச் சென்று, சிறைச்சாலையிலே கடுமையான நோய்வாய்ப்பட்டு—சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற பிறகும் மரணப் படுக்கையில் அந்த 16 வயது இளமங்கை கடைசி மூச்சு இழுத்துக் கொண்டிருக்கிற நேரத்திலும் — காந்தியடிகள் வள்ளியம்மையைப் பார்த்து, 'என்னால் அல்லவா உனக்குஇந்தக் கஷ்டம்' என்று கேட்ட நேரத்தில், ''இன்னும் இது போன்ற பல கஷ்டங்களை நாட்டுக்காக, நியாயத்துக்காக அனுபவிக்க நான் தயாராக இருக்கிறேன்'' என்று கூறினாள். ''மீண்டு மொருமுறை சிறை செல்ல உனக்குத் துணிவிருக்கிறதா'' என்று காந்தியார் கேட்க, ''ஒருமுறையல்ல, பலமுறை சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்று கூறித் தனது இறுதி மூச்சை 16 வயது நிரம்பிய வள்ளியம்மை விட்டாள் என்று காந்தியடிகளே கண்கலங்க எழுதிக் காட்டியிருக்கின்றார்.

காந்தியடிகளோடு இருந்த நாகப்பன், நாடு கடத்தப்பட்டு மாண்டான். நாகப்பன் மாண்டபிறகு நாகப்பனுடைய மனைவி, தன் குழந்தைகளோடு தில்லையாடிக்கு வந்து சேர்ந்தாள். உத்தமர் காந்தி அவர்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்து, சென்னைக்கு வந்து முதன் முதலாகக் கிராமங்களிலே அடியெடுத்து வைத்தார் என்றால், அது தில்லையாடி கிராமம் தான் ; அந்தத் தில்லையாடிக் கிராமத்தில் அடியெடுத்து உள்ளே வருகிற நேரத்திலே தான் அரிசனங்களைப் பார்த்தார்; '' இவர்கள் எல்லாம் யார் —இவ்வளவு அவல நிலைகளுடன் வாழ்கிறார்களே — ஓட்டைக் குடிசையில் வாழ்கிறார்கள்— ஒட்டுத் துணி உடுத்துகிறார்கள் —இவர்கள் எல்லாம் யார் ?'' என்று உருக்கத்தோடு கேட்டார்.

அவருக்கு அளிக்கப்பட்ட பதில்—இவர்களெல்லாம் உங்களோடு தென்னாப்பிரிக்கப் போராட்டத்திலே ஈடுபட்ட நாராயணசாமி, நாகப்பன், வள்ளியம்மை போன்றோரது சாதியைச் சேர்ந்தவர்கள் —அரிசன மக்கள் என்று அவருக்கு எடுத்துச்சொல்லப்பட்டது.

## அட்டை சொல்லும் நிகழ்ச்சி

அந்த அரிசன மக்களுக்காக உழைக்க வேண்டுமென்ற வீரசபதத்தைக் காந்தியடிகள் எடுத்துக் கொண்ட இடமே தில்லையாடி கிராமம்தான்.

அந்தச் சபதம் இன்று படிப்படியாக, ஆனால் உறுதியாக நிறைவேற்றப் பட்ட காட்சியினை இங்குக் காண்கிறீர்கள்.

நாகப்பனின் மனைவியைச் சந்தித்து, நாகப்பனின் மறைவுக்காகக் காந்தியார் வருந்திய போது தன் கணவனைப் பறிகொடுத்த துக்கத்தில் நாகப்பனின் மனைவி காந்தியடிகளைப் பார்த்து, "உங்களால்தான் என் கணவர் மாண்டார்" என்று அழுது புலம்பியதும், அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் காந்தியடிகள் "அம்மையே நீயும் உன் குழந்தைகளும் என்னோடு வந்து சபர்மதி ஆசிரமத்தில் இருந்து விடுங்கள்" என்று அவர் அழைத்தார்—அந்த அம்மையார் உடன்படாத காரணத்தினால் பிறகு வெரெல்லம் கூடிப் பேசி—நாகப்பனின் இரு குழந்தைகளில் ஒரு குழந்தையைத், தானே வளர்ப்பதாக அழைத்துச் சென்று, தானே வளர்த்து, காந்தியடிகள் கொல்லப்படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் தான் அவன் சபர்மதி ஆசிரமத்தில் மாண்டான் என்கிற சரித்திரக் குறிப்புகளையும் நாம் பார்க்கிறோம்.

இந்தத் தில்லையாடியிலேதான் வீர மறவன் நாராயணசாமியின் பெற்றோர்களும் பிறந்தார்கள். தமிழின் அருமையான கவிதைகளை இயற்றிய அருணாசலக் கவிராயர் 1812-ஆம் ஆண்டிலே பிறந்தார் என்ற புகழும் இந்தத் தில்லையாடிக்கு உண்டு.

இந்தத் தில்லையாடியிலே யிருந்த வேதியப் பிள்ளை என்பவர் தென்னாப்பிரிக்காவிலே காந்தியடிகளோடு நட்புக்கொண்டவர். அவரைப் பற்றி ஒன்று சொல்வார்கள். வ. உ. சிதம்பரனாரின் நிலையை உணர்ந்து வேதியப் பிள்ளை அவர்கள் அடிக்கடி அவருக்குப் பண உதவி செய்து வந்தார் என்று சொல்வார்கள். சிதம்பரனார் வேதியப் பிள்ளையிடத்திலே சொன்னாராம், 'எனக்குப் பிறக்கின்ற முதல் குழந்தை ஆண் பிள்ளையாக இருந்தால் உங்களது பெயரைத்தான் வைப்பேன்' என்றாராம். ஆனால் சிதம்பரனாருக்குப் பிறந்த முதற் குழந்தை பெண் குழந்தையாகப் போய்விட்டது. ஆனாலும் சிதம்பரனார் அவரது நினைவால் வேதவல்லி என்று பெயரிட்டாராம். அந்த வேதியப் பிள்ளை பிறந்த இடமும் இந்தத் தில்லையாடிதான். இப்படிப் பல்வேறு புகழ்கள் இவ்வூருக்கு . . . .

## தேக்கு மரத் தேகத்தை தீயின் நாக்குக்கு இரையாக்கியோரை மறவோம்!

காந்தியடிகளுக்குத் தென்னாப்பிரிக்காவிலே தமிழைக் கற்றுக் கொடுத்த கன்னியப்பச் செட்டியார் என்பவரும் இந்தத் தில்லையாடியிலேதான் பிறந்தார்.

வீர மணமும்—விவேகமும் தமிழார்வமும்— கொந்தளித்துக் கொதித்து இந்த மண்ணை 1812-ஆம் ஆண்டிலிருந்து அலங்கரித்தது என்று சொல்லலாம்.

வள்ளியம்மாளுக்கு இன்றைக்குச் சிலையெடுத்திருக்கிறோம்; ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கிறோம். அந்த 16 வயதுப் பாவையின் பெயரால் பள்ளிக்கூடங்கள்— மருத்துவ மனைகள்—நாகப்பன் பெயரால், வள்ளியம்மை பெயரால் அரிசன மக்கள் வாழ் இடங்கள் இவைகளெல்லாம் அமைத்திருக்கிறோம்.

இன்னும் தியாகிகளுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் முடிந்து விடவில்லை.

மொழிக்காகத் தமிழகத்தில் போராடியவர்கள் ஏராளம் உண்டு. மொழிக்காகப் போராடிச் சிறை சென்றவர்கள் மாத்திரம் அல்ல; அடக்கு முறைகளைத் தழுவியவர்கள் மாத்திரமல்ல; தமிழ் வாழ—மொழி செழிக்க—மொழிக்கு ஆபத்து வராது தடுக்க —தன் உடலிலே தீயை வைத்துக் கொண்டு தீப்பிடித்துச் செத்த வீர மறவர்கள் இந்திய பூபாகத்திலே தமிழ் மாநிலம் தவிர வேறெந்த மாநிலத்திலும் கிடையாது.

அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கெல்லாம் நாம் விழா எடுத்தாக வேண்டும். அப்படிப் பட்ட வீர மறவர்கள் பிறந்த கிராமங்களிலெல்லாம் இதைப் போன்ற நினைவுச் சின்னங்களை எழுப்பியாக வேண்டும்.

## மொழிப் போர்த் தியாகிகள் பிறந்த மண்ணில் நினைவுச் சின்னங்கள் அமைப்போம்

வள்ளியம்மை பெயரால் அமைந்துள்ள இந்த வள்ளியம்மை மாநகரிலே நின்று தமிழக அரசின் சார்பாகச் சொல்லுகிறேன். தமிழ் மொழிக்காக—தணலில் விழுந்து தன் தேக்கு மரத் தேகங்களை எல்லாம் தீ நாக்குகளுக்கு இரையாக்கிய தீந்தமிழ்ச் செல்வங்களுக்குத் தமிழக அரசின் சார்பாக—தமிழ்ப் பெருங்குடி மக்களின் பெருந்துணையோடு அவர் பிறந்த ஊர்களிலெல்லாம் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படும்"




அட்டைப்பட விளக்கம்

கடந்த இதழ் அட்டைப் படத்தில் உள்ளவர்கள் (சட்ட மன்ற உறுப்பினர்கள்) யார் என்று விளக்கம் போட்டிருக்கக் கூடாதா? எங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று விட்டுவிட்டீர்களா?

எஸ். லிங்கம், பத்தூர்.

உங்களுக்குத் தெரிந்திருந்தால் மகிழ்ச்சியே! தெரியாதவர்களுக்கு விவரம் இதோ:—

மேலே முதல் வளையத்திலிருப்பவர் பிற்பட்டோர் நல அமைச்சர் திரு க. இராசாராம். இரண்டாவது வளையத்தில் இருப்பவர் இவ்வாண்டின் வெற்றி வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு தர்மலிங்கம்; மூன்றாவது வளையத்தில் உள்ளவர் வை. பாலசுந்தரம். கீழே முதல் வளையத்தில் உள்ளவர்கள் கல்வியமைச்சர் திரு நாவலர், உணவு அமைச்சர் திரு ப. உ. ச.; இரண்டாவது வளையத்தில் உள்ளவர்கள் வேளாண்மை அமைச்சர் திரு அன்பிலும் அவரது அணியினரும்.

மாறுவேடத்தில் இருப்பவர்கள்: பாதுஷா—திரு. சி. வி. ராஜகோபால், குறத்தி—திரு ஆர். ஆர். முனுசாமி, பாம்பாட்டி திரு. பழனிவேலன்.

—(ஆ-ர்)

வழக்கமானவை எங்கே?

'தமிழரசி'ல் அறிவிக்கப்படும் தொடர்பகுதிகள் குறிப்பாக மகளிர்பகுதி, மாணவர் அரங்கம் முதலியனதுவளாமல் தொடர்ந்து வரச் செய்யுங்கள்.

பி. கிருஷ்ண குமார், குடந்தை.

வெள்ளிவிழா மலரில் கொஞ்சம் கவனம்; அக்டோபர் முதல் பாருங்களேன்....

—(ஆ-ர்)


# நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

NLC

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1

FDSNLC946TM

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.

வேலையின் பெயர்—காஞ்சிபுரம் வடிகால் திட்டம்—2-வது கட்டம் கிழக்குப் பிராந்தியத்தில் புதை சாக்கடை, கட்டுமானங்கள் அமைப்பு.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக, இத்துறையின் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்களால் அவரது அலுவலகத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி மாலை 3 மணி வரை, துறைக்குரிய வடிவங்களில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-30 மணிக்கு மேல், மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8-ல் அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 15,160 (ரூபாய் பதினைந்தாயிரத்து நூற்று அறுபது மட்டும்).

(கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி விதிகளில் சொல்லப்பட்டுள்ளபடி, இதர ஏற்கத்தக்க வடிவங்களில் செலுத்த வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 31.05 (ரூபாய் முப்பத்து ஒன்று காசுகள் ஐந்து மட்டும்)

**ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம், நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் டிவிஷன், செங்கற்பட்டு P.W.III-O.R. அவர்கள் கணக்கிலும், விற்பனை வரி XIII Sales D. Misc. I General Sales-tax என்றும் தனித் தனி சலான்களில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்—நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 24, பெரிய மணியகார தெரு, செங்கற்பட்டு. (ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாக அல்லது மணியார்டர் மூலம் அனுப்பலாம்.)

வேலையை முடிக்க வேண்டிய காலம்—இருபத்தி நான்கு மாதங்கள்.

**மேற்பார்வைப் பொறியாளர்**

பொதுச் சுகாதார பொறியியல் சர்க்கிள்,

தமிழ்நாடு குடிநீர்— வடிகால் வாரியம்

எழும்பூர், சென்னை-8.

---

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் பொதுச் சுகாதாரப் பொறியாளர் துறை, பொதுப் பணித்துறை நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை அல்லது அவை போன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளரால் (பொ.சு.பொ.) எண். 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் அவரது அலுவலகத்தில் 14-9-1971 பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : கோவில்பட்டி குடிநீர் வழங்கு திட்டம் II-வது கட்டம் வழங்கும்முறை-ஸி.ஐ.எ.ஸி. அல்லது பி.வி.ஸி. பைப்புகள் ஸ்பெஷல்கள் இடுதலும் இணைத்தலும். தாழ்ந்த மட்ட பிராந்தியம் மாவட்டம் II —பகுதி II அடங்கல் மெயின் II மெயின் 2 ஒ.எஸ்.எல்.எஸ் 3415 அடி வரையிலுமுள்ள எஸ். எம். 2, (1040 எம்) அவற்றின் தொடர்புடைய கிளைகள்.

ஒப்பந்த வடிவம் : கே. 2.

கட்டுத் தொகை : ரூ. 680 (ரூபாய் அறுநூற்று எண்பது மட்டும்).

இந்தத் தொகை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூல செலானாக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் காரண்டியாக நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் கோவில்பட்டி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை : ரூ. 5.18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் 10-9-1971 பிற்பகல் 5 மணி வரையிலும் பெறலாம்.

**கே. கோவிந்தமேனன்**
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ.சு.பொ.) மதுரை-2

தேதி : 11-8-1971

## தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, ஒப்பந்த விவர அறிக்கை

தமிழ் நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னாரது ஆணைப்படியும், திருநெல்வேலி வட்டம், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 3—9—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடிகாரப்படி) இலக்கம் 18, திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி—2-ல் உள்ள அன்னாருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3—15 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி. மீ. 14.8-ல் பாலம் கட்டுதல். | 9,400 |
| 2. தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி. மீ. 3.2-ல் பாலம் கட்டுதல். | 9,095 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், வடிவங்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலை ஒன்றுக்கு ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும் விற்பனை வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 19—8—1971-ஆம் தேதியிலிருந்து 1—9—1971-ஆம் தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் அன்னாரது அதிகார எல்லைக்கு உட்பட்ட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான செல்லுச் சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

18, திருச்செந்தூர் ரோடு,
பாளையங்கோட்டை.

பூ. சு. சதாசிவசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,
திருநெல்வேலி மாவட்டம்.



## தமிழ்நாடு மின்சார வாரியம்

பரம்பிக்குளம்—ஆழியாறு
நீர் மின் திட்டம்,

மின்பாறை அஞ்சல்,

கோயம்புத்தூர் மாவட்டம்.

### ஒப்பந்த விவரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்மின் திட்டம் மத்திய பண்டகசாலையில் உள்ள நிராகரிக்கப்பட்ட லோகோ (Loco), கழிவு இரும்புத் துண்டுகள், பழைய டயர்கள், செம்புத் துகள்கள், மற்றும் இதர வழக்கொழிந்த பலவகை கழிவுப் பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 24—9—1971 அன்று 15 மணி 30 நிமிடம் வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 24—9—1971 அன்றே 16·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் கோயம்புத்தூர் மாவட்டம், மின்பாறை அஞ்சல் மத்திய அலுவலகத்தில் 6—9—1971 முதல் எந்த வேலைநாட்களிலும் பணமாகவோ அல்லது பண விடைத்தாள் மூலமாகவோ ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ. 5 திருப்பித்தரத்தக்கதல்ல.

நிராகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களுக்கு என்ன விலை குறிக்கப்படுகிறதோ அதில் பத்து சதவீதம் (10%) பிணைத் தொகையாகக் கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி அதற்கான இரசீதையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பொள்ளாச்சி கிளையின் கேட்பு உண்டியலாகவோ (Demand Draft) ஒப்பந்த சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். பிணைத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்கு சாதாரண அஞ்சலில்தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் பொழுது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்—ஆழியாறு
நீர் மின் திட்டம்.

தந்தி : PARAMBY DEL/
POLLACHI.

தொலைபேசி : 39,
மலையாண்டி பட்டனம்.

## ஒப்பந்தம்

### ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு

மருந்துகள், டிரஸ்ஸிங்க்ஸ், அறுவைக் கருவிச் சாதனங்கள் ஆகியவை சென்னை இராயப் பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கும், சைதாப்பேட்டை அரசினர் மருத்துவ நிலையத் திற்கும்சென்னை பட்டினப்பாக்கம் டிஸ்பென்ஸரிக்கும் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி தொடங்கி 1972-ம் வருடம் மார்ச் 31-ஆம் தேதி முடிய வழங் குதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 10-ஆம் தேதி பிற்பகல் 2 மணி வரையில் அரசினர் ராயப் பேட்டை மருத்துவமனை, சென்னை -14 அவர்களால் வரவேற்கப்படு கின்றன.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைப் பத்திரங்களும் ஒப்பந்தப் புள்ளி வடிவங்களும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) மூன்றரைச் சத வீத வணிக வரியும் 5 சதவீத சர்சார்ஜு வணிக வரியும் செலுத்தி, மேற்பார்வையாளர் அரசினர் இராயப்பேட்டை மருத் துவமனை சென்னை, அவர்களிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம். எந்த விதச் சூழ்நிலையிலும் இத் தொகைகள் திருப்பிக் கொடுக்கப் படமாட்டா. இக்கட்டணம் இந்திய ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஏதாவது அரசுக் கருவூ லத்திலோ 'XXII எம்டிஎல். மிஸலேனியஸ்' என்ற கணக்கிலும் XII விற்பனை வரி வரவினம் பொது விற்பனை வரி என்ற தலைப் பிலும் முறையே செலுத்தப்படல் வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்டு, மருந்துகள் டிரஸ்ஸிங்ஸ், அறுவைச் சாதனக் கருவிகள் வழங்குவதற்கான ஒப் பந்தப் புள்ளிகள் தேதி 10-9-1971 எனக் குறிப்பிட்டு சூப்பிரண் டண்டு, அரசினர் இராயப் பேட்டை மருத்துவ மனை, சென்னை-14 என்ற முகவரியிட்டு அனுப்ப வேண்டும்.

**டாக்டர் எம். நாராயணன், எம்.எஸ்.**

மேற்பார்வையாளர்,
அரசினர் இராயப்பேட்டை
மருத்துவமனை, சென்னை-14.
(தமிழ்நாடு ஆளுநருக்காகவும்
அவர் சார்பிலும்)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்வாரியம்

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

மின்வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்டவைகளை சப்ளை செய்யத் தனிக் குறிப்பு எண். இ. 1494 உடன் (Specification No. E 1494) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அடியில் கையெழுத்திட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன.

| எண். | விவரம். | தனிக் குறிப்பு எண். | தனிக் குறிப்பின் விலை. | கட்டுத் தொகை. | சேர வேண்டிய நாளும் நேரமும். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. | ரூ. | |
| 1 | எண்ணூர் அனல் மின் நிலையத்திலுள்ள சாண்ட்பார் ஒர்க்சுக்கான (Sand bar works) மின் விளக்கு அமைப்புகளை (lighting installations) சப்ளை செய்வதும் நிர்மாணிப்பதும். | E. 1494 | 20 | 1,000 | 6–10–1971 நண்பகல் 12 மணி. |

சேர வேண்டிய நாளன்று மாலை 3 மணியளவில் எந்தெந்த ஒப்பந்ததாரர்கள் வந்திருக்கிறார்களோ அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் பிரிக்கப்படும். சேர வேண்டிய நாளுக்குப்பின் வரும் ஒப்பந் தங்கள் கவனிக்கப்படமாட்டாது. தனிக் குறிப்பின் நகல் (Copy of specification) மேலே குறிப் பிடப்பட்டுள்ள தொகையை ரொக்கமாகவோ அன்றி மணியார்டர் மூலமாகவோ, கணக்கு அலுவலர், (Accounts Officer), சென்னை மின்சாரத் திட்டம் (விநியோகம்), 157, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்பி பின் தனிக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு ரொக்கப் பணம் அனுப்பினதற் கான ரசீதோ, அன்றி மணியார்டர் ரசீதோ இணைத்து முழு முகவரியும் குறிப்பிட்டு அடியில் கை யெழுத்திட்டவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த ஒப்பந்தத்தையோ அல்லது எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்ளாமலிருக்கும் உரிமை வாரியத்திற்கு உண்டு. இந்த ஒப்பந்தங்களைப் பிரித்து அளவினைத் திருத்தி அதன்படி வழங்கும்படியும், நிர்ணயிக்கும்படியும் என்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களைக் கேட்டுக் கொள்ளவும் வாரியத்திற்கு உரிமை உண்டு.

சேரவேண்டிய காலத்திற்குப் பின்னால் வரும் ஒப்பந்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

மேற்பார்வை பொறியாளர்,
தொழில் நுணுக்கம் (மின்சாரப் பிரிவு).

157, அண்ணா சாலை,
சென்னை.

## ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு அரசு.

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை வட்டம்.

சென்னை 25.

### ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 22–9–1971 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்:—

| எண். | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 13/6 முதல் 15/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 4,040 |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 15/0 முதல் 16/8 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 5,190 |
| 3 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 18/4 முதல் 20/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 4,620 |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 20/0 முதல் 21/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 2,910 |

ஒப்பந்தங்கள் 22–9–1971 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர், வாலாஜா தனிக்கோட்டம் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரி வுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 6–9–1971 முதல் 21–9–1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), வாலாஜா தனிக்கோட்டம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), வாலாஜாபாத் தனிக் கோட்டம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத்தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை)

16–8–1971. சென்னை வட்டம், சென்னை-25.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் சார்பிலும் அத்துறைக்கான முறையான வடிவத்தில் பொதுசுகாதாரப் பொறியியல் துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால் அவர்கள் அலுவலகம், 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2-இல் 14—9—1971 மாலை 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அவை திறக்கப்படும்.

வேலையின் பெயர் : கோவில் பட்டி நீர் வழங்கு திட்டம் — இரண்டாவது கட்டம்— வழங்கு முறை. சி.ஐ.எ.ஸி. அல்லது பி.வி.ஸி. குழாய்கள், ஸ்பெஷல்கள், கீழ் மட்டப் பிராந்தியத்திற்காக டிஸ்டிரிக்கு 1-இல் அமைத்தல், இணைத்தல்.

ஒப்பந்த வடிவம் : கே. 2.

கட்டுத் தொகை : ரூ. 1,020.

ஒப்பந்தப் புள்ளியுடன் இத்தொகை கருவூலச் செலான் வடிவிலோ, டிமாண்டு டிராப்டு வடிவிலோ, தேச உடைமையாக்கப்பட்ட வங்கியின் வங்கி கியாரண்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன், கோவில்பட்டி, அவர்கள் கணக்கில் கட்டப்படவேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 5.10 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் டிவிஷன் 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி அவர்களிடமிருந்து 10–9–1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,

மேற்பார்வைப் பொறியாளர்,

(பொ.சு.பொ.) மதுரை-2.

நாள் : 11–8–1971.

ஒ ப் ப ந் த ப் பு ள் ளி

## தமிழ்நாடு மின்சார வாரியம்

செங்கற்பட்டு மின் பெருவட்டம், காஞ்சிபுரம்.

# ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் ரயில்வே சாலையில் உள்ள அவரது அலுவலகத்தில் 7—9—1971 அன்று (முடிவுத் தேதி) பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். சாற்றுக்குறிப்பு 6—9—1971 வரை விற்கப்படும்.

| வரிசை எண். | சாற்றுக்குறிப்பு எண். | பொருட்களின் விபரம். |
|---|---|---|
| 1 | எஸ்.இ.சி./ஓ.டி. 1/71-72 | ஸ்டே செட். |
| 2 | எஸ்.இ.சி./ஓ.டி. 2/71-72 | ஆர்.சி.சி. கம்ப பேக் கிளாம்ப் சாதாரண வகை. |
| 3 | எஸ்.இ.சி./ஓ.டி. 3/71-72 | ஆர்.சி.சி. கம்ப ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை. |
| 4 | எஸ்.இ.சி./ஓ.டி. 4/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 65 ×16 மி.மீ. |
| 5 | எஸ்.இ.சி./ஓ.டி. 5/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 75 ×16 மி.மீ. |
| 6 | எஸ்.இ.சி./ஓ.டி. 6/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 90 ×16 மி.மீ. |
| 7 | எஸ்.இ.சி./ஓ.டி. 7/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 100 ×16 மி.மீ. |
| 8 | எஸ்.இ.சி./ஓ.டி. 8/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 115 ×16 மி.மீ. |
| 9 | எஸ்.இ.சி./ஓ.டி. 9/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 125 ×16 மி.மீ. |
| 10 | எஸ்.இ.சி./ஓ.டி. 10/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 115 ×12 மி.மீ. |
| 11 | எஸ்.இ.சி./ஓ.டி. 11/71-72 | எம்.எஸ். போல்ட்ஸ் அண்ட் நட்ஸ் 125 ×12 மி.மீ. |
| 12 | எஸ்.இ.சி./ஓ.டி. 12/71-72 | பி.ஜி. மெட்டல் 12 மி.மீ. —20 மி.மீ. |

ஒப்பந்தப் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) ஆகும். மேற்படி ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் தலைமைக் கணக்கர் (செலவுப்பிரிவு), செங்கற்பட்டு மின் பெருவட்டம் (Chief Accountant/Expenditure, Chingleput Electricity System, Kanchipuram) இரயில்வே சாலை, காஞ்சிபுரம்-2 என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் (Specification No:) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒப்பந்தங்கள் அதே நாளில் 7—9—1971 அன்று பிற்பகல் 2 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்த தாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வைப் பொறியாளர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம்,
காஞ்சிபுரம்.

## நூல்களுக்குப் பரிசு

# சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

தமிழில் உயர்ந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு வகுத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1–1–1966 முதல் 31–12–1967 வரை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட பத்து வகைகளில் அடங்கும் நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்காக ஏற்றுக்கொள்ளப் பெறும்.

(1) சிறு கதை.

(2) நாடகம்.

(3) கவின் கலைகள்.

(4) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(5) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்,

(6) பௌதிகம், இரசாயனம்.

(7) கல்வி, உணவியல்.

(8) வரலாறு, தொல்பொருள் இயல்.

(9) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(10) சிறப்பு வெளியீடுகள்.

2. மேலும், இத் திட்டத்தின் கீழ் 1–1–1968 முதல் 31–12–1970 வரை அடியிற்கண்ட இருபது வகைகளில் அடங்கும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கவிதை.

(2) நாவல்.

(3) மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.

(4) பிற மொழிகளில் தமிழ்.

(5) மானிடவியல், சமூகவியல், பூகோளம், அரசியல், சட்டம்.

(6) பொருளாதாரம், வாணிகவியல்.

(7) கணிதம், வானவியல்.

(8) பொறியியல், தொழில் நுட்பவியல்.

(9) மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம்.

(10) தத்துவம், சமயம், அளவியல், அறவியல்.

(11) சிறு கதை.

(12) நாடகம்.

(13) கவின் கலைகள்.

(14) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(15) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.

(16) பௌதிகம், இரசாயனம்.

(17) கல்வி, உணவியல்.

(18) வரலாறு, தொல்பொருள் இயல்.

(19) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(20) சிறப்பு வெளியீடுகள்.

3. ஒவ்வொரு தலைப்பிற்கும் முதற்பரிசு ரூ. 2,000·00-மும் இரண்டாவது பரிசு ரூ. 1,000·00-மும் அளிக்கப்படும். ஒரு தலைப்பின் கீழ்ப் பரிசுக்குத் தகுதியுள்ள நூல் அத் தலைப்பின் கீழ் அமைந்துள்ள எப் பொருளிலும் இருக்கலாம்.

4. ஒரே தலைப்பின் கீழ் இரு முறை யாதேனும் ஒரு பரிசை முன்னரே பெற்றுள்ள நூலாசிரியர் அதே தலைப்பின் கீழ் மூன்றும் முறையாகப் பரிசு பெறத் தகுதி உடையவரல்லர். மேலே சொல்லப்பட்ட தலைப்புகளில் பரிசளிப்புக்காக நூல்களை அனுப்பும்போது எந்தத் தலைப்பில் எந்த நூல் அனுப்பப்படுகிறதோ அந்தத் தலைப்பில் இதற்கு முன் அந் நூலாசிரியர் இரு பரிசுகளைப் பெறவில்லை என்பதற்குரிய உறுதிமொழியையும் நூலுடனே அனுப்ப வேண்டும். எந்தத் தலைப்பின் கீழ் நூல் வெளியிடப்பட்டுள்ளது; அது வெளியிடப்பட்ட தேதி ஆகிய விவரங்களையும் நூலாசிரியர் தெரிவிக்க வேண்டும்.

5. பரிசுப் போட்டிக்கு நூல்களை அனுப்ப விரும்பும் நூலாசிரியர்கள், நூலின் ஆறு படிகளைத் "தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம் (இரண்டாவது மாடி), சென்னை-1" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நூல்களை 15–10–1971-ஆம் நாளுக்கு முன்னதாக அனுப்ப வேண்டும்.

முத்து. இராசாக்கண்ணனார்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

## மறு ஒப்பந்த அறிவிப்பு

### தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை
சென்னை வட்டம்

### கால மறு ஒப்பந்த விளம்பரம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 15—9—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண். | வேலை விபரம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | கிழக்குக் கடற்கரைச் சாலையில் தென் பாக்கம் அருகே கழிமுகத்தின் குறுக்கே சங்கிலித் தொடர் 3873·94 முதல் 6047·94 வரை மூன்று பாலங்கள் கட்டி, பாலங்களை இணைக்கும் அணுகு சாலைகள் அமைத்தல். .. .. | 41,695 |

ஒப்பந்தங்கள் 15—9—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரை படங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை அலுவலகத்தில் ரூ. 51·75-க்கு (விற்பனை வரியுட்பட) ஒவ்வொரு வேலைக்கும் செலுத்தி, 27—8—1971 முதல் 14—9—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.பொ.ப.) செங்கை, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.கி.போ.ப), செங்கை, பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

சென்னை-25,
நாள் : 12-8-1971.

மேற்பார்வைப் பொறியாளர்
(நெ.கி.ப.),
சென்னை வட்டம்.

## போட்டோ-ஓவியப் போட்டி

### வன விலங்கு வார விழா 1971

1971 அக்டோபரில் தமிழ்நாடு அரசு வனத் துறை நடத்தும் போட்டோ படங்கள், ஓவியங்கள் போட்டி.

வனவிலங்கு போட்டோ படங்கள், ஓவியங்கள் போட்டிக்கு, படங்கள் மாநில வனவிலங்கு அலுவலர், வனத்துறைத் தலைமை கன்சர்வேட்டர் அலுவலகம், 81-சி, அண்ணு சாலை, சென்னை-6 அவர்களால் 15—9—1971 வரை வரவேற்கப்படுகின்றன. இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் தக்க பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஓவியங்கள், போட்டோ படங்கள் அளவு 15×12-க்கு மேற்படலாகாது. (மற்ற அளவுகளில் வருபவை—கலை, கைத் தொழில் பள்ளியைச் சேர்ந்தவை தவிர்த்து—நிராகரிக்கப்படும்).

பி. ஆர். முகமது பஷீர்,
மாநில வனவிலங்கு அலுவலர்,
சென்னை-6.

## நீதித்துறை

### ஸ்மால்காஸ் கோர்ட்டு
### மூன்ருவது ஜட்ஜ்

SUIT No. 1874 of 71.

(1) V.S.S மொஹிதீன் தம்பி.
(2) N.H. சித்தி பல்கீஸ்.
இவர்களிடமிருந்து அங்கிகாரம் பெற்றபவர் ஏஜண்ட் A.K.M. ஜலைது வாதி.

V.S.

சௌந்தரா பிரிண்டர்ஸ்
—பிரதிவாதி.

To.
சௌந்தரா பிரிண்டர்ஸ்,
57, சர் முஹம்மது உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.

தங்கள் மீது வாடகை பாக்கிக்காக ரூ. 1140-ம் செலவு தொகைக்கும் வட்டி உள்பட சேர்த்து தாக்கல் செய்த தாவா 18—9—1971 அன்று ஸ்மால் காஸ் கோர்ட்டு 3-வது ஜட்ஜ் அவர்கள் முன்னிலையில் காலை 11 மணிக்குக் கடைசி வாய்தாவாகப் போட்டிருக்கிறது. அன்று தாங்கள் ஆஜராகத் தவறிஞல் ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்பு வழங்கப்படும்.

A. J. அப்துல் ரஜாக்.
வாதியின் வக்கீல்
சென்னை-1, (25—8—1971)

## ஒப்பந்தப் புள்ளி.

### தமிழ்நாடு மின்சார வாரியம்,

கே. 2 ஒப்பந்தம்.

[குறிப்பு எண் SCE. 407.]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் "குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்த தாரரின் பெயரும்" எழுதப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி அன்று மாலை 3·30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலையே 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப் படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன் வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| SCE. 407 | எண்ணூர் அனல் மின் திட்டம்—கட்டடங்களுக்கு மின்னல் இடிதாங்கிகள் பொருத்துதல். | 1,000 | 10 | 23—9—1971. |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 10 செலுத்தி கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற் கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி, காலத்திற்குள் சமர்ப்பிக்கப் படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ்வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவர்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணுமல் போனுல் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந் தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

தொலைபேசி எண் : 59556 (5 லைன்ஸ்).
தந்தி : "ENTERMAL"

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

## ஏல விற்பனை

### மர ஏல விற்பனை அறிவிப்பு

கீழ்க்கண்ட தோராயமான அளவுற்ற மரங்கள் கீழ்க்கண்ட மரக் கிடங்குகளில் அவைகளுக்கு எதிரில் குறிக்கப்பட்ட தேதிகளில் நீலகிரி மாவட்ட வன அலுவலர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் நடத்தப்படும். ஏலம் காலை 9 மணிக்குத் தொடங்கப்படும்.

ஏலம் நடக்குமிடம்—

மத்திய மரக்கிடங்கு, கார்குடி சாலை ஓரக்கிடங்கு, தொரப் பள்ளி.

ஏலத் தேதி—
9—9—1971

| இனங்கள். | தோராயமான அளவு. |
|---|---|
| 1. ஈட்டி | 10 கன மீட்டர் |
| 2. தேக்கு | 140 ,, |
| 3. சிரிலியா | 100 ,, |
| 4. மத்தி | 175 ,, |
| 5. ஹொன்னை | 50 ,, |
| 6. வெண்தேக்கு | 75 ,, |
| | 550 ,, |

ஏலம் நடக்குமிடம்—
மத்திய மரக் கிடங்கு, சேரம்பாடி.

ஏலத் தேதி—
14—9—1971

| இனங்கள். | தோராயமான அளவு. |
|---|---|
| 1. ஈட்டி | 20 கன மீட்டர். |
| 2. அயினி | 230 ,, |
| 3. வெண்தேக்கு | 55 ,, |
| 4. பலவகை | 79 ,, |
| | 384 ,, |

ஏனைய பிற விவரங்கள் நீலகிரி மாவட்ட வன அலுவ லகத்திலோ அல்லது முதுமலை, சேரம்பாடி வனச்சரக அலுவ லகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

உதகமண்டலம்,
11—8—1971.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு 3—9—1971 மாலை 5·00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன :

நீலகிரி மாவட்ட சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தமிழ் நாடு தொழில்கள் சபார்டினேட் சர்விசில் டெக்னிகல் அசிஸ்டண்ட்—ஒரு நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650

வயது : 1—7—1971-ல் 45 வயதுக்குக் கீழ்.

தகுதிகள் : (1) பி.எஸ்ஸி. (வேளாண்மை) பட்டப்படிப்பு; (2) தேயிலை பயிர் செய்வதில் அனுபவம்.

தேயிலைத்தோட்டங்களுக்கு இரசாயன உரங்கள், எரு வகைகள் பயன் படுத்துவதிலும் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக, சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் தேயிலைத்தோட்டங்களில் பல்வேறு பருவங்களில் பூச்சி, பூஞ்சாள மருந்துகள், கலவை முறைகள் தேர்விலும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

2. தமிழ்நாடு மெடிகல் சபார்டினேட் சர்வீசில் ஸ்டடஸ்டிஷியன்—ஒரு நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 350—15—500—20—600

வயது : 1—7—1971-ல் 30 வயதுக்குக் கீழ்.

தகுதி : ஸ்டடிஸ்டிக்ஸை முக்கியப் பாடமாகக் கொண்ட பட்டப் படிப்பு.

3. தமிழ் நாடு கல்வி சபார்டினேட் சர்விஸ்களில் அரசினர் இஞ்சினியரிங் பாடங்களுக்கு (6 சிவில் இஞ்சினியரிங் 3 மெக்கானிகல் இஞ்சினியரிங் 2 எலெக்ட்ரிகல் இஞ்சினியரிங் 1 மெட்டலர்ஜி 4 எலெக்ட்ரானிக்ஸ் செய்திப் போக்குவரத்து இஞ்சினியரிங்) அசோசியேட் லெக்சரர்கள்—பதினறு நியமனங்கள்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 475—25—650—30—800

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) சம்பந்தப்பட்ட இஞ்சினியரிங் பிரிவுகளில் மாஸ்டர்ஸ் டிகிரிஅல்லதுமுதல் வகுப்பு பாச்சிலர் டிகிரி ; அத்துடன் (2) பல்கலைக் கழகப் பட்டப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்யும் நிறுவனத்தில் இந்தப் பதவி சம்பந்தப்பட்ட இஞ்சினியரிங் பிரிவில் ஒரு ஆண்டுக்குக் குறையாமல் போதனை அனுபவம்.

4. அரசினர் பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்விசில் பொறியியல் அல்லாத பாடங்களில் அசோசியேட் லெக்சரர்கள்—15 நியமனங்கள் (கணக்கு 6, கெமிஸ்ட்ரி 4, ஜியாலஜி 2, ஆங்கிலம் 3).

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 475—25—650—30—800.

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதிகள் : (1) சம்பந்தப்பட்ட பாடத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மாஸ்டர்ஸ் டிகிரி (தேர்வு மூலம் அல்லது ஆராய்ச்சி மூலம்) ; (2) பல்கலைக் கழகப் பட்டப் படிப்புத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்செய்யும் நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட பாடத்தில் ஒரு ஆண்டுக்குக் குறையாமல் போதனை அனுபவம்.

ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. அங்கவீனமுற்றவர்கள் விஷயத்தில் ஸ்டடஸ்டிஷியன், பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பாடங்களில் அசோசியேட் லெக்சரர்களாக நியமனமாவதற்கு 10 ஆண்டுகள் வரை வயது மேல் வரம்பு தளர்த்தப்படும். தங்கக்கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய மகன்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் முன்னாள் தேசிய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர், இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜன்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவைகளிலிருந்து, கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும், கிழக்கு வங்கத்திலிருந்து குடி பெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா, ஆகிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்பட தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் " செயலாளர், தமிழ் நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 " என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக்கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப், பெற்றுக் கொள்ளலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

ஆர்ஸி. எண். 19091/71, டி-5. நாள்: 28-7-1971.

வேலையின் பெயர்—நாமக்கல் அரசினர் மாதர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் தளம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம், தர்மபுரி சர்க்கிள், சேலம்—4 அவர்களால் 6—9—1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3—15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகைப்பணம் (செலான் வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெப்பாசிட்டு வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டாகவோ மாநில அரசின் கடன் பத்திரங்களாகவோ—அல்லது தமிழ் நாடு மின் வாரியப் பத்திரங்களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.) | ரூ. 10,000 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) "P. W. Remittance - III Other remittance" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்க் டிவிஷன்ஸ், சேலம்—5, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். | ரூ. 20. |
| 4 விற்பனைவரி [விற்பனைவரி XII Sales-tax (d)] பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப் படல் வேண்டும். | ரூ. 0·60 |
| 5 வேலை முடிப்பதற்குரிய காலம் ... | 9 மாதங்கள் (ஒன்பது மாதங்கள்.) |
| மேற்பார்வைப் பொறியாளர் சேலம்—தர்மபுரி சர்க்கிள், சேலம் 4 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் கிடைக்கக்கூடிய தேதி. | 16—8—1971 முதல் 3—9—1971 வரை. |

மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் மதிப்பில் 25 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

கால் ரசீது டெப்பாசிட்டுகளும், பிக்சட் டெபாசிட் ரசீதுகளும் தொகை வசூல் நிபந்தனைக்குட்பட்டுக் கட்டுத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்
28—7—1971

## ஏலம்

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெண்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம்: அரசாங்க தடி மண்டி, பேட்டை.

தேதியும், நேரமும்: 6—9—1971 முற்பகல் 9-00.

அளவு: ஏறத்தாழ 300 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்குப் பேட்டை மண்டிச்சிரஸ் அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

## இடமாற்ற அறிவிப்பு

தமிழ் நாடு அரசு சிறு சேமிப்புத் துறை, சென்னை—9, கோட்டையிலிருந்து கீழ்க்கண்ட இடத்திற்கு 26—7—1971 முதல் மாற்றப்பட்டிருக்கிறது.

34, அண்ணாசாலை (மவுண்ட் ரோடு)
(கலைக் கல்லூரி எதிர்ப்புறம்)
சென்னை-2.

புதிய தொலைபேசி எண்: 812223

ரா. குழந்தைவேலு, ஐ. ஏ. எஸ்.,
இயக்குநர்.

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

எண் 11268—எஸ்டி 2/71.

நாள் 26—7—1971.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதற்காகவும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் — வடிகால் வாரியம், கோயம்புத்தூரில் 25–1, 3-வது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்–12-ல் உள்ள அவரது அலுவலகத்தில் கீழ்க் கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 4 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் முன்னிலையிலாவது அல்லது அவரது அதிகாரம்பெற்ற அதிகாரி முன்னிலையிலாவது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர் :

1. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம்—மேல் நீர் மட்டம் 174·00 மீட்டர்கள் : அடி நீர் மட்டம் 171·00 மீட்டர்கள் உள்ள 3·75 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 1-வது பிராந்தியத்திற்காக.

2. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம் முதற் கட்டம் —மேல் நீர்மட்டம் 169·00 மீட்டர், அடி நீர்மட்டம் 165.50 மீட்டர் உள்ள 3 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி.ரிசர்வாயர் 2-வது பிராந்தியத்திற்காக.

2. ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.

3. கட்டுத் தொகை : 1-வது இனத்துக்கு ரூ. 2,825 .00 (ரூபாய் இரண்டாயிரத்து எண் ணூற்றிருபத்தைந்து மட்டும்.)

2-வது இனத்துக்கு ரூ.2,250.00 (ரூபாய் இரண்டாயிரத்து இரு நூற்றைம்பது மட்டும்).

4. வேலை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதம் (ஒவ்வொரு வேலைக்கும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை. ஒவ்வொரு வேலைக்கும்—

ரூ. 10.35 (விற்பனைவரியுள்பட.)

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் விற்பனைக்குரிய காலம் :

16—8—1971 முதல்

23—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் குடியிருப்பு, ஈரோடு-3 அவர்களின் அலுவலகத்தில் உரிய தொகையை ரொக்கமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

### கட்டுத் தொகை

தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகளின், டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ, நிருவாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், ஈரோடு அவர்கள் பெயரால் வாங்கியனுப்ப வேண்டும். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

பொது சுகாதாரப் பொறியியல் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். எம். சாகுல் ஹமீது
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயமுத்தூர்
26—7—1971

## ஒப்பந்தப் புள்ளி

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சேலம் மாவட்டத்து அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு 1–9–1971 முதல் 31–12–1971 வரைக்கும் வேண்டிய மருந்து வகைத் தேவைக்காக முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய இறுதி நாள் 6–9–1971 மாலை 5 மணியாகும். மருந்துகளை சப்ளை செய்ய விரும்புகிறவர்கள் விற்பனை வரி உட்பட ரூ. 5·15 மெடிகல் "XXIII மெடிகல் I இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்டங்கள் 'ஜே' மிசலேனியஸ்" என்ற தலைப்பில் தனிச் செலானில் செலுத்தி ஒரு வேண்டுகோளுடன் சூப்பிரண்டெண்டெண்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம் அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும், நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். செலானில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 5·00 தனியாகவும், விற்பனை வரி 15 காசுகள் தனியாகவும் காட்டப்படல் வேண்டும். இது பற்றி ஏதேனும் மேலும் செய்திகளுக்கு சூப்பிரண்டெண்டென்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம் சேலம் அவர்களுடன் தொடர்பு கொள்க.

ஒப்பந்தப் புள்ளிகள் கொடுப்போர் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்த பின்பு அது பற்றி எந்தவிதத் தொடர்பும் கொள்ளல் ஆகாது.

வி. செல்வராஜ்,

மாவட்ட மருத்துவ அலுவலர், சேலம், மற்றும் மேற்பார்வையாளர் அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம்.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும் சார்பிலும்.

# ஒப்பந்தப்புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரை யிட்ட ஷெடியூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருச்சி ராப்பள்ளி) அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன்கிழமை) அன்று பிற் பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந் தங்கள் அதே தேதியன்றுபிற் பகல் 3-35 மணிக்குத் திறக்கப் படும்.

| ண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 1 | கோடை மலைச்சாலையில் கி.மீ. 110 (மைல் 0/15) உள்ள பாலத்தைத் திரும் பக் கட்டுதல். | 6,300 | கோட்டப் பொறியாளர் (நெகிப), திண்டுக்கல். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள் வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ் சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திண்டுக்கல் விலா சத்திலிருந்து 25—8—1971 முதல் 7—9—1971 வரை வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

வேறு வடிவங்களில் உள்ள ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டெபா சிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ் சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக் குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு கடடுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்க் காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்

மேற்பார்வைப் பொறியாளர் (நெகிப,)
திருச்சிராப்பள்ளி–1.

# பயிற்சி

## தொழில் வணிகத் துறை

சென்னை

### பயிற்சி விளம்பரம்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலையில் 18 மாத காலப் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் (Denotified Tribes) சேர்ந்தவர்களிடமிருந்தும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் (Sheduled castes) சேர்ந்தவர்களிடமிருந்தும் வரவேற்கப் படுகின்றன. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 24 மாணவர்களும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் சேர்ந்த 6 மாணவர்களும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். வேண்டிய மாணவர்கள் ஷி வகுப்பிலிருந்து முன் வரவில்லையென்றால் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆதலின் இப்பயிற்சியில் சேர விரும்பும் மேற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை 10—9—1971-க்குள்ளாகக் கண்காணிப்பாளர், பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலை, முதுகுளத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றாம் படிவம் படித்திருப்பவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். நேரடித் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் விண்ணப்பதாரரின் பெயர், வயது, தகப்பனார் பெயர், வகுப்பு, கல்வித் தகுதி, சொந்த ஊர், தற்போதைய விலாசம் முதலியன தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பயிற்சிக் காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்பேன் என்று பிணைமொழி (உறுதி) எழுதித் தரவேண்டும்.

இயக்குநர்.

தொழில் வணிகத் துறை
சென்னை–5.

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், பார்வதி கக்கன் காலனியில் (புளியந்தோப்பு) பல அடுக்குக்கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 17—9—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரரின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. L.S. ரூ. | தஸ்தாவேஜுகளின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A1, A2 மற்றும் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் C2. | 2,00,000 | 3,000 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்.) |
| 2 | 2 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A3, A4. | 1,60,000 | 2,400 | |
| 3 | 3 | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் A5, A6. | 1,60,000 | 2,400 | |
| 4 | 4 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B1, B2, B3. | 1,80,000 | 2,700 | |
| 5 | 5 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B4, B5, B6. | 1,80,000 | 2,700 | |
| 6 | 6 | 18 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B7, B8, மற்றும் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் C1. | 1,60,000 | 2,400 | |
| 7 | 7 | 6 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு ஒன்று கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரைபடங்களையும், ஒப்பந்த தஸ்தாவேஜுகளையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 6—9—71 முதல் 16—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 17—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்த தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும், காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு.

தாண்டவராயன் சத்திரம்
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித் துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக் கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8-9-1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை டெபாசிட். | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் மைல் 41/7 (கி.மீ. 67/0)ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 5,950 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர் |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 1—9—1971 முதல் 7—9—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். —

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பாங்க் காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்கு ஒப்புதலைப் பெற்று, ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி-1.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

வரைக் குறிப்பு என் SEG.B. 37.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்காகவும், அதன் சார்பிலும், சென்னை—12 பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்தில் டர்பைன்கள், பாய்லர்கள் ஆகியவைகளுக்காக மின்சாரக் கருவிகள், துணை உறுப்புகள் வாங்க, வரைக்குறிப்பு எண், கெடுநாள், ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயர் ஆகியவைகளை உறையில் குறிப்பிட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 15—9—1971, பிற்பகல் 1·00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்தியோ அல்லது துணைத் தலைமை அக்கவுண்டன்ட் (உற்பத்தி), தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின்பிரிட்ஜ் மின்சார நிலையம், சென்னை—12 அவர்களுக்கு வரைக் குறிப்பைத் தெளிவாகத் தெரிவித்து மணி ஆர்டர் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சாதாரண தபாலில் அஞ்சல் சான்றுடன் மட்டுமே அனுப்பப்படும். போக்குவரத்தில் இப்பத்திரங்கள் காணாமல் போனாலும், கிடைக்காவிட்டாலும், தாமதமானாலும் அதற்கு வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மாற்றப்படுவதற்கு உரியவை அல்ல. எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

ஒப்பந்தப் புள்ளிதாரர், கட்டுத்தொகையாக ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) ரொக்கமாக, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி, அந்த ரசீதை, ஒப்பந்தப் புள்ளியுடன் வைத்து அனுப்ப வேண்டும். துறைக்குரிய வடிவத்திலும், கட்டுத் தொகை, செலுத்தியதற்கு ரசீதும் இல்லாத ஒப்பந்தப் பத்திரங்களும், உரிய நாள் உரிய நேரத்திற்குள் வராதவைகளும் நிராகரிக்கப்படும். 15—9—1971 மாலை 4 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
M.E.S.
பேசின் பிரிட்ஜ் மின்சக்தி நிலையம்,
சென்னை—12.

## ஒப்பந்தப் புள்ளி

### பால் பண்ணை வளர்ச்சித்துறை

தமிழ்நாடு ஆளுநர்க்காகவும் அவர் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் பொருள்களின் விற்பனைக்கு வரவேற்கப்படுகின்றன.

(1) அகன்ற வாயுடைய டிரான்ஸ்போர்ட் பிளாஸ்குகள்.

(2) பிளாஸ்குகளுக்குரிய டிரான்ஸ்போர்ட் பெட்டிகள்.

(3) செயற்கைக் கருத்தரிப்புகள் (Kit) (கிற்றுகள்),

ஒப்பந்தப் புள்ளிகளும் விளக்கமான ஒப்பந்த நிபந்தனைகளும், ஆணையர், பால் உற்பத்தி கால்நடை வளர்ச்சி அலுவலகம், சென்னை-51 என்ற இடத்தில் அலுவலக நாட்களில் ரூபாய் 10-ம் $3\frac{1}{2}$ சதவீதம் வணிக வரியும் 5 சதவீதம் சர்சார்ஜு வணிக வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 15—9—1971 முற்பகல் 11 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றையத் தினமே முற்பகல் 11-15 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் அல்லது அவர்களது அத்தாட்சி பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு,

ஆணையர்.

---

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு-

### தமிழ்நாடு மின்சாரவாரியம்,

குறிப்பு எண். சி. 1102.

எண்ணூர் அனல் மின் திட்டம்—இரண்டாம் நிலை ஐந்தாவது கொதிகலனுக்கான புகைப்போக்கி வரை வடிவம் கணக்கிடலும், அமைத்தலும் (Design and Construction of an R.C.C. Chimney).

மேலே கூறிய வேலைக்குரிய ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி வியாழக்கிழமை (16—9—71) நண்பகல் 12—00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வைப் பொறியாளர்

தொழில் நுட்பம்

(பொதுவியல்).

157, அண்ணா சாலை,

சென்னை-2.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித் துறை

ஒப்பந்த அறிவிப்பு விளம்பரம்.

18 (பதினெட்டு) லிட்டர் கொள்ளளவுள்ள உலோகப் பாத்திரங்கள் (Metal containers) வழங்குவது சம்பந்தமாக, முத்திரையிட்ட ஒப்பந்த அறிவிப்புகள் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 13—9—71 பிற்பகல் மூன்று மணிக்குள் அல்லது அதற்கு முன்போ ஏற்கப்படும். ஒப்ப அறிவிப்புச் செய்ய விரும்புவோர்கள் எழுத்து மூலமாகக் கேட்டுக் கொண்டால், சாமான்கள் வழங்க வேண்டிய அளவு, நிலை பற்றிய குறிப்புகள் கொடுக்கப்படும். P. W. III other Remittances, Executive Engineer, P. W. D. Soil Mechanics and Research Division, Chepauk, Madras-5. என்ற கணக்குத் தலைப்பில் ஒப்பந்த அறிவிப்பு பத்திரத்துக்கான கட்டணம் ரூபாய் ஒன்றும், XII Sales Tax under State Sales Tax Act. என்ற கணக்கின் கீழ் விற்பனை வரி பைசா மூன்றும் செலுத்தியதற்கான வங்கி கருவூலம் சலான் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

ஒப்பந்த அறிவிப்புப் பத்திரங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் 10—9—1971 பிற்பகலுக்குப் பிறகு ஏற்கப்படமாட்டா.

வெ. வெங்கடநரசிம்மன்,

நிர்வாகப் பொறியாளர், மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், சேப்பாக்கம்,

சென்னை-5.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### ஸ்டேன்லி மருத்துவ மனை சென்னை-

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1—10—1971 முதல் 31—3—1972 வரையிலான 6 மாத காலத்திற்கு மருந்துகள், டிரஸ்ஸிங்குகள், கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவைகளை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட படிவங்களில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் அவர் ஆணைப்படியும் அவர் உத்தரவுப்படியும், டீன், அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனை, சென்னை அவர்களால் 10—9—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்ட படிவங்கள் வேண்டுவோர் அதற்குரிய கட்டணம் ரூ. 2-ஐ (ரூபாய் இரண்டு மட்டும்) " XXIII Medical K. Miscellaneous Receipts " என்ற கணக்குத் தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி ரூ. 0·07-ஐ (ஏழு பைசா மட்டும்) " XII Sales Tax Receipts General Sales Ta " என்ற கணக்குத் தலைப்பிலும் செலுத்திக் கோரிக்கை மனுவுடன் மேற்சொன்னபடி செலுத்தி, பெற்ற இரண்டு செலான்களையும் இணைத்து அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனையின் மெடிகல் ஸ்டோர்ஸ், சென்னை-1 அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சி. பிரபு,

டீன் (கண்காணிப்பாளர்)

அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனை, சென்னை-1.

---

## ஏல விற்பனை

பெட்ரோலினால் ஓட்டப்படும் வில்லீஸ் ஸ்டேஷன் வாகன் 1956 மாடல் போர் வீல் டிரைவ்—$104\frac{1}{2}$ வீல் பேஸ் பதிவு எண் : எம். டி. எய்ச். 2018 உடையதாய் இவ்விலாகாவைச் சேர்ந்த வண்டி, மாவட்டச் சுகாதார அலுவலர், ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை அலுவலகத்தில் இருக்குமிடத்தில் இருக்கும் நிலையில் 8—9—1971 முற்பகல் 10-30 மணிக்குப் பொது ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் வாகனைப் பார்வையிடலாம். ஏலம் பற்றிய நிபந்தனைகளை நேரிலோ அல்லது தனது முகவரியிட்ட கவரோடு வேண்டுகோள் ஒன்று எழுதி அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர்,

சுகாதாரப் பணிகள்,

குடும்பநலத் திட்டம்,

சென்னை.

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## எண்ணூர் அனல் மின் திட்டம்

### ஒப்பந்தப் புள்ளி விளம்பரம்.

குறிப்பு எண் AEP 68 to 76

**1.** மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **அதன் உறையில்** '' தமிழ் நாடு மின்சார வாரியம்-எண்ணூர் **அனல்** மின் திட்டம் குறிப்பு எண் AEP.............. **Supply** of.............'' எனவும் மற்றும் ஒப்பந்தப் புள்ளி **தாரரின்** பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவ **ரால் 17—9—1971** மாலை 3-30 மணி வரை பெற்றுக் **கொள்ளப்படும்.** ஒப்பந்தப்புள்ளி அன்று மாலை 4-00 **மணிக்கு** அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் **முன்னிலையில்** திறக்கப்படும்.

**2.** தேவையான பொருள்கள் அவற்றின் அளவு **குறிப்பு எண், விவரம், முன் பணம்** முதலியன கீழே தரப் **பட்டுள்ளன.**

| தொடர் எண். | விவரம் | எண் விவரம் | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை | கட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. |
| 1 | M. S. Black tubular scaffolding pipes 1·29"/32mm O.D.×8 g Plain ends | AEP 68 | 5 | 1000 |
| 2 | 50mm Standard 90° & Swivel clips for scaffolding pipes | AEP 69 | 5 | 600 |
| 3 | G. I. Barbed wire | AEP 70 | 5 | 500 |
| 4 | Air Filter for P & H 955 A Crane | AEP 71 | 5 | 100 |
| 5 | Frock Chain for 'Unicop 1001' mobile Crane | AEP 72 | 5 | 300 |
| 6 | G. I. Hexagonal Wire netting $\frac{3}{4}$"×24 G. & G.I. Binding Wire 24 SWG | AEP 73 | 5 | 500 |
| 7 | Chain Link Fencing of size 1371·6 m x 1.8288 m | AEP 74 | 5 | 1300 |
| 8 | Self tapping screw GKW make Pan Head $\frac{3}{4}$" long No. 8. | AEP 75 | 5 | 500 |
| 9 | Steel Locker Cup boards (Single and Double units) | AEP 76 | 5 | 700 |

3. துறையினரைச் சார்ந்த வடிவங்களில்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டவைகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

4. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப்புள்ளிகள் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிகள் பத்திரங்களும் மாற்றத் தக்கவையல்ல.

தொலை பேசி எண் : 59556.
தந்தி : ENTERMAL

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**எண்ணூர் அனல் மின் திட்டம்,**
**எண்ணூர், சென்னை-57.**

---

## ஏலம்

# தமிழ்நாடு தீயணைப்புத் துறை

## ஏல விளம்பரம்

கண்டனம் செய்யப்பட்ட தீயணைப்பு இழுக்கும் மோட்டார் வண்டி ஸ்டுடிபேக்கர், 1957-ம் வருட மாடல், எம்.எஸ். ஒய். 8853, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத் துறை காம்பவுண்டில், 1971-ம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ம் தேதி திங்கட்கிழமை, காலை 11·00 மணிக்கு, பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட ஊர்தியை கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

**ஏ. கே. இராமனுதன்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.

---

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு,

குறிப்பு எண்: சி. 1103

எண்ணூர் அனல் மின் திட்டம் —12 வகை நிலையான 3 மாடி வீடு ஒரு எண்ணம் —மனல் தேரி இடத்தில் கட்டுதல்.

மேலே குறிப்பிட்டுள்ள வேலையின் ஒப்பந்த குறிப்பு எண் சி. 1103 பெறுவதற்கான நாள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதிபுதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மேற்பார்வைப் பொறியாளர், தொழில் நுட்பம். (பொதுவியல்).**

157, அண்ணா சாலை,
சென்னை-2.

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை போன்ற அரசுத் துறைகளில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கீழ்க்கண்ட பணிகளுக்காக, தனியாக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மதுரை வட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை மேற்பார்வைப் பொறியாளரால், 13, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை, என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் 20—9—1971 பிற்பகல் 3 மணிவரை பெறப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பாரம். | விலை ரூ. பை. | கட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி I. | K2 | 5·18 | ரூ. 960 (ரூபாய் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்). |
| 2 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி II. | K2 | 5·18 | ரூ. 1,140 (ரூபாய் ஆயிரத்து நூற்று நாற்பது மட்டும்). |
| 3 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி III. | K2 | 5·18 | ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்). |
| 4 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களை விநியோகத் திட்டத்திற்காக இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி IV. | K2 | 5·18 | ரூ. 1,180 (ரூபாய் ஆயிரத்து நூற்றி எண்பது மட்டும்). |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவு, 25, வக்கீல் தெரு, கோயில்பட்டி அலுவலகத்திலிருந்து 18—9—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உறைமீது வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

20—9—1971 மாலை 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (P.H.E.) அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது.

**கே. கோவிந்த மேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (P.H.E.)
மதுரை-2.

தேதி : 18—8—1971.

## தமிழ்நாடு அரசு

## நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை

### அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்தரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம், வெங்கடரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 சேலம்-திருப்பத்தூர் சாலையில் கல் 29/1 (கி. மீ. 46·6) உள்ள குறுகிய மற்றும் மோசமான பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். .. | கிருஷ்ணகிரி. | ரூ. 2,640 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து மேற்படி வேலைக்கு ரூ. இருபதும் உடன் விற்பனை வரியும் செலுத்தி, 1–9–1971 முதல் 14–9–1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்க கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2,
18–8–1971.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.), கோவை-2.



## தமிழ்நாடு மின்சார வாரியம்

### எண்ணூர் அனல் மின் திட்டம்.

### ஒப்பந்த விளம்பரம்.

குறிப்பு எண் SE/ETS 2/71–72

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம்—எண்ணூர் அனல்மின்திட்டம்—உபயோகப்படுத்தப்பட்ட பழுதான சாமான்களை வாங்குவதற்கான ஒப்பந்தக் குறிப்பு எண் SE/ETS 2/71–72" எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 7–9–1971 மாலை 3–30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள பொருள்கள் (பழுதானவை—உபயோகப்படுத்தப்பட்டவை)

ஏர்கம்ப்ரசர், காங்கிரீட் மிக்சர், பம்பு செட்டுகள் மோட்டாருடன் இணைக்கப்பட்டது அல்லது இணைக்கப்படாதது, வேகன் டிரில், டீசல் எஞ்சின்கள், டிரெய்லர்கள், ஓர்க்ஷாப் எந்திரங்கள் பார்கோடிப்பர் முதலியன.

(3) ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(4) இந்த வேலைக்கான முன் பணம் ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனைக்களில் இல்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது, தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்

எண்ணூர் அனல்மின்திட்டம்.
எண்ணூர், சென்னை—57.

தொலைபேசி எண் : 59389
தந்தி : ENTERMAL

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 7–10–1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சபார்டினேட் சர்வீசில் சென்னையிலுள்ள விலங்கு மருத்துவக் கல்லூரிக்கு பயாலஜி டெமான்ஸ்ட்ரேட்டர்—ஒரு நியமனம்: கெமிஸ்ட்ரி டெமான்ஸ்ட்ரேட்டர்கள் மூன்று நியமனங்கள். ; பிசிக்ஸ் டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—மூன்று நியமனங்கள்.

சம்பளம் :—மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—550.

**வயது :** 1—7—1971—ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) டெமான்ஸ்ட்ரேட்டர் (பயாலஜி), ஜுவாலஜியைப் பிரதான பாடமாகவும் பாட்டனியைத் துணைப் பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

(2) டெமான்ஸ்ட்ரேட்டர் (கெமிஸ்ட்ரி), கெமிஸ்ட்ரியை முக்கியப்பாடமாகவும் பிசிக்சைத் துணைப்பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

(3) டெமான்ஸ்ட்ரேட்டர் (பிசிக்ஸ்) பிசிக்சை முக்கியப் பாடமாகவும் கெமிஸ்ட்ரி, கணிதம் ஆகியவைகளைத் துணைப் பாடங்களாகவும் கொண்டு பல்கலைக் கழக மானிய கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

ஷெடியூல் வகுப்பினர் ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசிய மாணவர் படையில் 1–1–1963ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசீய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1–7–1971—ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1–1–1964-ல் அல்லது அதற்குப்பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை பர்மா, ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்பட தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும்'' செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்கழகம், சென்னை-2'' என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறை

சென்னை—செங்கல்பட்டு வட்டம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.

எண். D3/19006/71-4
தேதி 19—8—71

வேலையின் பெயர் : சென்னை, கீழ்ப்பாக்கம் அரசினர் மனநோய் மருத்துவமனையின் செவிலியர்களுக்கு (Nursing staff) குடியிருப்புகள் கட்டுதல்.

தமிழ்நாட்டு அரசுக்காகவும் அதன் சார்பிலும், பொதுப் பணித் துறை மற்றும் அரசின் பிறதுறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிடப்பட்ட பணிக்காக சென்னை—செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 13—9—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3·15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் சென்னை-செங்கற்பட்டு மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை— முழுத் தொகை.
2 கட்டுத் தொகை—ரூ. 4,700.
3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைப்படத்துடன்—ரூ. 20+ 3½ சத விகிதம் விற்பனை வரி.
4 முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.
5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சென்னை—செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.—6—9—71 முதல் 10—9—1971 வரை.
6 ஒப்பந்தப் புள்ளி நாள்—13—9—1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கஜானா அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' PWD Remittances'' என்ற தலைப்பின் கீழ் '' நிர்வாகப்பொறியாளர், கட்டடப் பிரிவு II, சேப்பாக்கம், சென்னை-5 '' என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியும் அதே செலானில் கஜானா அல்லது ரிசர்வ் பாங்கில் '' XII Sales Tax (b) recipts under State Sales Tax Act—General Sales Tax ''

என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்படவேண்டும். செலான் கொண்டுவந்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

பிற விவரங்கள் சென்னை-செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும்.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்.
தேதி : 18—8—71

## ஒப்பந்தப்புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு.

#### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை கோட்டப்பொறியாளர் (நெ.கி.ப.து.) புதுக்கோட்டை அவர்கள் தெற்கு 4-ம் வீதி விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3·00 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·05 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
| --- | --- |
| 1 மதுரை-ஸ்—திருச்சி திண்டுக்கல் சாலை கி. மீ. 363·4 (மைல் 222/4)-ல் உள்ள சிறு பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | கோட்டப் பொறியாளர் (நெ. கி. ப. து.), புதுக்கோட்டை. |

கட்டுத் தொகை டெபாசிட்—ரூ. 2,950.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெ. கி. ப. து.), புதுக்கோட்டை விலாசத்திலிருந்து 2—9—1971 to 7—9—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப் பத்திரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியனவற்றைப் பெறலாம். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை புதுக்கோட்டை கோட்டப் பொறியாளரின் (நெ.கி.ப.து.) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் “ ரெவின்யூ டெபாசிட் ” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கியாரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு இரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். பாங்கு காரண்டி சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவை யில்லாமல் வரும் ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான இரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**எஸ். தனபாலன்,**

கோட்டப் பொறியாளர் (நெ.), புதுக்கோட்டை,

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்வாரியம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

வரைக் குறிப்பு எண் SEG-BB 39.

தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், அதன் ஆணையின்படி, சென்னை-12, பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையத்தின் ‘ B ’ நிலையத்திலுள்ள B & W பாயிலர்களுக்கு ‘ ரிஃப்பிராக்டரிஸ் ’ சப்ளை செய்ய, முழு தொழில் நுணுக்க விவரங்கள், மற்றும் பிற தகவல்களும் அடங்கிய, வரைக்குறிப்பு எண், முடிவு தேதி, ஒப்பந்த புள்ளிதாரரது பெயர் ஆகியவை உறையின் மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) 3 நகல்களுடன் 25-9-71 மாலை 1 மணிக்குள் வந்து சேர நான் வரவேற்கிறேன்.

வரைக் குறிப்பு எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு ரூ.20ஐ (ரூபாய் இருபது மட்டும்) (திருப்பித் தரப்படமாட்டாது) ரொக்கமாக அடியில் கையெழுத்திட்டவர் அலுவலகத்தில் காட்டியோ அல்லது தலைமை அக்கவுண்டன்ட், உற்பத்தி, தமிழ்நாடு மின் வாரியம், பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையம், சென்னை-12 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பியோ ஒப்பந்தப் புள்ளியின் நகல்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி சாதாரண அஞ்சலில் அஞ்சல் சான்றிதழுடன்தான் அனுப்பப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் அனுப்புகையில் தொலைந்துவிட்டாலோ தாமதமாகிக் கிடைத்தாலோ, அன்றி பட்டுவாடா செய்யப்படாவிட்டாலோ, மின் வாரியம் எந்தவிதப் பொறுப்பும் ஏற்காது. எந்தவிதக் காரணங்களும் குறிப்பிடாமல் ஏதாவது அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் தள்ளிவிடும் உரிமை அடியில் கையெழுத்திட்டவருக்கு உண்டு.

ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) கட்டுத்தொகையாக அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகக் கட்டப்பட்டு அதன் ரொக்க ரசீது ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்படவேண்டும். ரொக்க ரசீது இணைக்கப்படாமலோ, அரசுத் துறையின் படிவத்தில் அனுப்பப்படாமலோ, அன்றி முடிவுத் தேதிக்குள்ளாக வராவிட்டாலோ ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். 25—9—1971 மாலை 4 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரரின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

எம்.இ.எஸ். (உற்பத்தி)

பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையம்,

சென்னை-12.

## தமிழ்நாடு மின்சார வாரியம்

### விளம்பர அறிக்கை.

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Seperate Sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பந்தங்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண். | சாற்றுக் குறிப்பு எண். | பொருட்களின் விபரம். | வழங்க வேண்டிய இடம். | சுமாராகத் தேவைப் படும் அளவு. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | டி.ஆர்பி. 1/71-72 .. | போர்ஜ்டு ஜி.ஐ.எல்.டி. பின்கள் மட்டும். | திருச்சி | 4,000 டஜன்கள். | 6—9—71 |
| 2 | டி.ஆர்பி. 2/71-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 63 × 10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 3 | டி.ஆர்பி. 3/71-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 50 × 10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 4 | டி.ஆர்பி. 4/72-72 .. | எம். எஸ். போல்டும் நட்டும் 38 × 10 எம். எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 5 | டி.ஆர்பி. 5/71-72 .. | திருகு கேப் பல்புகள் 40 வாட்ஸ் 250 வோல்ட்டு. | திருச்சி | 25,000 நம்பர்கள். | ,, |
| 6 | டி.ஆர்பி. 6/71-72 .. | ,, | அரியலூர் | 10,000 நம்பர்கள். | ,, |
| 7 | டி.ஆர்பி. 7/71-72 .. | பி. சி. பல்புகள் 40 வாட்ஸ் 250 வோல்ட்டு. | திருச்சி | 25,000 நம்பர்கள் | ,, |
| 8 | டி.ஆர்பி. 8/71-72 .. | எம்.எஸ். கய். (சாதாரண) கிளாம்பு 24' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 10,000 ஜோடிகள். | 9—9—71 |
| 9 | டி.ஆர்பி. 9/71-72 .. | எம்.எஸ்.கய். (விசேஷ) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 10,000 ஜோடிகள். | ,, |
| 10 | டி.ஆர்பி. 10/71-72.. | எம்.எஸ்.கய். கிளாம்புகள் (சாதாரண) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 5,000 ஜோடிகள். | ,, |
| 11 | டி.ஆர்பி. 11/71-72 | எம்.எஸ்.கய். கிளாம்புகள் (விசேஷ) 27' ஆர்.சி.சி. கம்பங்களுக்கு. | திருச்சி | 5,000 ஜோடிகள். | ,, |
| 12 | டி.ஆர்பி. 12/71-72.. | பிங்கான் ப்யூஸ் யூனிட்டுகள் செப்பு உபகரணங்களுடன் 100 அ. 500 வோல்ட். | திருச்சி | 4,000 நம்பர்கள். | ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | டிஆர்பி. 13/71-72.. | பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகள் செப்பு உபகரணங்களுடன் 100 அ. 500 வோல்ட். | திருச்சி | 2,500 நம்பர்கள். | 9—9—71 |
| 14 | டிஆர்பி. 14/71-72.. | இரும்பு மூடி கொண்ட ப்யூஸ் பெட்டிகள் (பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகளுடன்) 30 அ. 500 வோல்ட். | திருச்சி | 5,000 நம்பர்கள். | ,, |
| 15 | டிஆர்பி. 15/71-72.. | இரும்பு மூடி கொண்ட ப்யூஸ் பெட்டிகள் (பீங்கான் ப்யூஸ் யூனிட்டுகளுடன்) 15 அ. 500 வோல்ட். | திருச்சி | 5,000 நம்பர்கள். | ,, |
| 16 | டிஆர்பி. 16/71-72.. | எம்.எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 63 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | 13—9—71 |
| 17 | டிஆர்பி. 17/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 75 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 18 | டிஆர்பி. 18/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 90 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 19 | டிஆர்பி. 19/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும், 100 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 20 | டிஆர்பி. 20/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 113 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள் | ,, |
| 21 | டிஆர்பி. 21/71-72.. | எம். எஸ். ஆறுபட்டை கொண்ட போல்டுகளும் நட்டுகளும் 150 ×16 எம்.எம். | திருச்சி | 10 டன்கள். | ,, |
| 22 | டிஆர்பி. 22/71-72.. | 20 எம்.எம். ஜி. ஐ. பைப்பினாலான வீட்டு சர்வீஸ் கனெக்ஷன் குழாய்கள். | திருச்சி | 4,000 நம்பர்கள். | 15—9—72 |
| 23 | டிஆர்பி. 23/71-72.. | " ஏ " டைப் பெட்டிகள். | திருச்சி | 400 நம்பர்கள். | ,, |
| 24 | டிஆர்பி. 24/71-72.. | தெருவிளக்கு பிக்ஸர்கள். | திருச்சி | 1,000 நம்பர்கள். | ,, |
| 25 | டிஆர்பி. 25/71-72.. | எம். எஸ். வாஷர்கள் 16 எம். எம். | திருச்சி | 5 டன்கள். | ,, |
| 26 | டிஆர்பி. 26/71-72.. | மரத்தாலான மீட்டர் போர்டுகள் 450 ஒ. 300 ×15 எம்.எம். | திருச்சி | 10,000 நம்பர்கள். | 18—9—71 |
| 27 | டிஆர்பி. 27/71-72.. | மரத்தாலான மீட்டர் போர்டுகள் 500 ×350 ×15 எம். எம். | திருச்சி | 5,000 நம்பர்கள். | ,, |
| 28 | டிஆர்பி. 28/71-72.. | அலுமினியம் பெயின்ட். | திருச்சி | 5,000 லிட்டர்கள். | ,, |
| 29 | டிஆர்பி. 29/71-72.. | எல். டி. ஷேக்கில்களுக்கான உலோக சாதனங்கள். | திருச்சி | 2,500 டஜன்கள். | ,, |

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகள் (Tender Specification Forms) பிரதி ஒன்றுக்கு ரூ. 5·00 (ரூபாய் ஐந்து வீதம்) (திருப்பித் தரத்தக்கதல்ல) தலைமை கணக்காயர், செலவுப் பிரிவு, திருச்சி மின் திட்டம், திருச்சி அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பு எண்ணை) குறிப்பிட்டுச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தபாலில் வரும்பொழுது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்தக்குழு பொறுப்பேற்காது. மேற்படிப் பொருட்களைப் பற்றிய குறிப்புகள் முடிவு தேதிக்குக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும். விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு தேதியன்று பிற்பகல் 4 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேற்கண்ட பொருட்களை வழங்குவதற்கான உத்திரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும் எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,

திருச்சி மின் திட்டம்,
திருச்சிராப்பள்ளி.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### குடிநீர், வடிகால் வாரிய சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சென்னை சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில், துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20–9–1971 மாலை 3–00 மணிவரை, இத்துறையில் மேற்பார்வைப் பொறியாளரால் (பொது சுகாதார பொறியியல் சர்க்கிள்) ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3–30 மணிக்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ. சர்க்கிள்) அவர்களால் அல்லது அவரால் அமர்த்தப்படுபவரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 ராமநாதபுரம் நீர் வழங்கு திட்டம், ஒருமித்த கிணறு கட்டுமானம். (Collection well) (Cap. 6.00 Mld.) | 6,000 |
| 2 சிவகங்கா நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 5.0 Mld.) | 5,000 |
| 3 திருச்சி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு (Cap. 50 Mld.) | ரூ. 45,000 |
| 4 கோயில்பட்டி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 15 Mld.) | 15,000 |

இந்த நான்கு வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் பொ.சு. பொறியியல் சர்க்கிள், மதுரை அவர்களால் பெறப்பட்டு அவரால் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 5 ஆம்பூர் நீர்வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | ரூ. 10,000 |
| 6 வாணியம்பாடி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 7 திருப்பத்தூர் நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 10 Mld.) | 12,000 |

5, 6, 7 வேலைகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொ.சு. பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் பெறப்பட்டு, அவரால் திறக்கப்படும்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய கால அளவு : 6 மாதங்கள்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.00 (ரூபாய் பத்து மட்டும். இத்துடன் விற்பனை வரி.)

ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி நிர்வாகப் பொறியாளர் 1/14, எட்வேர்டு எல்லியட்ஸ் சாலை, பொது சுகாதாரம் பொறியியல் டிவிஷன், சென்னை–4 அவர்களிடமிருந்து 25–8–1971 முதல் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகளை வழங்க, கால நீட்டிப்பு தரப்படமாட்டாது.

எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் பகுதியாகவோ, முழுதுமாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரமுள்ள அதிகாரிக்கு உரிமை உண்டு.

தலைமைப் பொறியாளர்,
பொது சுகாதாரப் பொறியியல்
மற்றும் எம்.பி.எல் ஒர்க்ஸ்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்த அறிவிப்பு—எண் 5.

**வேலையின் பெயர்:—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 16—10—1971 அன்று மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4·00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள்வேலை. | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | டர்பைன் பம்புகள் வழங்கல் .. | 8,000 |
| 2 | டவுன் தி ஹோல் டூல் உடன் சேர்ந்த ரோட்டரிக்கு ஒன்று வழங்கல். | 10,000 |
| 3 | நடமாடும் டீசலால் இயங்கும் வெல்டிங் செட்டுகள் வழங்கல். | 1,500 |
| 4 | தண்ணீர் தொட்டி டிரெய்லர், டிரெய்லர் மற்றும் டிராக்டர் வழங்கல். | 3,400 |
| 5 | ஜியோபிசிக்கல், ஜியோகெமிக்கல், ஜியலாஜிக்கல் — தளவாடங்கள், மற்றும் ஹைடிரே மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 |
| 6 | பணிமனைக் கருவிகள் வழங்கல் .. | 1,500 |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 10
விற்பனை வரி 40 காசு.

ஒப்பந்த வடிவம்:-மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம்-9.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி 6—9—1971 முதல் 6—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittance III Other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், வரவினம், பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.






குழந்தைகளே! தங்கமும், தனிக்கருப்பும் இணைந்து மிளிரும் அழகிய உறைகளில் மறைந்து நிற்கும் சுவைப்புதிர்... அதுதான் நியூட்ரின் லாக்டோ நாவல்டீக்கள். அவற்றைச் சுவைத்து மகிழுங்கள், உறைகளை பார்த்துக் கேளுங்கள்!

nutrine

தின்னத்தின்ன திகட்டாத மிட்டாய்!

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)

NCM-23 TAM

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே கையொப்பமிடப்பட்டுள்ளவரால் பின்கண்டவைகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட தனி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அடங்கிய உறையின்மேலே ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்ணும், வந்து சேர வேண்டிய தேதியும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

| விவரிப்பு. | குறிப்பிடு எண். | தேவைப் படும் அளவு. | கட்டுத் தொகை. ரூபாய். | வந்து சேர வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| 1964-ன் ஐ.எஸ். 1021, அமெண்ட்மெண்ட் நெ. 1—1966க்கு ஒத்திருக்கும்படியான காஸ்டிக் சோடா பிளேக்ஸ் (ரேயான் கிரேடு) வழங்குதல். | இ. 1498 .. | 300 மெட்ரிக் டன்கள் | 1,000 | 5-10-1971 காலை 12 மணி. |

விலைகள் எப். ஓ. ஆர். எண்ணூருக்கு வழங்குவதாக இருக்கவேண்டும். அதில் கொண்டு வருவதற்குரிய இன்ஷூரன்ஸ் தொகையும், ஆயத்தீர்வையும் ( Excise duty ) அடங்கியிருக்க வேண்டும். ஆனால் விற்பனை வரியும், இதரத் தீர்வைகளும் சேர்க்கப்படக் கூடாது.

ஆயத்தீர்வை ஏதேனும் விலையில் சேர்க்கப்பட்டிருந்தால் அதன் சரியான தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

**பட்டுவாடா செய்வதற்குரிய விதிகள்.**

(அ) பொருள்களை நல்ல நிலைமையில் சேர வேண்டிய இடத்தில் சேர்த்தவுடன் 90 சதம் வழங்கப்படும்.

(ஆ) மீதம் 10 சதத்தை, பொருள்களை நல்ல நிலைமையில் சேரவேண்டிய இடத்தில் சேர்த்த 3 மாதங்களுக்குள்ளாகவும், சோதனைச் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகும் ஆனல் எது பிற்பட்டதோ அதன்படி வழங்கப்படும்.

**வழங்குதல் :**

இருப்பில் உள்ளதிலிருந்தோ அல்லது உடன் வழங்கும் அடிப்படையிலோ கெமிக்கல்களை வழங்க வேண்டும்.

**அபராதம் :**

பொருள்களை வழங்குவதில் தாமதமானல் தாமதமாகும் பகுதிக்கு வாரத்திற்கு ½ சதவீதமும், உச்ச அளவாக 10 சதம் வரைக்கும் அபராதம் விதிக்கலாம் என்ற காரண்டி கொடுக்கப்பட வேண்டும்.

**சட்டப்படி செல்லத் தகுந்தவை :**

ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குச் சட்டப்படி செல்லத் தகுந்தவைகளாகும்.

தனியாக ஒப்பந்தப் படிவங்களோ அல்லது விவரமான குறிப்பிடுகைகளோ வேறு எதுவும் இல்லை.

ஒப்பந்தப் புள்ளிகளை மின்சார தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 157. அண்ணாசாலை சென்னை-2 அவர்களுக்குஎன்று முகவரியிட்டு, முத்திரையிட்ட கவரில் வைத்து, கவரின் மேலே மேற்பார்வைப் பொறியாளர், தொழில் நுணுக்கம் (மின்சாரம்) 157 அண்ணாசாலை, சென்னை-2 என்று எழுதி மேலே குறிப்பிட்டுள்ள தேதி, காலத்திற்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டா. குறைந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளாதிருக்க வாரியத்திற்கு உரிமையுண்டு. ஒப்பந்தப் புள்ளிகளைப் பிரித்து, குறிப்பிட்ட விவரப்படி பொருள்களை வழங்க ஒன்று அல்லது பல ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதி வழங்கவும் வாரியத்திற்கு உரிமை உண்டு.

**கட்டுத் தொகை.**

குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகைக்கு, கணக்கு அலுவலர், சென்னை மின்சாரத் திட்டம் (வழங்குதல்), எண் 157, அண்ணா சாலை, சென்னை-2 அவர்கள் கணக்கில் டிமாண்ட் ட்ராப்டாக வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்ப வேண்டும் ; இல்லாவிட்டால் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். செக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய அலுவலரிடம் ரொக்கமாகக் கட்டுத்தொகையைக் கட்டி, அதற்குரிய ரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்தும் அனுப்பலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**தொழில் நுணுக்கம்**
**(மின்சாரம்.)**

157, அண்ணாசாலை,
சென்னை-2

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

எமெர்ஜென்சி கமிஷன்ட் ஆபீசர்கள்/ குறுகிய காலப் பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர்கள் ஆகியவர்களிடமிருந்து டிப்டி கலெக்டர்கள் முதலிய வேலைகளுக்குத் தேர்ந்தெடுத்தல் :

கீழ்க்கண்ட வேலைகளுக்கான நேரடித் தேர்வுகளுக்காக சென்னையில் 1971 நவம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் முதுநிலைப்பட்டத்தின் தரத்திலுள்ள (Master"s Degree Standard) எழுதும் தேர்வுக்கும், வாய்மொழித் தேர்வுக்கும் அனுமதிக்க ஏற்கனவே வெளிவந்துள்ள அல்லது 1971–72ல் வெளிவரவிருக்கும் எமெர்ஜன்சி கமிஷன்ட் ஆபீசர்கள்/குறுகிய கால பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 1971 செப்டம்பர் 25–ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

(1) 2 டிப்டி கலெக்டர் பதவிகள்—சம்பளம் மாதம் ரூ. 575—25—600—40—1,000.

(2) 2 ஜாயிண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் பதவிகள் சம்பளம் மாதம் ரூ. 550—25—600—35—950.

(3) ஒரு டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் பதவி—சம்பளம் மாதம் ரூ. 550—25—600—35—950.

(4) ஒரு டிப்டி சூப்பிரின்டென்ட் டெண்ட் ஆப் போலீஸ் பதவி சம்பளம் ரூ. 575—25—600—40—1,000.

**தகுதிகள் :**

(1) பல்கலைக் கழக நிதி உதவிக் கழகத் திட்டம் நிதி பெற ஒப்புதல் பெறப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிறுவனத்திடம் பெற்ற பட்டம்.

(2) 1—7—1971 அன்று 24 வயது முடிவடைந்திருக்கக் கூடாது. டிப்டி கலெக்டர், டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் ஆகியவற்றிற்கும் மனு செய்யும் செடியூல்ட் வகுப்பினர், மலை சாதியினர், பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பில் விதிவிலக்கு உண்டு. ஜாயின்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், டிபுடி சூப்பிரிண்டென்டெண்ட் ஆப் போலீஸ் பதவிகளுக்கு அவர்கள் 30 வயதுக்குட்பட்டவர்களாகயிருத்தல் வேண்டும்.

வயதைக் கணக்கிடும்போது. எமெர்ஜன்சி கமிஷன்ட் ஆபீசர்/ குறுகிய காலப்பணி ரெகுலர் கமிஷன்ட் ஆபீசர் ஆகியோர் கமிஷன் காலத்திற்கு முன் பெற்ற பயிற்சிக் காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்துடன் கீழ்க்கண்ட வயதுச் சலுகைகளும் அனுமதிக்கப்படும் :

(அ) செடியூல்ட் வகுப்பினர், மலைசாதியினர், பிற்பட்ட வகுப்பினரல்லாதவர்களாகவிருந்து 1—7—1971 அன்று 40 வயதிற்கு மேற்படாதவர்களாகயிருந்தால் 5 ஆண்டுகள் வரை சலுகை தரப்படும்.

(ஆ) செடியூல்ட் வகுப்பினர், மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு ஜாயின்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், டிப்டி சூப்பிரின்டென்டெண்ட் ஆகிய பதவிகள் சம்பந்தப்பட்டவரை அவர்கள் 1971 ஜூலை திங்கள் 1-ஆம் நாள் 45 வயதுக்கு அதிகப்படாதவர்களாகயிருப்பின் 10 ஆண்டுகள் சலுகை தரப்படும்.

(இ) டிப்டி சூப்ரின்டென்டெண்டாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் மனுதாரர் உயரத்தில் 165 செ.மீ.ருக்குக் குறையாமலும், மார்பளவு (மூச்சை உள்ளிழுக்கும்போது) 86 செ.மீ.க்குக் குறையாமலும், முழு மூச்சு உள்ளிழுக்கும்போது மார்பு 5 செ.மீ. குறையாமல் விரிவடைவதாகவுமிருக்க வேண்டும்.

மேற்கூறிய எல்லா வேலைகளுக்கும் ஒரே விண்ணப்ப மனுதான்.

விரிவான தகவல்களும், விண்ணப்ப மனுவும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை–2 என்ற முகவரிக்கு வேலையைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி அத்துடன் 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட 23 செ.மீ. நீளமுள்ள உறையினை இணைத்து அனுப்பிப் பெறலாம். அவ்வாறு உறை அனுப்பப்படாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டாது.

## ஓவியப் போட்டி

### ஓவியர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு

தமிழக அரசின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனத்துக்கு இலச்சினையும்—ஆங்கிலத்தில் குறிப்புரையும் வரவேற்கப்படுகின்றன.

இவற்றை அனுப்புவோர், இலச்சினைக்கும்—குறிப்புரைக்கும் தனித்தனியே, சாதாரண அல்லது வண்ண ஓவியம் வரைந்து அனுப்ப வேண்டும்.

இலச்சினை எளிமையாகவும், தமிழ்ப் பண்பாட்டினை விளக்குவதாகவும் இருத்தல் வேண்டும். ஒருவர் எத்தனை இலச்சினைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட இலச்சினை—குறிப்புரை ஒவ்வொன்றுக்கும் தகுந்த பரிசு வழங்கப்படும்.

இவற்றை நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம், 34, அண்ணா சாலை, சென்னை–2 என்ற முகவரிக்கு 10–9–1971-ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

இந்த நாளுக்குப் பின்னர் இதுபற்றிய கடிதங்களை இந் நிறுவனம் ஏற்றுக்கொள்ளாது.

## தமிழ்நாடு மின் வாரியம்

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு E. 1497.

### எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு டன் கன்டெயினரில் குளோரின் திரவம் வழங்குதல்.

மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்கண்ட பொருள்களை வழங்க மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (மூன்று நகல்கள்) முழு தொழில் நுணுக்க விவரங்களுடனும் பிற தகவல்களுடனும், ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண், முடிவு தேதி ஆகியவற்றை உறை யின்மீது குறிப்பிட்டும் 22—9—1971 அன்று நண்பகல் 12 மணிக்குள் பெறப்படும் :—

| எண். | விவரம். | அளவு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1 | ஸ்டாண்டர்டு டன் கன்டெயினர்களில் IS–646, 1956 தரத்திலுள்ள குளோரின் திரவம் (liquid chlorine) வழங்குதல். | 50 மெட்ரிக் டன்கள் | ரூ. 500 |

ஒப்பந்தப் புள்ளியில்கீழ்க்கண்ட விவரங்கள் தரப் படவேண்டும் ; இல்லாவிடில் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்பட ஏதுவாகும்.

1. டன் கன்டெயினரின் அளவுகள்.
2. டன் கன்டெயினரின் எடை—குளோரினுடனும், குளோரின் இல்லாமலும்.
3. முழுவதும் இயக்கும்போது கன்டெயினரின் பிரஷர்.
4. கன்டெயினருக்கு வாடகை ஏதாவது.
5. பணிமனையிலிருந்து எண்ணூர் பகுதிக்கு எதில் எடுத்துச் செல்லப்படும்.
6. டன் கன்டெயினர்களை ஸ்டோரில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் விரிவான அறிவுரைகள்.
7. குளோரின் திரவத்திற்கு DGS. மற்றும் D rate ஒப்பந்தம் ஏதாவது இருந்தால் அது பற்றிய தகவல்கள்.

எண்ணூரில் கொண்டுவந்துசேர்க்க, இன்சூரன்ஸ் சார்ஜ், ஏற்ற இறக்க ஆகும் கூலி சார்ஜ் சேர்க்கப் பட்டதும், எக்சைஸ் வரி, விற்பனை வரி, மற்றும் பிற நிலையான வரிகள் (Statutory levies) சேர்க் கப்படாததுமான தொழிற்சாலை விலை குறிப்பிட வேண்டும்.

பணிமனை ( ex-works ) விலையும் குறிப் பிடப்படவேண்டும். குளோரின் 1971 அக்டோபர் முதல் வழங்கப்படவேண்டும். தற்போதைய தேவை அளவு தற்காலிகமானது ; உண்மையான தேவைக்குத் தக்கபடி கூடவோ, குறையவோ செய்யலாம்.

முதல் ஒன்பது மாதங்களுக்கு மாதம் 5 முதல் 6 M.T. வீதம் குளோரின் வினியோகம் ஆரம்பத்தில் தேவைப்படும். தேவைக்குத் தக்கபடி இதனை மேலும் சில காலம் தொடரவோ, அன்றி அளவைக் கூட்டவோ படலாம்.

எனவே ஒப்பந்தப் புள்ளிதாரர் மேற்குறிப்பிட் டதைக் கவனத்தில் கொண்டு மேற்குறிப்பிடப் பட்டதை அடிப்படையாகக் கொண்டு குறைந்த தொகையைக் குறிப்பிடும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

குறிப்பிடப்பட்ட விலை ஒப்பந்த காலம் முழுவதற் கும் உறுதியாகக் கடைப் பிடிக்கப்படும். வரவிரும் பும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 22–9–1971 அன்று மாலை 3 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக் கப்படும்.

கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்), கணக்கு அலுவலர், சென்னை மின்சாரத் திட்டம் (வினியோகம்), 157, அண்ணா சாலை, சென்னை-2 பெயரில் கிராஸ்ட் டிமாண்ட் டிராப் டாக வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப் படவேண்டும் ; இல்லாவிடின் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். செக் அல்லது பாங்க் காரண்டி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.

பணம் பட்டுவாடா, பொது மற்றும் தொழில் நுணுக்க நிபந்தனைகள் பற்றி வாரியத்தில் நடை முறையிலுள்ள நிபந்தனைகள் யாவும் இந்த வரைக் குறிப்பிற்கும் பொருந்தும்.

குறைந்த விலை குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளியை அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியை ஏற் றுக்கொள்ளவோ, அல்லது அளவினை மாற்றவோ, அல்லது பிரித்து ஒன்றுஅல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்கு வழங்கவோ வாரி யத்திற்கு முழு உரிமை உண்டு.

இது தவிர வேறு தனியான ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களோ அன்றி விரிவான வரைக் குறிப்பு களோ கிடையாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுணுக்கம் (மின்சாரம்).

157, அண்ணாசாலை,
சென்னை-2.

## தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை.

### அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ம் வருடம் அக்டோபர் திங்கள் 20-ம் நாள் புதன்கிழமை மாலை 3·00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெட்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கோட்டம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| 1 | தேசீய நெடுஞ்சாலை எண் 7ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியை மேம்பாடு செய்தல்— | | ரூபாய். |
| | பிரிவு 1 கி.மீ. 33·015 முதல் 55·00 வரை .. | கிருஷ்ணகிரி | 1,37,500, |
| 2 | ஷை பிரிவு 2—கி.மீ. 55·00 முதல் 80· வரை .. | ஷை .. | 1,54,800 |
| 3 | ஷை பிரிவு 3—கி.மீ. 80·00 முதல் 94·00 வரை .. | ஷை .. | 96,200 |
| 4 | ஷை பிரிவு 4—கி.மீ. 94·00 முதல் 119·00 வரை .. | ஷை .. | ,1,15,900 |
| 5 | ஷை பிரிவு 5—கி.மீ. 119·00 முதல் 139·00 வரை .. | ஷை .. | 85,700 |
| 6 | ஷை பிரிவு 6—கி.மீ. 139·00 முதல் 160·00 வரை .. | ஷை .. | 94,900 |
| 7 | ஷை பிரிவு 7—கி.மீ. 160·00 முதல் 174·00 வரை .. | சேலம் | 91,200 |
| 8 | ஷை பிரிவு 8—கி.மீ. 174·00 முதல் 194·00 வரை .. | ஷை .. | 1,01,200 |
| 9 | ஷை பிரிவு 9—கி.மீ. 194·00 முதல் 199·00 வரை .. (மற்றும் சேலம் மாற்று வழிப்பாதை). | ஷை .. | 1,07,800 |
| 10 | தேசீய நெடுஞ்சாலை எண் 47ல் பவானி மற்றும் குமாரபாளையத்தை இணைக்கும் மாற்று வழிப்பாதை அமைத்தல். | ஈரோடு .. | 54,700 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 250 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—9—1971 முதல் 19—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ '' டெபாசிட் என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத்தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும்.

ரத்தினசபாபதி புரம்,
கோயம்புத்தூர்,
21—8—71.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்
(நெ.கி.ப.),
கோவை-2.

P

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## சீட்டு ஒப்பந்தப் புள்ளி

## அறிவிப்பு

எண் 4/95 டி4/நாள் 15-8-1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்தின் சார்பிலும் அதற்காகவும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், கோயம்புத்தூர்-2 அவர்களால் 25/1 மூன்ருவது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12-ல் அவர்களுடைய அலுவலகத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே குறிப்பிட்ட தேதிகளில் மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலை விவரம்—(1) பொள்ளாச்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—2-வது கட்டம்—லோ லிப்ட் கச்சா நீர் டர்பைன் பம்பு செட்டுகள், துணை பைப்புகள் இணைப்புகளுடன் சப்ளை, டெலிவரி, அமைப்பு முதலியன.

கட்டுத் தொகை—ரூ. 2,305 (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று ஐந்து மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

வேலை விவரம்—(2) பொள்ளாச்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—2-வது கட்டம்—ஹை லிப்ட் தூய நீர் (சென்ட்ரிபியூகல் பம்பு செட்டுகள், துணை சாதனங்கள், பைப்புகள், இணைப்புகளுடன் சப்ளை, டெலிவரி, அமைப்பு.

கட்டுத் தொகை—ரூ. 6,135 (ரூபாய் ஆறு ஆயிரத்து நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—5 மாதங்கள்.

இந்த இரு வேலைகள் விஷயத்திலும் ஒப்பந்தவடிவம்—மொத்தத் தொகையாகும்.

இந்த இரு வேலைகளில் ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.35 (ரூபாய் பத்து, காசுகள் முப்பத்தி ஐந்து மட்டும்— விற்பனை வரி உள்பட—இத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது)

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும் காலம் 25-8-1971 முதல் 23-9-1971 மாலை 5 மணி வரை.

இவ்விரு வேலைகள் விஷயத்திலும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கும் ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பதற்கும் உரிய நாள் 25-9-1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், பொது சுகாதார பொறியியல் டிவிஷன், 11/8 பாஷ்யகாரலு சாலை, கிழக்கு ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2ல் உரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டரிலோ செலுத்திப் பெறலாம்.

கட்டுத்தொகையை, நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-2 அவர்கள் கணக்கில் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ, கருவூல சலான் வடிவிலோ கட்டவேண்டும். தேச உடமை ஆக்கப்பட்ட பாங்கியின் ரிசர்வ் பாங்க் அங்கீகரித்த பாங்கு காரண்டியும் கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

வேலையின் பெயர், உறையின் மீது தெளிவாக எழுதப்படவேண்டும். எவ்விதக் காரணமும் கூருமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

எஸ். எஸ். சாகுல் அமீத்,

மேற்பார்வைப் பொறியாளர்.

(பொ.சு.பொ.) கோயம்புத்தூர்-12.

நாள் 15-8-1971.

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கு துறை

உணவுப் பொருள் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறையினுல் கவனிக்கப்படும் பிற பொருள்களைச் சென்னை ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகிய வற்றிலிருந்து நகரக் கிடங்குகளுக்கு (Godowns) எடுத்துச் செல்லவும், ஆவடி, குரோம் பேட்டை ஆகியவைகளிலுள்ள கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லவும் அல்லது இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லவும், உணவுப் பொருள்களை சென்னை, ஆவடி, குரோம்பேட்டை ஆகிய பகுதிகளிலுள்ள கிடங்குகளிலும், ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலும் ஏற்ற இறக்க கூலியாட்களை, சப்ளை செய்யவும், ஒப்பந்த ஒப்புதலிலிருந்து ஓராண்டுக் காலம் செயல்படக் கூடிய காண்டிராக்டர்களை நியமிக்க, குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு அரசின் சார்பில், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 வரவேற்கிருர்.

ஒப்பந்தங்கள், உணவுப் பொருள் வழங்கு துறை துணை ஆணையாளர் (விநியோகம்) அவர்களால் 20-9-1971 மாலை 3 மணி வரை சென்னை-5, சேப்பாக்கத்திலுள்ள எழிலகத்தில் பெறப்படும்.

ஒப்பந்தப் படிவங்களும் நிபந்தனைகளும், சென்னை ரிசர்வ் வங்கியில் XXII. Miscellaneous Department Receipts—e. Civil Supplies Department 3 (ii) Miscellaneous Receipt என்ற தலைப்பில் ரூ. 10ம் (ரூபாய் பத்து மட்டும்)(திருப்பித் தரப்படமாட்டாது), விற்பனை வரிக்காக XII. Sales-tax (d) Miscellaneous-MadrasGeneral Sales Tax Act 1959 என்ற தலைப்பில் 30 காசும் (திருப்பித் தரப்பட மாட்டாது) கட்டியதற்கான செலான்களைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

துணை ஆணையாளர்,
(விநியோகம்).

உணவுப் பொருள் வழங்கு துறை,
சென்னை-5.

## ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியம்.

வேலூர் மின் திட்டம்.

கீழ்க்கண்ட பணிகளைச் செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற தனித் தனி விலையொப்பங்கள் அடியிற் கையொப்ப மிட்டவரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் அழைக்கப்படுகின்றன.

| வரிசை எண். | ஓ.டி.எஸ். எண். | பணியின் விபரம். |
|---|---|---|
| 1 | ஓ.டி.எஸ். 1/71–72. | காட்பாடி நகர் விரிவிலுள்ள மத்திய பண்டக சாலையிலும், வேலூர் முள்ளிபாளையம் யார்டிலும் உள்ள பொருள்களை ஏற்றுதல் இறக்குதல் போன்ற வேலைகள்; வேலையின் மதிப்பு (சுமாராக) ரூ. 30,000. |
| 2 | ,, 2/71–72. | 165'' வீல்பேஸ் உள்ள இரண்டு 5 டன் பார்கோ சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 3 | ,, 3/71–72. | 165'' வீல்பேஸ் உள்ள மூன்று 5 டன் டாட்டா சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 4 | ,, 4/71–72. | 179'' வீல்பேஸ் உள்ள இரண்டு 5 டன் இந்துஸ்தான் பெட் போர்ட் சேசிஸ் மேல் லாரி பாடி பில்டிங் கட்டுதல். |
| 5 | ,, 5/71–72. | 133'' வீல்பேஸ் உள்ள ஆறு பார்கோ மாடல் பி 6—டி 300 சேசிஸ் மேல் பிக்கப் வான் பாடி பில்டிங் கட்டுதல். |

கடைசித் தேதி, கட்ட வேண்டிய முன் தொகை ஆகிய விவரங்களுடன் கூடிய குறிப்புப் பிரதிகளைப் பிரதியொன்றிற்கு ரூ. 5 வீதம் 25–9–1971 தேதி வரை தலைமைக் கணக்காயர் (செலவு), வேலூர் மின் திட்டம், எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு (அஞ்சல்), வட ஆர்க்காடு மாவட்டம் என்னும் முகவரியில் நேரில் பணம் கொடுத்தோ, பண அஞ்சல் மூலமாகவோ, பெற்றுக் கொள்ளலாம்.

காட்பாடி நகர் விரிவு,
வட ஆர்க்காடு,
நாள் : 30–7–1971.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
வேலூர் மின் திட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு
### சின்கோனு துறை

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

அரசினர் சின்கோனு தோட்டங்கள் அனைத்திலும், நடுவட்டம் டிவிஷன், ஹூக்கர் டிவிஷன், வுட் டிவிஷன், மோயார் டிவிஷன், தொட்டபெட்டா டிவிஷன், தேவசோலா டிவிஷன், ஒலக்காடு டிவிஷன், பனிசோலா டிவிஷன் மற்றும் நடுவட்டம் மருத்துவ, சத்தெண்ணெய்த் தொழிற்சாலை இவைகளில் சுமார் ரூ. 3.50 லட்சம் செலவு மதிப்பில் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் கீழ்க்கண்டவரால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித்தேதி 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி மாலை 3-00 மணி. இவை அதே நாளில் கீழ்க்கண்டவரால் அல்லது அவரது அரசிதழ் பதிவு உதவியாளரால் மாலை 3-30 மணிக்கு பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி விவரங்களடங்கிய தாள்களை, கீழ்க்கண்ட அலுவலர்களிடமிருந்து அலுவல் நாட்களில் ரூ. 2.07 (விற்பனை வரி உள்பட) ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கண்காணிப்பாளர், அரசினர் சின்கோனு தோட்டம், நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி—நடுவட்டம்,

—ஹூக்கர், வுட், தேவசோலா, மோயார் டிவிஷன்களுக்கு.

2. வளர்ச்சி கண்காணிப்பாளர், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலை, நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி

—பனிசோலா, ஒலக்காடு டிவிஷன்களுக்கு.

3. உற்பத்தி ரசாயன வல்லுநர், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலை, நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி

—நடுவட்டம், மருத்துவ சத்தெண்ணெய்த் தொழிற்சாலைக்காக.

4. தாவர இயல் வல்லுநர்—அரசினர் சின்கோனு தோட்டம் தொட்டபெட்டா (அஞ்சல்), உதகமண்டலம்.

—தொட்டபெட்டா டிவிஷனுக்காக.

**எம். மோகன் ராவ்,**
இயக்குநர், சின்கோனு துறை.
அ. பெ. எண் 6, உதகமண்டலம்.

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ் நாடு பொது நிருவாகப் பணியின் கீழ் மகளிர் நலத்துறையில் தற்காலிகமாக ஒரு தனிஅலுவலர் பதவிக்காக (பெண்கள்-குழந்தைகள் நலம்) நேரடியாகத் தேர்ந்து எடுப்பதற்காகப் பெண்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 1971 அக்டோபர் 7-ஆம்நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்—மாதம் ரூ. 550-25-600-35-950.

கல்வித் தகுதி—பல்கலைக்கழக நிதிக் குழுவினால் அதன் நிதிக்காக ஒப்புதல் பெறப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகத்தில் அல்லது நிறுவனத்தில் பெற்ற பட்டம்.

வயது—1-7-1971 அன்று 21 வயது அடைந்திருக்க வேண்டும். ஆனால், 27 வயது அடைந்திருக்கக் கூடாது. செட்யூல்ட் வகுப்பினர், செட்யூல்ட் டிரைப்ஸ், பிற்பட்டவகுப்பினர்ஆகியவர்களுக்கு அதிக பட்ச வயதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். தங்கக் கட்டுப்பாடுஆணையினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களது திருமணமாகாத மகள்கள், மற்றும் 1-1-1963 அன்று அல்லது அதற்குப் பின்னர் முழுநேர 'அண்டர் ஆபீசர்' பயிற்சியாளர்களாகஅல்லது சார்ஜன்ட் மேஜர் பயிற்சியாளர்களாக வேலைசெய்த முன்னாள் என்.சி.சி யினர், ஆகியோருக்கும் வயது வரம்பில் சலுகைஅனுமதிக்கப்படும். ராணுவம், கப்பல்படை, விமானப்படையிலிருந்து அனுப்பப்பட்ட நபர்கள் 1-7-1971-ல் 40 வயதுக்குக் குறைவாகவுள்ளவர்களாக யிருப்பின் அவர்களுக்கும், 1-1-1964 அன்று அல்லது அதற்குப் பின் கிழக்குப் பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்களுக்கும், இலங்கை, பர்மா அகதிகளுக்கும் கல்வித் தகுதி, வயதுவரம்பு ஆகியவை தளர்த்தப்படும்.

இதற்கான தகவல்களும் விண்ணப்ப மனுக்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குக் கடிதம் எழுதி அத்துடன் 30 காசு அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட 23 செ.மீ. நீளமுள்ள உறையின் மீது நூல் அஞ்சல் எனக் குறிப்பிட்டு அதனைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பிப் பெறலாம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில், வணிக இயக்குநர், தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் : சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள புற்று நோய் பிரிவில் ( pile ) அஸ்திவாரம் இடுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்தம் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சென்னை—செங்கற்பட்டு வட்டம் அவர்களால் அவரது சேப்பாக்க அலுவலகம் சென்னை-5-ல் 17-9-1971-ல் பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை : ரூ. 5,250.

3. வேலை முடிக்க வேண்டிய கால அளவு : ஆறு மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திர விலை : ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்).

இத் தொகை கருவூலத்திலோ சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலோ. " P. W. Remittances III Other Remittance " என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்ஸ் டிவிஷன் 1, சேப்பாக்கம், சென்னை-5, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

5. விற்பனை வரி 0.90 காசு (தொண்ணூறு கர்சு மட்டும்) அந்தச் செலானிலேயே கருவூலத்திலோ, சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII Sales Tax" விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொதுவிற்பனை வரி என்ற கணக்கில் கட்டப் பெற வேண்டும்.

6. ஒப்பந்தப் பத்திர விற்பனை: 8-9-1971 முதல் 15-9-1971 வரை (அலுவலக நேரத்தில்).

7. ஒப்பந்தப் புள்ளித் தேதி 17-9-1971.

ஏனைய விபரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, சென்னை, செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-5, செங்கற்பட்டு வட்டம் அவர்களுக்கு எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் தள்ளும் உரிமையுண்டு.

பி. கே. கந்தசுவாமி
மேற்பார்வைப் பொறியாளர்.
சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

13—8—1971.

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை, சென்னை-5

வேலைபழகு பயிற்சிச் சட்டம் 1961

1961-ஆம் ஆண்டின் வேலைபழகு பயிற்சி (அப்ரண்டிஸ்) சட்டத்தின் கீழ் விடுத்த அகில இந்திய தொழில் திறன் தேர்வு, தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களில் 20-9-1971 முதல் 25-9-1971 வரை (21-9-1971 தவிர) நடத்தப்படும்.

அரசினர் தொழில் பயிற்சி நிலையம் (வடக்கு) சென்னை, சென்னை-21, கிண்டி, சென்னை 32, அம்பத்தூர், சென்னை—53, திருச்சிராப்பள்ளி-14, மதுரை-7, பேட்டை, திருநெல்வேலி-4, கோயம்புத்தூர்-11, சேலம்-7.

முழுக்கால வேலை பழகுப் பயிற்சியாளர்கள் தகுதியுடையவராயும், மேலே குறிப்பிட்ட தொழில் தேர்வில் சேர ஆர்வமுள்ளவராயும் உள்ளவர்கள், தாங்கள் மேலும் விபரங்கள் தெரிய விரும்பினால் தங்களுக்குத் தொடர்பான தொழில் பயிற்சி நிலைய முதல்வருடன் 5-9-1971-க்குள் தொடர்புகொள்ளவும்,

இயக்குநர்,
வேலைவாய்ப்புப் பயிற்சி,
மாநில வேலைபழகுத் திட்ட ஆலோசகர், சென்னை-5.

## ஒப்பந்தம்

## தமிழ்நாடு மின்சார வாரியம்

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், (இயக்குதல்) எண்ணூர் அனல் மின் திட்டம் Stationery 1/71-72

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழ்நாடு மின்சார வாரியம் எண்ணூர் அனல் மின் திட்டம் Stationery 1, 1971-72, எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் 6-9-1971-ஆம் தேதி பிற்பகல் (மாலை) வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3 மணிக்கு அங்கு வந்து இருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
Description 71 items of Books and forms.

Quantity as furnished in the Tender set.

3. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

4. இந்த வேலைக்கான பிணைத் தொகை ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி முன்னதாகச் செலுத்தப்பட வேண்டும்.

5. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்குப்பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ, அன்றி, எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

6. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, வழியில் தவறிப் போகும் ஒப்பந்தப் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத் தக்கவையல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர் இயக்குதல்,**

எண்ணூர் அனல் மின் திட்டம்
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் 59556 (5 கிளைகள்),

தந்தி **ENTERMAL**

---

## வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்கழகம்.

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுப் பணியில் அரசினர் அச்சகத்திற்கு 9 உதவி அலுவலர் நிர்வாகிகள் (Assistant Works Managers) நியமனத்திற்காக மனுக்கள் 1971 செப்டம்பர் 24-ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தகுதிகள் :—

(1) அச்சுத் தொழில் தகுதி—அச்சு வேலைகளில் செயல்முறை அனுபவம்.

(2) 'காஸ்டிங் முறைக் (Costing System) கணக்கில்' அறிவு.

சம்பளம் : மாதமொன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

வயது : 1-7-1971-ல் 30 வயதுக்குக் கீழ். குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேல் பொதுக் கல்வித் தகுதியுள்ள ஷெடியூல்டு வகுப்பினர், ஷெடியூல்டு பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை. மற்ற ஷெடியூல்டு வகுப்பினர், ஷெடியூல்டு பழங்குடியினருக்கு, மேல் வயது வரம்பு 5 ஆண்டுகளும் அங்கவீனமுற்றவர்களுக்குப்பத்து ஆண்டுகள் வரையிலும் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்திரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்தம் புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள், மற்றும் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்டரக்டர் அல்லது சார்ஜண்டு மேஜர் இன்ஸ்ட்ரக்டர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை கேடட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற் படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-7-1971-ல் 40 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பவர்களாயினும் 1-1-1964-ல் அல்லது அதற்குப் பின்னர் கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்புட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விபரங்களையும் '' செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம்-சென்னை-2 '' என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழக்கு டிவிஷன்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

வியாசர்பாடி அருகே வட சென்னை புதூர்த் திட்டத்தில் 2 லட்சம் காலன் திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் கட்டுவது சம்பந்தப்பட்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி நாள் 8-9-1971 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

**டி. ஜகதீசன்,**

நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு)

19-8-1971,
சென்னை-35.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் :

மதுரை மாவட்டம், தோப்பூர் அரசினர் க்ஷயரோக சானடோரியத்தில் கீழ்த்தளத்தில் 30 படுக்கைகளுக்கும், முதல் தளத்தில் 30 படுக்கைகளுக்குமான ஒரு இரண்டு தளக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும், மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15—9—1971 மாலை 3-00 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு மாலை 4-00 மணிக்கு திறக்கப்படும். 6—9—1971 முதல் 13—9—1971 வரை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை : ரூ. 5,200 (ரூபாய் ஐயாயிரத்து இரு நூறு மட்டும்).

வேலை முடிக்க வேண்டிய காலம்: ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையான ரூ. 20 (ரூபாய் இருபது) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ " P. W. Remittances III O. R. " என்ற தலைப்பில் மதுரைக் கோட்ட நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து., மதுரை, அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·70 விற்பனை வரியை " XII. Sales-tax (d) Miscellaneous " என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்தப் பெற்ற சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் 'டெபாசிட் அட் கால்' ரசீது அல்லது டிமாண்ட் டிராப்டுகள் அல்லது அரசாங்க செக்யூரிடிகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளில் உத்திரவாதம் ஆகிய உருவிலேயே முன் வைப்புத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள், மற்றும் தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகளும் கூட, மார்க்கெட் மதிப்பில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து.
மதுரை வட்டம்,
மதுரை.

## ஏல விற்பனை அறிவிப்பு

ஒரு ஜி.எம்.ஸீ. பெட்ரோல் லாரி (ஓடும் நிலையிலில்லாதது) அது நிற்கும் இடத்தில், இருக்கும் நிலையில் பொதுப் பணித் துறை அலுவலர் ஒருவரால் 17—9—1971 முற்பகல் 11 மணிக்கு எல்.பி.பி. காலனி ஈரோடு-2-ல் பொது மக்கள் முன்னிலையில் ஏலம் விடப்படும்.

அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்ட அலுவலகத்தில் லாரியைப் பார்க்கலாம்.

விற்பனை பற்றிய நிபந்தனைகள் ரூ. 2·06 (ரூபாய் இரண்டும் காசு ஆறு மட்டும்) செலுத்திப் பொதுப் பணித் துறை, ஈரோடுப் பகுதி நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எல். சுந்தரம்,

நிர்வாகப் பொறியாளர்,
ஈரோடுப் பகுதி,
ஈரோடு.2.

## ஒப்பந்தம்

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

ஒப்பந்தத் தேதி நீடிப்பு

வேலையின் பெயர் :

1. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் பௌதிகத் துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

2. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் இரசாயன பட்ட மேற்படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

3. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் கலைத்துறை பட்ட மேற்படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

4. தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் இரு பகுதிகட்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை :' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' தேதி 30—6—1971, 2—7—1971 ' தி மெயில் ' தேதி 28—6—1971-ல் வெளியிட்ட சீட்டு ஒப்பந்த அறிக்கை.

மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 8—9—1971 அன்று மாலை 3-00 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 7—9—1971 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

பொதுப்பணித் துறை.

சென்னை செங்கற்பட்டு வட்டம் சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்.—சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அவுட்பேஷண்ட் பிரிவு இடவசதிக்காகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித்துறை அல்லது அரசின் இதர துறைகளில் உரிய பிரிவுகளில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10–9–1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2. கட்டுத்தொகை-ரூ. 5,000.

3. பிளான்களுடன், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20+3 சதவிகித விற்பனை வரி.

4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—நான்கு மாதங்கள்.

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக்கூடிய தேதிகள்: 6–9–1971 முதல் 9–9–1971 வரை.

6. ஒப்பந்தப் புள்ளி நாள்.—10–9–1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (இது எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "Public Works Department Remittances III Other Remittances" என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, பில்டிங் டிவிஷன் II அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்று தனித் தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும். சலானைக் கொடுத்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் இருந்து பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை-செங்கற்பட்டு
வட்டம்.

---

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு.

1971-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கொதிகலன் பணியாளர் (பாய்லர் அட்டண்டன்ட்) தேர்வுக்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு நடக்கும் இடம், தேர்வு நாள் பற்றிய விவரம் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்பெறும்.

இதற்குரிய மனு வடிவங்களையும் இதர விவரக் குறிப்புகளையும் பெற 9"×4½" அளவுள்ள 35 காசு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 15-9-1971-க்குள் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காத மனுக்களும், குறிப்பிட்ட முறையில் இல்லாத மனுக்களும் நிராகரிக்கப்படும். கொதிகலன் தொழிலில் கோரப்படும் செயல் முறை அனுபவமுடையவர்கள் மட்டுமே மனுச் செய்க.

**என். பி. ராமரெட்டி.**

நீராவிக் கொதிகலன் தலைமை ஆய்வாளர். தமிழ்நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு நடத்தும் குழுத் தலைவர், ஜம்மி பில்டிங்ஸ், மயிலாப்பூர், சென்னை-4.

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்—சேய் மருத்துவமனை, சென்னை-5.

ஒப்பந்தப்புள்ளி வேண்டுதல்.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவமனை சென்னை-5க்கு 1—10—1971 முதல் 31—3—1972 வரை தேவையான மருந்து வகைகள் ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அவர்களால் 10—9—71 மாலை 3-00 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்பட வேண்டிய மருந்துப் பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவ மனையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5. 'XXIII Medical (g) Miscellaneous-other Receipts' என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி 18 பைசா 'XII Sales Tax—Receipts under State Sales Tax Act—General Sales Tax' என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ செலுத்திச் சலான்களைப் பெற்றுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து ஒப்பந்த வடிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த வடிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன், சுய முகவரியுடன் கூடிய ரூ. 1·50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்பட வேண்டும்.

**கண்காணிப்பாளர்.**

9—8—1971

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு

#### தீ அணைப்புத் துறை.

ஏல அறிக்கை.

திருச்சிராப்பள்ளி கோட்டத்தைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட இழுக்கும் மோட்டார் வண்டி, திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் 8—9—1971 புதன் கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்த ஊர்தியைத் திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

ஊர்தியின் விபரங்கள்.

| பதிவு எண். | ஊர்தியின் வகுப்பு. | மேக். | வருட மாடல். |
|---|---|---|---|
| எம்.எஸ்.ஒய். 7190 | இழுக்கும் மோட்டார் வண்டி. | ஆஸ்டின். | 1953 |

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளி கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ரெத்தினசாமி,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

#### நடுவட்டம்—நீர் திருப்புத் திட்டம், நீலகிரி மாவட்டம்

#### டெண்டர் அறிக்கை K-2 ஒப்பந்தம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதன் உறையின்மேல் குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் 22—9—1971 அன்று மாலை 3-30 மணி வரை அட்டகட்டி மின் பாறை முகாம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன்வைப்புப் பணம். | ஒப்பந்தப் பத்திரப் பிரதி விலை. |
|---|---|---|---|
| NDS 25 | கிளென் மார்க்கன் புதிய போர்பே அணை (Forebay Dam ) கட்டுமான வேலை, பகுதி 6 C.H. 134·2 மீ. முதல் C.H.157மீ. வரை (அஸ்திவாரம் முதல்+1947 வரை). | ரூ. 20,300 | ரூ. 15 |

## கடன் பத்திரங்கள்

### மறந்துவிடாதீர்கள் !

தமிழ்நாடு மின்சார வாரிய கிராமப்புற மின் இணைப்புக் கடன் பத்திரங்கள்

ரூ. 375 லட்சத்துக்கு $7\frac{1}{2}$ சதவிகிதம்.

வெளியிடும் விலை; ரூ. 99·50 சதவிகிதம்.

திறக்கும் நாள்: 2—8—1971

1978 அக்டோபர் 30-ஆம் தேதி மீட்கக் கூடியவை.

முடிப்பு நாள்: 30—10—1971

$7\frac{1}{2}$ சதவிகித 1978 தமிழ்நாடு மின்சார வாரிய கிராமப்புற மின் இணைப்புக் கடன் பத்திரங்களுக்காகத் தொகைகள் ரொக்கமாக அல்லது காசோலையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

பட்டியல் சுமார் ரூ. 375 லட்சத்தை அடைந்தவுடன் முன் அறிவிப்பு இன்றி மூடப்படும். எப்படியும் 1971 அக்டோபர் 30-ஆம் நாள் அலுவல் நேர முடிவுக்குள்ளாக மூடப்படும். இந்தப் பத்திரங்கள் சிறந்த முதலீடு ஆகும்.

இந்தியா ஸ்டேட் பாங்கின் சென்னை தலைமை அலுவலகத்திலும், தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஸ்டேட் பாங்க் கிளைகளிலும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கடன் பத்திரங்கள் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட அறிவிப்பின் நகல்களும் விண்ணப்ப வடிவங்களும் மேலே குறிப்பிட்ட அலுவலகங்களிலும் தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கருவூலங்கள் துணைக் கருவூலங்கள் ஆகியவைகளிலும், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்களிலும் கிடைக்கும்.

நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்காக அள்ளி வழங்குங்கள்.

சி. ஜி. ரங்கபாஷ்யம்,
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

சிட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

எண் 1087/71 எஸ்டி 1

நாள் 4—8—1971.

கீழ்க்கண்ட வேலைக்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள் அவர்களால் 25—1, மூன்றுவது தெரு, டாட்டா பாத், கோயம்புத்தூர்-12-ல் அவருடைய அலுவலகத்தில் 22—9—1971 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அதே நாளில் பிற்பகல் 4—00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புளியம்பட்டி நீர் வழங்கு திட்டம் 3-வது கட்டம்—7.00 லட்சம் லிட்டர் (1.5 லட்சம் காலன்) திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர், அவசியமான குழாய் இணைப்புகளுடன் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 3,500 (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள் (ஆறு மாதங்கள் மட்டும்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10.35 (ரூபாய் பத்து காசுகள் முப்பத்தைந்து மட்டும் விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக் காலம் : 9—8—1971 முதல் 20—9—1971 வரை நிர்வாகப் பொறியியல் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன், எண். 11/8. பாஷ்ய காருலு சாலை, ஆர்.எஸ்.புரம் கிழக்கு, கோயம்புத்தூர்-2 அவர்களிடம், பத்திரங்கள் விலையை ரொக்கமாகக் கொடுத்தோ பண அஞ்சலில் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத் தொகை, தேச உடமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது நிர்வாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) கோயம்புத்தூர் —2 அவர்கள் பெயரில் கருவூல சலான் வடிவிலோ கட்ட வேண்டும். தேச உடைமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் பாங்க் காரண்டியும் ஏற்கப்படும்.

காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளருக்கு (பொ.சு.பொ.) உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

## ஒப்பந்தப் புள்ளி

### ஒப்பந்த அறிக்கை

காவல் துறை ஸ்டேசன் வேகன் எம். டி. எச். 1781 ஒப்பந்த அறிக்கை மூலம் விற்கப்படும். முத்திரையிட்ட ஒப்பந்தம் 13—9—1971, முற்பகல் 10·30 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக் கொள்ளப்படும். விற்கப்பட்ட தொகையின் பேரில் பதினைந்து சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படும். சேலம் டவுன், கொமாரசாமிப் பட்டி ஆயுதப்படை ஆய்வாளரிடம் விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தத்தை காவல்துறை கண்காணிப்பாளர் பெயருக்கு முத்திரையிட்ட கவரில் அனுப்ப வேண்டியது.

வண்டியின் விவரம்

வண்டி பதிவு எண் : எம்.டி.எச். 1781

மாதிரி : 1955

வண்டியின் பெயர் : ஸ்டுடிபேக்கர், ஸ்டேசன் வேகன்.

**கே. கே. ராஜசேகரன் நாயர்,**
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
சேலம்.

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு
### வேளாண்மைத்துறை

ஏல விற்பனை அறிவிப்பு.

வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான ஒரு ஜீப் (எம்.டி.சி. 8350), 6—9—1971 காலை 10 மணிக்கு மண் பரிசோதனை ஆய்வுக் கூடம், உதவி மண்-ரசாயன வல்லுநரால் 49, வைஸ் சேர்மன் பரமசிவ முதலியார் தெரு, காஞ்சிபுரம்-2-ல் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசினர் நலன் கருதி ஏலத்தை ரத்துச் செய்யவோ, ஒத்தி வைக்கவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

ஏல நிபந்தனைகள் மற்றும் மேல் விவரங்களை மேற்கண்ட அலுவலரிடமிருந்து பெறலாம்.

வேளாண்மைத்துறை இயக்குநர்,
சென்னை.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் & ஸ்டோர்ஸ்
### பொதுப்பணித்துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண் 33.

குத்தகை அடிப்படையில், பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் & ஸ்டோர்ஸ், சென்னை-1-ல் ஒரு 'கான்டீன்' நடத்துவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்டவரால் 15—9—1971 பிற்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களைக் கீழ்க்கண்ட அலுவலரின் நேர்முக உதவியாளருக்கு மனுச் செய்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**பொதுக் கண்காணிப்பாளர்,**
பொதுப்பணி ஒர்க்ஷாப்ஸ் &
ஸ்டோர்ஸ், சென்னை-1.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

### K 2 ஒப்பந்தம்

குறிப்பு எண் SCE 406

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி மாலை 3-30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன்வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. |
|---|---|---|---|
| S.C.E. 406 | கொதிகலன் 4 (370 டன்) சாமான்கள் உயர் அழுத்த முள்ளவை, அழுத்த மில்லாதவை (High Pressure Parts and Low Pressure Parts) எடுத்துச்சென்று நிர்மாணித்தல்). | ரூ. 2,500 (ஒவ்வொரு ஷெட்யூலுக்கும்) | ரூ. 5 |

முடிவுத் தேதி 16—9—71

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 5 செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் ( Demand Draft ) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணுமல் போனல் மின்சார வாரியம் பொறுப்பல்ல, ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவையல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**

**எண்ணூர் அனல் மின் திட்டம்,**
**எண்ணூர், சென்னை-57.**

தந்தி : ENTERMAL

தொலைபேசி எண் : 59556 (5 Lines)

## இட வசதி

### பால் பெருக்குத்துறை

### விளம்பரம்

சென்னை-51, மாதவரத்தில் அமைந்து காணும் அரசாங்கப் பால் பண்ணையில் சுமார் 1,000 கால்நடைகள் தங்கள் கன்றுகளுடன் இருக்க, வேண்டிய வசதி உள்ளது. தனிப்பட்டவர்களிடமிருந்தும், மற்றும் நிறுவனங்களிடமிருந்தும், மேற்கண்ட பால் பண்ணைக்குப் பால் தர வேண்டும் என்ற நிபந்தனையின்றி மேற்கண்ட இடத்தில் கால்நடைகளை வைத்திருக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் சென்னை-51 பாலுற்பத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி ஆணையாளர் அவர்களிடம் ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) செலுத்தி வரையறுக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) முன் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படவேண்டும். இத் தொகை விண்ணப்பதாரரின் காப்புத் தொகையில் வரவு வைத்துக் கொண்டு கணக்குச் சரி செய்யப்படும்.

3. விண்ணப்பதாரர்கள் பெரிய கால்நடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7·50-ம் சிறிய கால்நடைக்கு ரூ. 2·50-ம் செலுத்த வேண்டும். கன்றினும் சமயத்தில் பெரிய கால்நடைக்கு மாதத்திற்கு ரூ. 7·50 கன்றீனும் பகுதிக்காக வசூலிக்கப்படும்.

4. மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் உபயோகிக்கப்பட்ட அளவைப் பொறுத்துத் தனியாக வசூலிக்கப்படும். சென்னை நகர மக்களும் பிறரும் இவ்வசதிகளைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆணையாளர்,**

**பால் மற்றும் கால்நடை வளர்ச்சி**
**சென்னை-51**

## ஒப்பந்தப்புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை
### தமிழ்நாடு
### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8–9–1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| முத்துப்பேட்டை-மீமிசல் சாலை கி.மீ. 60/2 (மைல் 37/5)ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 7,250 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), தஞ்சாவூர். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 25–8–1971 முதல் 7–9–1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அமைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி-1.

## ஏல விற்பனை

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை

### ஏல அறிக்கை.

கண்டனம் செய்யப்பட்டிருக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 6707 ஸ்டுடிபேக்கர்—1953 மாடல், பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் சனிக்கிழமை 25-ம் தேதியன்று காலை 11·00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகள் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். சுப்பிரமணியம்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்
பாளையங்கோட்டை

## நீதித்துறை

அறிக்கை.

### ஸ்மால் காஸ் கோர்ட் சென்னை

எஸ்" 1487—ஆண்டு 1971

நமசிவாய செட்டியார் : வாதி.

வி. என். சுப்பிரமணியம் : பிரதிவாதி,

ரூ. 993·00ஐ, செலவு தொகையுடன் சேர்த்து வசூலிப்பதற்கு மேற்கண்ட தாவா 2—9—1971-ல் 3-வது நீதிபதி அவர்கள் முன்னிலையில் இறுதி டிஸ்போசலுக்காக வருகிறது என்பதை அறிக.

**பி. ராமநாதன்,**
வாதியின் அட்வகேட்.

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு மின்சார வாரியம்

## குத்தகை விளம்பரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், மின்சார வாரியத்தின் சார்பிலும் மேட்டூர் மின் திட்ட மேற்பார்வையாளரால் 30–9–1971 பிற்பகல் 3 மணிவரை மேட்டூர் மின்திட்ட மத்திய பண்டக சாலையிலிருந்து கீழ்க்கண்ட உபயோகமற்ற பொருட்களை வாங்குவதற்கான தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட குத்தகைச் சீட்டுகள் வரவேற்கப்படுகின்றன.

(1) பலதரப்பட்ட பழுதடைந்த இரும்புச் சாமான்களும் காலியான உபயோகப்படுத்தப்பட்ட நிர்ணயமற்ற பொருட்களும்.

(2) லோக்கா (நீராவி) ஸ்பேர்களும், லோக்கா பாதை சாமான்களும்.

(3) ஜி.ஐ. குழாய்களுக்கும் (பைப்புகள்) காண்டிட் குழாய்களுக்கும் பொருத்தமான இணைப்புச் சாமான்களும்.

ஒவ்வொரு குறிப்பிற்கும் தனித்தனியான குத்தகைச் சீட்டு .......... வாங்குவதற்கு என்று உறையின் மேல் எழுதப்பட்ட குத்தகைகளை அனுப்ப வேண்டும்.

குத்தகை நிபந்தனைகள் பற்றிய பிரதியும், குத்தகைப் படிவங்களும், பொருட்களின் விவரங்கள் அடங்கிய பிரதியும் பெறுவதற்கு ரூபாய் ஐந்து மட்டும் (திருப்பித்தரத்தக்கதல்ல) ஒவ்வொரு குறிப்பிற்கும் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ மேட்டூர் மின் இயக்கத்திட்டத் தலைமைக் கணக்காயர் (செலவினம்) அவர்களிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பண அஞ்சல் மூலமாகப் பெறவிரும்புவோர் தங்களுக்கு எந்தப் பிரதி வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டனுப்பவேண்டும்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 23–9–1971. குத்தகை நிபந்தனைகளும் பிரதியும் சாதாரண அஞ்சல் சான்று மூலமாக அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறிலோ அல்லது காலதாமதமாக வந்து சேர்ந்தாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகைப் படிவங்கள் மாற்றத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகையையோ அல்லது எல்லாக் குத்தகைகளையுமோ எவ்விதகாரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைக்காரர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

ரூபாய் 500 (ரூபாய் ஐந்து நூறு மட்டும்) கட்டுத் தொகையாக ஒவ்வொரு குறிப்புக் குத்தகைக்கும் மேட்டூர் மின் திட்டத் தலைமைக்கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது செடியூல் வங்கியில் செலுத்தப்பட்ட பண மாற்றோலையோ குத்தகைப் பிரதியுடன் இணைத்து அனுப்ப வேண்டியது. பண மாற்றோலையோ அல்லது இவ்வலுவலகத்தில் கட்டுத் தொகை செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகைத் தாள்கள் தள்ளுபடி செய்யப்படும்.

குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில்வந்திருக்கும்குத்தகைத் தாள்கள், குத்தகைதாரர்கள் முன்னிலையில் 30–9–1971 அன்று பிற்பகல் 4·00 மணியளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும், குத்தகைப் பிரதியும், குத்தகைத் தாளும் 30–8–1971-ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

**மேற்பார்வையாளர்,**

**மேட்டூர் மின் திட்டம்**

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு மின்சார வாரியம்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்க்கண்ட பொருள்களை வழங்குவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்துக்காகவும், அதன் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உறையின் மீது வரைக் குறிப்பு எண் இ: 1496 என்றும் கெடுத் தேதியும் குறிப்பிட்டுக் கீழே கையொப்பமிட்டிருப்பவரால் வரவேற்கப்படுகின்றன.

பொருள் விவரம்:

1. 5 Nos. 33 KV 750 MVA 630 ANPs, out door frame mounted breakers with 600—300/1/IA current transformers and all accessories complete.
2. 10 Nos. as above but with 400—200/1–IA CTs. instead of 600—300/1–IA CTs.

வரைக் குறிப்பு.—இ. 1496.
வரைக் குறிப்பு விலை.—ரூ. 25.
கட்டுத் தொகை.—ரூ. 5,000

(ரூபாய் ஐயாயிரம் மட்டும்.)

உரிய நாளும் நேரமும். — 23–9–1971 நண்பகல் 12 மணி.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3·00 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். வரைக்குறிப்புப் பெறுவதற்காகக் கணக்கு அலுவலர், சென்னை மின்சார சிஸ்டம் (விநியோகம்), 157, அண்ணா சாலை, சென்னை-2—அவர்களுக்கு வரைக்குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டுப் பணத்தை ரொக்கமாகச் செலுத்தலாம் அல்லது மணியார்டரில் அனுப்பலாம். பணம் செலுத்திய ரசீதை அல்லது மணியார்டர் ரசீதை, கீழே கையொப்பமிட்டவருக்கு வேண்டுகோள் கடிதத்துடன் முழு முகவரியையும் தந்து அனுப்பி வைக்கவேண்டும். மிகக் குறைந்த பட்ச ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எந்த ஒப்பந்தப் புள்ளியையுமோ ஏற்காதிருக்க மின்சார வாரியத்துக்கு உரிமை உண்டு. ஒப்பந்தப் புள்ளியைப் பிரித்துக் கொடுக்கவும் இந்த வரைக் குறிப்புப்படி பொருள் அளவினை மாற்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு ஆர்டர் தரவும் மின்சார வாரியத்துக்கு உரிமை உண்டு.

உரிய தேதிக்குப்பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

**தொழில் நுட்பம் (மின்சாரம்),**

157, அண்ணாசாலை,
சென்னை-2.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப் பணித்துறை.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 22—9—1971 மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—L. S. மன்னார்குடியில் சப்-டிவிஷனல் மாசிஸ்ட்ரேட் கோர்ட் கட்டடங்கள் கட்டுதல்.
2. ஒப்பந்த வகை—
3. பிணைப்புப்பணம்—ரூ. 2,750. (செலுத்துச் சீட்டுமூலம் பெற்றுக்கொள்ளப்படும்).
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30. அரசினர் கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கல்லணைக் கால்வாய், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.
5. விற்பனை வரி ; ரூ. 1·05. அரசினர் கருவூலத்தில் XII விற்பனைவரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல்வேண்டும்.
6. கட்டடங்கள் கட்டுவதற்கான கால அளவு. 8 மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் :— 16—8—1971.

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ. ப. து.)
தஞ்சாவூர் வட்டம்,
9—7—71, தஞ்சாவூர்.

## தேவை

நிர்வாக அலுவலகத்தில் தேவைக்காக 10,000 முதல் 15,000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் வாடகைக்கு அமிஞ்சிக்கரை, சேத்துப்பட்டு அல்லது நுங்கம்பாக்கம் பகுதியில் தேவைப்படுகிறது. சொந்தக்காரர்கள் இந்திய மருத்துவ இயக்குநர் அவர்களைக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் அணுகவும்.

**இந்திய மருத்துவ இயக்குநர்,**
சென்னை-10.

## இடமாற்ற அறிவிப்பு

### தமிழ்நாடு மின்சார வாரியம்

இதுகாறும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தஞ்சை மின் திட்ட அலுவலகம் முறையே 24, சிவாஜி நகர், 7, கணபதி நகர் இரு இடங்களிலும் செயல்பட்டு வந்ததை, 16–8–1971 முதல் 15, வ.உ.சி. நகருக்கு மாற்றப்பட்டு இருக்கிறது என்பதைப் பொது மக்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் மின்சாரம் உபயோகிப்போர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் வழங்கப்படுவோரும் புது இணைப்புகள் வேண்டுவோரும், மின்சாரத்தடங்கல்கள், இணைப்புகள் முதலியவற்றிற்கு "மேற்பார்வைப் பொறியாளர், தஞ்சாவூர், மின் திட்டம், 15 வ.உ.சி. நகர், தஞ்சாவூர்", என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பி. கே. இலட்சுமிநரசிம்மன்,**
மேற்பார்வைப் பொறியாளர்
தஞ்சாவூர் மின்சாரத் திட்டம்,
வ. உ. சி. நகர்,
தஞ்சாவூர்.

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

### டெண்டர் விளம்பரத் திருத்தம்

குறிப்பு எண் : சி 1101

எண்ணூர் அனல் மின் திட்டம்—இரண்டாம் நிலை—ஐந்தாவது யூனிட்டுக்கான மின் நிலைய நீடிப்பு—சுமார் 2000 டன் அளவுள்ள கட்டுமான இரும்புக்கான வரை வடிவம் கணக்கிடுதல், உண்டு பண்ணுதல், வழங்குதல், நிர்மாணித்தல் (Design fabrication supply and erection of about 2,000 tonnes of structural steel work.)

குறிப்பு எண் சி. 1101-க்கான ஒப்பந்தங்கள் திறக்கப்படும் நாள் அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி புதன் கிழமை நண்பகல் 12·00 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தொழில் நுட்பம், (பொதுவியல்)
157, அண்ணா சாலை, சென்னை-2.

## ஏல அறிக்கை.

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட தொடர் ஊர்தி பம்ப் எம். எஸ். ஒய். 2367 (பெரிய கவன்ட்ரி க்ளைமாக்ஸ் 1955-ஆம் வருட மாடல் கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**வி. ஜெயபெருமாள்,**
கோட்ட தீயணைப்பு அலுவலர்,
ஆணைக் குப்பம்,
கடலூர்-1.

## வேலைவாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ்நாடு இன்டஸ்ட்ரீஸ் சர்வீசில் விருத்தாச்சலத்தில் கலைமட்பாண்டப்பகுதிக்கு ஒரு உதவி மேற்பார்வையாளரும், சென்னை கொசவப்பேட்டை களிமண் பொம்மைகள், பாவைகள், சிலைகள் செய்வதற்குரிய பயிற்சி உற்பத்தி நிலையத்திற்கு அலுவல் மேல்பார்வையாளரும் தேவைப்படுவதால் அவற்றிற்குரிய விண்ணப்பங்கள் 16-9-1971 பிற்பகல் 5 மணிவரையிலும் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்—மாதம் ஒன்றுக்கு ரூ. 550-25-600-35-950.

கல்வித் தகுதிகள்—

1. பீங்கான் அல்லது சிலிகேட் தொழில்நுட்பக்கலையில் பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையத்தின் மூலம் அல்லது இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பட்டம் அல்லது டிப்ளமா அல்லது விருத்தாசலத்துப் பயிற்சிப் பள்ளியினால் பீங்கான் தொழிலில் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் உள்ளவர்கள் மனுச் செய்யலாம்.

அதோடு,

2. பீங்கான் தொழில் பட்டதாரிகளாயிருந்து இரண்டு ஆண்டுகளுக்குக்குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றவர்கள், டிப்ளமா நற்சான்றிதழ் பெற்றவர்கள் விஷயத்தில் நான்காண்டுகளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றுள்ளவர்கள்.

வயது.—1-7-1971-ல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும்.

குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியினும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதியுடைய ஷெட்யூல் வகுப்பினர், ஷெட்யூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. ஏனைய ஷெட்யூல் வகுப்பினர், ஷெட்யூல் பழங்குடியினர் ஆகியோருக்கு உயர்ந்த வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்கள் புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள் மற்றும் தேசிய மாணவர் படையில் 1-1-1963-ல் அல்லது அதற்குப்பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்டு மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர்படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில்சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-7-1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானாலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1-1-1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் ''செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2'' என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23, செ.மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி ''நூல் அஞ்சல்'' என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

### முதுநிலை பட்ட தரத்திலுள்ள போட்டித்தேர்வு

கீழ்க்கண்ட வேலைகளுக்கான நேரடித்தேர்வுகளுக்காக சென்னையில் 1971 நவம்பர்-டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்டத்தின் தரத்திலுள்ள (Masters Degree Standard) எழுதுகின்ற பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை ஆகியவை அடங்கிய போட்டித் தேர்வுக்கு 1971 செப்டம்பர் 25-ஆம் நாள் மாலை 5 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு சிவில் சர்வீசில் (நிர்வாகப்பிரிவு)—9 டிப்டி கலெக்டர் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 575-25-600-40-1,000.

2. தமிழ்நாடு வணிக வரிப்பணிகளில்—6 ஜாயன்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள் பதவிகள் சம்பளவிகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950

3. தமிழ்நாடு கூட்டுறவுப் பணிகளில்—2 டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஆஃப் கோவாபரேடிவ் சொஸைடீஸ் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950.

4. தமிழ்நாடு காவல் துறைப் பணிகளில்--2டிப்டி சூபரின்டென்டெண்ட் ஆஃப் போலீஸ் பதவிகள்—சம்பள விகிதம் மாதம் ரூ. 575-25-600-40-1,000.

5. தமிழ் நாடு பதிவுப் பணிகளில்—ஒரு மாவட்ட ரிஜிஸ்ட்ரார் பதவி—சம்பள விகிதம் மாதம் ரூ. 550-25-600-35-950.

போலீஸ் டிப்டி சூப்பிரன்டெண்டெண்ட் வேலைக்குத்தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் விண்ணப்பதாரர்கள் உயரம் 165 சென்டிமீட்டருக்குக் குறையாமலும் மூச்சை உள்ளிழுக்கும்போது மார்பளவு 86 செ. மீட்டருக்குக் குறையாமலும் முழுமூச்சை உள்ளிழுக்கும் போது மார்பு 5 செ. மீட்டர் குறையாமல் விரிவடைவதாகவும் இருக்க வேண்டும்.

எல்லா வேலைகளுக்கும் ஒரே விதமான மனு தான்.

இதுபற்றிய முழு விவரங்களையும், விண்ணப்ப மனுவையும், செயலாளர், தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன், சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம்எழுதி, 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட தங்களது முகவரியுள்ள, 23 சென்டிமீட்டர் நீளமுள்ள உறையில் ''நூல் அஞ்சல்'' என எழுதிக் கடிதத்துடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஒப்பந்தம்

### தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்.
### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட வேலைக்காக, பொது சுகாதாரப் பொறியியல் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் கிராமப் பொறியியல் பணித்துறை மற்றும் இவை போன்ற பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளரால் (பொ.சு.பொ.)அவரது அலுவலகம் 17, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–9–1971 மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அவை பிரிக்கப் படும்.

வேலையின் பெயர் : மேலூர் நீர்வழங்கு திட்டம்—ஆர்.சி.சி. பைப்புகள் மற்றும் காலர்கள் பி.2, பி. 3 பிரிவுகளின் சப்ளை டெலிவரி.

ஒப்பந்தப் படிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்).

ஒப்பந்தப்புள்ளியோடு இத் தொகை, கருவூல சலான் வடிவிலோ, டிமாண்டு டிராப்ட் வடிவிலோ, தேசஉடமை ஆக்கப்பட்ட பாங்கு ஒன்றின் பாங்க் காரண்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொ.சு. பொறியியல் டிவிஷன், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம் : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 15.50 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன் 14, ராமமூர்த்தி தெரு, சொக்கி குளம், மதுரை-2-ல் 12–9–1971 மாலை 5 மணி வரை பெறலாம்.

**கே. கோவிந்தமேனன்.**
மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ.சு.பொ.).
மதுரை-2.

8—8—1971.

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு
### தொழில் வணிகத் துறை

அரசினர் விஞ்ஞான, கண்ணாடி தொழில் பயிற்சி நிலையம், தொழில்பேட்டை, சென்னை-32ல் விஞ்ஞான கண்ணாடிக் கருவிகள் இணைப்பில் பயிற்சி பெறுவதற்காக, தமிழ் நாட்டிலுள்ள ஆண் மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதில் பயிற்சி பெற, குறைந்த பட்சத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு—கல்லூரியில் சேரும் அளவில்—தேர்வு பெற்றிருக்கவேண்டும். வயது 1-10-1971-ல் 16க்கு மேல் 20-க்குள் இருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலம் : இரண்டு ஆண்டுகள். பயிற்சிக்காக 20 பேர்தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் முதல் ஆண்டில் பயிற்சிக் கால உதவிப் பணமாக மாதம் ரூ. 40-ம் இரண்டாம் ஆண்டில் மாதம் ரூ. 50-ம் தரப்படும்.

மனு வடிவங்களை, மேற்பார்வையாளர், அரசினர் விஞ்ஞான கண்ணாடித் தொழில் பயிற்சி நிலையம், தொழில்பேட்டை, சென்னை-32-க்கு, 20 காசு அஞ்சல் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையை வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்டமனு வடிவங்களை மேற்பார்வையாளர் பெற்றுக் கொள்வதற்குரிய கடைசி நாள் 15—9—1971 ஆகும்.

## ஒப்பந்தம்--கால நீட்டிப்பு

### தமிழ்நாடு அரசு
### பொதுப்பணித் துறை
### திருத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு அறிவிப்பு.

வேலையின் பெயர் : (1) மேல் சோழன் குப்பம் கிராமத்தின் அருகில் எல்.எஸ். 2970 அடியிலிருந்து 3,300அடிக்குப்புதிய டாங்க் அமைப்பு 3,300 அடி மட்டத்தில் ஸ்லூயிஸ் கட்டுமானம்.

(2) மேல் சோழன் குப்பம் கிராமத்தின் அருகில் எல். எஸ். 2,400 அடியிலிருந்து 2,970 அடிக்குப் புதிய டாங்க் அமைப்பு. 2,970 அடிமட்டத்தின் ஸ்லூயிஸ் கட்டுமானம்.

பார்வை : (1) இந்த அலுவலகத்தின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 7531/71/டி10/நாள் 1—6—1971.

(2) இந்த அலுவலகத்தின் ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு 7531/71/டி 10/நாள் 12–7–1971.

மேற்கண்ட இரண்டு வேலைகளுக்காகவும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி மேற்கொண்டு 8–9–1971 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 8–9–1971 மாலை 3-00 வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3–15-க்கு அவை திறக்கப் படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 7–9–1971 வரை அலுவல் நேரத்தில் விற்கப்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ. ப.து.) செங்கற்பட்டு,
வட ஆர்க்காடு சர்க்கிள்,

## தமிழ்நாடு மின்சார வாரியம்

### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களை வாங்குவதற்குக்கீழே கையொப்பமிட்டவரால், தனித்தனியாக முத்திரையிட்ட " ஒப்பந்தங்கள் " அழைக்கப்படுகின்றன. ஒப்பந்தம் அனுப்பும் உறையின்மீது ஸ்பெசிபிகேஷன் எண்ணையும் முடிவு தேதியையும் தவருமல் குறிப்பிட வேண்டும். ஸ்பெசிபிகேஷன், ஒப்பந்த பாரத்தின் நகல்கள் ஆகியவை ஒவ்வொரு ஒப்பந்த பாரத்திற்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து) வீதம், ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ, தலைமை கணக்காயர், வேலூர் மின்சார அமைப்பு, எண் 10, கிழக்கு நெடுஞ் சாலை, காட்பாடி நகர் விரிவு, வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களுக்குச் செலுத்தி, 17–9–1971 தேதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| வரிசை எண்ணும், பொருளும். | ஓ.டி.எஸ். எண். | | பொருள் தரவேண்டிய இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 குறைந்த மின்னழுத்த ஜி. ஐ. பின்கள் — — | 6/71–72 | — | காட்பாடி ரயில் நிலையம். |
| 2 குறைந்த மின்னழுத்த ஷேக்கில் இன்சுலேட்டருக்குத் தேவையான உலோகப் பகுதிகள். | 7/71–72 | — | ,, |
| 3 குறைந்த மின் அழுத்த டி.ஐ. பிட்டிங்ஸ் — | 8/71–72 | — | ,, |
| 4 எம்.எஸ். ஸ்டே ஸெட் முழுவதும் — — | 9/71–72 | — | ,, |
| 5 டிரான்ஸ்பார்மர் ஸ்டிரக்சரல் கிளாம்புகள் — | 10/71–72 | — | ,, |
| 6 எம். எஸ். பின் பக்க கிளாம்ப் சாதாரண வகை. 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 11/71–72 | — | ,, |
| 7 எம்.எஸ். பின் பக்க கிளாம்பு சிறப்பு வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு | 12/71–72 | — | ,, |
| 8 எம். எஸ். ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 13/71–72 | — | ,, |
| 9 எம்.எஸ். ஸ்டே கிளாம்ப் சிறப்பு வகை 7·32 மீ. ஆர்.சி.சி. கம்பத்திற்கு. | 14/71–72 | — | ,, |
| 10 11000 ஓல்ட் எச்.ஜி. பியூஸ் செட்டுகள் — — | 15/71–72 | — | ,, |
| 11 அலுமினியம் நாப்ஸ் — — — — | 16/71–72 | — | ,, |
| 12 ஜி. ஐ. ஒயர் 7/20 — — — — | 17/71–72 | — | ,, |
| 13 சாதாரண தெரு விளக்குக்குத் தேவையான குழாய் பொருத்தும் கிளாம்புகள். | 18/71–72 | — | ,, |
| 14 விவசாய மின்னிணைப்புக்குத் தேவையான ஜி.ஐ. சர்வீஸ் இணைப்புக் குழாய் பொருத்தும் கிளாம்புகள். | 19/71–72 | — | ,, |
| 15 தேக்கு மரப் பலகை (0·483 மீ. × 0·381 மீ. × 15·09 மி.மீ.). | 20/71–72 | — | ,, |
| 16 தேக்கு மரப் பலகை (0·457 மீ. × 0·305 மீ. × 15·9 மி.மீ.). | 21/71–72 | — | ,, |
| 17 ஏரியல் தேக்கு மரப் பலகை (0·254 மீ. × 0·102 மீ.× 15·9 மி.மீ.). | 22/71–72 | — | ,, |
| 18 200 ஆம்பியர் 500 வோல்ட் பியூஸ் யூனிட்டுகள் — | 23/71–72 | — | ,, |
| 19 சாதாரண தெருவிற்குத் தேவையான ஜி.ஐ. குழாய் வளைவுகள் ( Brackets ). | 24/71–72 | — | ,, |
| 20 குழாய் விளக்குக்குத் தேவையான ஜி.ஐ. குழாய் வளைவுகள் ( Brackets ). | 25/71–72 | — | ,, |
| 21 ஜி.ஐ குழாய் ( Earth pipe ) 40 MM — | 26/71–72 | — | ,, |

# தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் புது ஆவடி சாலையில் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 9-9-1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரரின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

| எண். | வரிசை எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு ரூ. | கட்டுத் தொகை ரூ. | தஸ்தாவேஜிகளின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | மூன்று மாடி கொண்ட குடியிருப்புகள் (32 ×1) | | | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்) |
| 1 | 1 | கட்டடங்கள் பிரிவு எ3, எ4 | 2,47,000 | L.S. 3700 | |
| 2 | 2 | கட்டடங்கள் பிரிவு எ5, எ6 | 2,47,000 | L.S. 3700 | |
| 3 | 3 | கட்டடங்கள் பிரிவு எ7, எ8 | 2,47,000 | L.S. 3700 | |
| 4 | 4 | கட்டடங்கள் பிரிவு எ13, எ14 | 2,47,000 | L.S. 3700 | |
| 5 | 5 | கட்டடங்கள் பிரிவு பி1, பி2 (24 ×1) | 1,86,000 | L.S. 2800 | |
| 6 | 6 | கட்டடங்கள் பிரிவு பி3, பி4 | 1,86,000 | L.S. 2800 | |
| 7 | 7 | 6 மீட்டர் விட்டம், 8 மீட்டர் ஆழம் கொண்ட, கான்கிரீட் வட்டமும், பக்கச் சுவர்களும் கூடிய கிணறு கட்டுதல். | 25,000 | L.S. 375 | |
| 8 | 8 | 1,50,000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கம் ஒன்று 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 60,000 | L.S. 900 | |

வரை படங்களையும், ஒப்பந்தத் தஸ்தாவேஜிகளையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 30—8—71 முதல் 8—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 9—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு, வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

தாண்டவராயச்சத்திரம்
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

# திருவாளர் பொன்மொழியார்

## 5

'வளைகிற முள் நுழையாது' என்பார்கள். பொன்மொழியார் நின்று கொண்டிருந்த ரயில் பெட்டியின் கதவுக்குப் பக்கத்திலுள்ள இடைவெளியில் போலீஸ்காரர்கள் நுழைந்தார்கள்.

பொன்மொழியாரின் மூளை திடீரென மிக வேகமாக வேலை செய்தது.

இது-அணையப் போகும் விளக்கு ஒளியிடுவது போன்றது என்று உவமை சொல்ல முடியாது—பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிப் பூவைப் போன்றதாகும்.

சில சினிமாக் கதைகள், பல நாவல்களில் வரும் சம்பவங்கள் அவரது நினைவுக்கு வந்தன.

தன் 'இன்ஸ்டன்ட் குரு' ஒரு போலிச் சாமியார்; அவரைத் தேடியே போலீசார் வந்துள்ளனர்; அதனாலேயே சாமியார் காணாமல் போய்விட்டார் என்ற முடிவுக்கு வந்தார் பொன்மொழியார்.

சாமியாரைப் பற்றி நம்மிடம் விசாரிப்பார்களோ என்று உள்ளத்தில் அச்சம் எழுந்தது. பேனாவில் மை இருந்தால்தானே இரவல் கொடுக்க முடியும்? நமக்கு எதுவும் தெரிந்திருந்தால் தானே அவர்களுக்குச் சொல்ல முடியும், என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல் சுவீடன் நாட்டுப் பழமொழி ஒன்று நினைவுக்கு வேறு வந்தது. "பொய் சொல்லிப் பரிசு பெறுவதை விட, உண்மையைச் சொல்லித் துன்பப்படுவது உயர்வானது" என்ற அந்தப் பழமொழிப்படியே நடப்பது என்று உறுதி பூண்டார்.

பொன்மொழியார் உறுதி பூண்டதன் விளைவோ என்னவோ மெதுவாக நகரத் தொடங்கிய ரயில் நின்றது.

பக்கத்துப் பெட்டியில் யாரோ இரைந்து கொண்டிருந்தார்கள். "இஞ்சின் கோளாறும்; ரயில் கிளம்பக் கொஞ்சம் நேரமாகுமாம்."

ரயில் கிளம்ப நேரமாகும் என்ற வார்த்தைகள் காதில் கேட்டவுடன் நாமே சென்று அந்தப் போலி குருவைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைப்போம், என்று 'துப்பறியும் சாம்புவின்' துணிவுடன் ரயிலை விட்டு இறங்கி நடந்தார்.

பின்னாலேயே போலீசாரும் நடந்து வந்தார்கள். தன்னைத் தொடர்ந்துதான் நடந்து வருகிறார்களோ என்ற சந்தேகம் பொன்மொழியாருக்கு ஏற்பட்டது.

**இளவல்**

ஐஸ்லாந்து நாட்டிலே சொல்லுவார்களாம், "கட்டுப்பாடில்லாமல் வாழ்கிறவன் கௌரவமில்லாமல் சாவான்" என்று! அதுபோல அருந்ததியின் கட்டுப்பாட்டை மீறி வந்ததால் இந்த நிலை வந்ததோ என்று நெஞ்சம் நொந்தார்.

ரயிலிலே உள்ளவர்கள் போலீசார் பின் தொடர, தான் வருவதைக் கவனித்துவிடுவார்களோ என்று எண்ணி ரயில்வே ஸ்டேஷனிலுள்ள ஸ்டால் ஒன்றை நோக்கி வேகமாக நடந்தார்.

ஸ்டாலில் போய் நின்ற பிறகே பொன்மொழியார் திரும்பிப் பார்த்தார். போலீசார் இவரைத் தேடவில்லை. அவர்கள் தங்கள் வழியே போய்க் கொண்டிருந்தார்கள். பொன்மொழியார் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.

ஆனால், ரயிலில் உட்கார்ந்திருந்த அருந்ததியின் தோழி, அருந்ததியின் கணவர் இப்படிப் போலீஸ்காரர்களுடன் போவதைக் கவனித்தாள். "ஐயோ பாவம், தூக்கியெறியும் குதிரையைவிடச் சுமந்து செல்லும் கழுதை மேலானது" என்ற முடிவுடன் வீட்டை விட்டு விட்டுப் போலீஸ்காரர்களுடன் போகிறார் என்று முடிவு கட்டி விட்டாள். போலீஸ்காரர்கள் நேராகப் போனதையோ பொன்மொழியார் ஸ்டால் பக்கம் போனதையோ அவள் பார்க்கவில்லை;

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தொலை பேசி எண் : 20867

தபால் பெட்டி எண் : 226

| | (வருடத்திற்கு சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் .. .. .. | 0·50 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் .. .. | 4·00 |
| சிசன் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும். | |
| 15 நாட்கள் .. .. .. | 3·00 |
| 46 நாட்கள் .. .. .. | 3·00 |
| பிக்செட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும். | |
| 91 நாட்கள் .. .. .. | 4·75 |
| 6 மாதங்கள் .. .. .. | 5·25 |
| 12 மாதங்கள் .. .. .. | 6·25 |
| 2 வருடங்கள் .. .. .. | 6·75 |
| 3 வருடங்கள் .. .. .. | 7·25 |
| 5 வருடங்கள் .. .. .. | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் : தவணைகளுக்குப் பெறும் மொத்தப்பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும். ரூ. | 63 | 128·50 | 201 | 273 | 365·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.



## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-21

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரவை
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH



அருண் ஏஜன்சீஸ்

பஜார் தெருவு

பொதட்டூர்பேட்டை,

திருத்தணி தாலுகா,

செங்கை மாவட்டம்.

எங்களிடம் பயிர்களுக்கு வேண்டிய எல்லா விதமான கலவை உரங்களும், யூரியா, அமோனியம் சல்பேட், சூபர் பாஸ்பேட், பொட்டாஷ் மற்றும் பூச்சி மருந்துகளும் மலிவான விலையில் கிடைக்கும். நாங்கள் அரசு சிமெண்ட்டும் மிக மலிவான விலையில் விற்கிறோம். உங்கள் தேவைகளை எங்களிடம் வாங்கிக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அருண் ஏஜன்சீஸ்

பாலாஜி பெர்டிலைசர்ஸ் உரங்கள்,

அரசு சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்கள்.

ஸ்டால் பக்கம் வந்த பொன்மொழியார் இப்பொழுதுதான் பக்கத்தில் நின்ற மனிதரைப் பார்த்தார். பார்த்தவுடன் திடுக்கிட்டார். கூச்சல் போட்டு எல்லாரையும் அழைக்கலாமா என்று கூட யோசித்தார். ஆனால், இப்படி ஒரு சில நிமிடங்களில் 'குருத் துரோகி'யாக மாறுவதா என்ற எண்ணம் வந்தது. இன்னா செய்தார்க்கும் இனியது அல்லவா செய்ய வேண்டும், என்ற முடிவுக்கு வந்தவராய் குருவை நோக்கிக் கனைத்தார்.

'இன்ஸ்டண்ட்' குருவோ இப்பொழுதுதான் திரும்பிப் பார்த்தார். அரை டஜன் வாழைப் பழங்களை உள்ளே தள்ளிவிட்டுக் கையில் அரை டஜன் பழங்களை வைத்துக் கொண்டு மிகப் பொறுமையாக உரித்துக் கொண்டிருந்தவர் தமது திடீர் சீடகோடியைக் கண்டு மகிழ்ந்தார்.

குருவைக் கண்டவுடன் மயங்கி நின்ற பொன்மொழியாருக்கு வழக்கம் போல ஸ்காட்லாந்துப் பொன்மொழி நினைவுக்கு வந்தது. நொண்டியுடன் நீ ஒரு வருடம் நடந்தால் வருட இறுதியில் நீயும் நொண்டியாவாய், என்ற அந்தப் பழமொழிபோல, துறவு மனப்பான்மையும் வந்தது. குருவைப் போலப் பசியும் வந்தது.

கடையில் வாழைப்பழம் வாங்கப்போன பொன்மொழியாரைத் தடுத்து, ''எட்டுப்பழம்தான் என்றால் தின்ன முடிந்தது'' என்று சொல்லிவிட்டு நான்கு பழங்களைச் ''சாப்பிடுங்கள்'' என்று கூறினார் குரு.

குரு கொடுத்த பழங்களை வாங்க மறுப்பது அழகல்ல என்ற நினைப்புடன் பொன்மொழியார் பெற்றுக் கொண்டார்.

அருந்ததி ஒருநாள் கூட இவ்வளவு அன்புடன் எதுவும் நமக்குக் கொடுத்ததில்லை. ஆனால், எவ்வளவு அன்புடன் குரு நம்மிடம் நடந்து கொள்கிறார்? இவரைப் போய்த் தவறாக நினைத்து விட்டோமே! ''நரி நம்புகிறது. எல்லாரும் தன்னைப் போலவே கோழிகளைப் பிடித்துத் தின்கிறார்கள்'' என்ற பிரெஞ்சுப் பழமொழியைப்போல நாமும் எண்ணிவிட்டோமே! எல்லாச் சாமியார்



களும் இப்படிப்பட்டவர்களா? இல்லவே, இல்லை! இப்படிச் சிந்தனை ஓடியது.

குரு, இப்பொழுது பேசத் தொடங்கினர்.

''குருடாகப் பிறந்தவன், ஒரு போதும்வெளிச்சத்தை நம்பமாட்டான்; பணக்காரனுகப்பிறந்தவன் பசியை அறிய மாட்டான்; நாலையும் துறந்தவன்தான் நல்லது கெட்டதை அறிவான். பசியை அறிந்ததனுல்தான் இப்படிக் கொஞ்சம் பழத்தை உண்டு பசியாறலாம் என்று வந்தேன்''.

''சுவாமி! அரேபிய நாட்டிலே ஒரு பழமொழி சொல்லுவார்களாம், 'நோயாளியைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல்; இரண்டு பேர்களுக்கிடையில் சமாதானம் செய்ய இரண்டு மைல் தூரம் செல்; ஒரு நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல்!'' என்று; அது போலத் தங்களைக் காண ஆயிரம் கிலோ மீட்டர் வரை செல்லலாம். தங்களைக் காணுததனுல் இப்படி வந்தேன்.

''பொன்மொழியார் அவர்களே! 'அன்பினுல் சிங்கத்தின் மீசையைப் பிடிக்க முடியும்' என்ற அரேபியப் பழமொழியை நான் கேட்டு இருக்கிறேன். ஆனுல் தங்கள் அன்பினுல் எரிகின்ற பல்பையும் பீஸாக்கிவிடலாம்; எரிமலையை அணைத்து விடலாம்'' என்றுர் சாமியார்.

பொன்மொழியாருக்கு உச்சி குளிர்ந்தது. அதே நேரத்தில் சந்தர்ப்ப, சூழ்நிலையை உணராது அடிக்கடி பழமொழிகள் ஞாபகம் வருமே, அப்படி ஒரு பழமொழி ஞாபகத்துக்கு வந்தது. 'உன்னை ஒருவன் அளவுக்கு ஒரு முறை புகழ்கின்றுன் என்றுல் உன்னை ஏமாற்றத் தொடங்கி விட்டான்; நீ ஏமாற ஆரம்பித்து விட்டாய்'' என்ற அந்தப் பழமொழியை இப்போது நினைப்பது தவறு என்று தோன்றியது. எப்படிப்பட்ட குருவை இப்படி நினைக்கலாமா? சேச்சே என்று தனது பழமொழியறிவை நொந்தார்.

''அறியும் சக்தியைப் போன்றதொரு கண்ணில்லை; அறியாமையைப் போன்றதொரு குருடு இல்லை; நோயைப் போன்றதொரு பகைவன் இல்லை; மரணத்தைப் போன்றதொரு பயம் இல்லை''—என்ற பழமொழி எவ்வளவு உண்மையானது! ஓர் உண்மையான துறவியை எவ்வளவு தவருக நினைக்கின்றேம்? உண்மை அறியும் சக்தியில்லாமல் தடுமாறுகிறேமே! என்று எண்ணத் தொடங்கிவிட்டார்.

சீடரின் சிந்தனையைப் பார்த்த குரு, நான் வண்டியில் போய் அமருகிறேன், வாருங்கள் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினர். அந்தச் சமயத்தில் எதிர்ப் பக்கத்திலிருந்து இரண்டு போலீஸ்காரர்களும் வரவே, மறுபடியும் பொன்மொழியாரிடம் அச்சம் தலைதூக்கியது. ஆகவே, குருவை அழைத்துக் கொண்டு, ''என் நண்பர் ஒருவர் அங்கே அமர்ந்திருக்கிறுர். அவரைப் பார்த்துவிட்டு வரலாம். கல்வி, கேள்வி ஞானம் மிகுந்த அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துவது நல்லது'' என்று சொன்னுர் பொன்மொழியார். சீடரின் மொழி கேட்டு, மறுப்பு எதுவும் மொழியாது முன்னுலே நடந்தார் குருநாதர்.

இந்த நேரத்தில் ரயில், திடீர் குரு, திடீர் சீடரைப் போல், திடீர் முடிவு எடுத்து ஊதிக்கொண்டு கிளம்பியது.

உடனே குருவும் சீடரும் ஓடிப்போய் ரயிலில் ஏதோ ஒரு பெட்டியில் ஏறினர்கள்.

அங்கே.... (தொடரும்)

---


## காலக் கண்ணுடி

[illegible] காலம் பதித்துச் சென்ற [illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'ஆதாரங்' ஆராய்ச்சிக்குப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா




பகல் முழுதும்
கடினமான வேலைக்குப் பிறகு...

புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே ஒரு கப்
அருந்துங்கள்
– 5 செகண்டில் தயார்!








NCE 6369

# நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே

முற்றிலும் சுத்தமான காப்பி—
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

# பிறப்பு இறப்புப் பதிவுகள்

**என்.வி.கே.கே. நம்பியார்**

நாட்டு மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கு நான்கு நிகழ்ச்சிகள் காரணமாகின்றன. அவை: (1) பிறப்புக்கள், (2) இறப்புக்கள், (3) புதிய குடியேற்றங்கள், (4) வெளியேற்றங்கள் ஆகும். நம் நாட்டில் குடியேற்றங்களினால் மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெருக்கம் ஏற்படுவதில்லை; மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு இங்கு முக்கியக் காரணமாய் இருப்பது இறப்புக்களை விட பிறப்புக்கள் மிகுதியாக இருப்பதே ஆகும்.

கடந்த சில ஆண்டுகளாக இறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி இருக்கிறது ; ஆனால் பிறப்புக்களிலோ அல்லது பிறப்பு வீதங்களிலோ ஏதும் குறிப்பிடத்தக்க குறைவு தெரியவில்லை.

மக்கள் தொகைப் பெருக்க வீதத்தின் உத்தேச அளவை அறிவதற்காக, அவ்வப்போது பிறப்பு வீதத்திலும், இறப்பு வீதத்திலும் ஏற்படும் மாற்றங்களை ஆராய வேண்டியது அவசியமாகிறது. இதற்கு, மிகச் சிறந்த பதிவு முறையை—எல்லாப் பிறப்புக்களையும் இறப்புக்களையும் தவறாமல் பதிவு செய்யத்தக்க ஒரு முறையை—நாம் வகுக்க வேண்டியுள்ளது. எல்லாப் பிறப்புக்களும், இறப்புக்களும் பதிவு செய்யப்படுமானால், அவை பல்வேறு பொதுச் சுகாதாரப் பிரச்சினைகளையும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு மிக்க துணை செய்யும். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் பொறுப்பிலுள்ள ஆட்சியாளர்கள், தேசிய உற்பத்தி, தேசிய வருவாய், உணவு உற்பத்தி, உணவுத் தேவை ஆகியவற்றின் தனியொருவரின் சராசரி அளவை முடிவு செய்வதற்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றி அறியவேண்டியுள்ளது. பல்வேறு ஆட்சி நிறுவனங்களும் தத்தம் வேலைத் திட்டங்களின் சாதனைகளையும், வெற்றியையும் மதிப்பிட்டறிய மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றிச் சரியாக அறிய வேண்டியுள்ளது. மேலும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் பொருளாதார நிலை குறித்து ஆராய்ந்தறியவும், திறம் மிக்க பிறப்பு இறப்புப் பதிவு முறை, மிகவும் இன்றியமையாததாகிறது. மற்றும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் திறனையும், வெற்றி தோல்விகளையும் மதிப்பிட்டறிவதற்கும் முழுமையான, சரியான பிறப்பு-இறப்புப் பதிவு தேவையாகும்.

நம்பத்தக்க பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் இல்லாதபோது, சென்ஸஸ் கணக்கெடுப்பின் அடிப்படையில் பிறப்பு-இறப்பு வீதங்களைக் கணக்கிட வேண்டியுள்ளது. ஆனால் சரியான பிறப்பு இறப்புப் பதிவு முறை நடைமுறையில் இருக்குமானால், எளிதில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அளந்தறிய முடியும். பிறப்பு-இறப்புப் பதிவின் இன்றைய நிலை திருப்திகரமாக இல்லை. இன்றைய முறை திருத்தி அமைக்கப்பட்டாலொழிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி, தவறான புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே கணக்கிடப்படும்.

இன்று எல்லா வேலைத் திட்டங்களின் பலனும் மதிப்பிடப்படுகின்றன. இந்தப் பயன் மதிப்பீடு, திட்டத்தைப் பற்றிய சரியான புள்ளி விவரங்களின் உதவியுடன் மட்டுமே செய்ய முடியும். நம்முடைய திட்ட வேலைகள் அனைத்துக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றியும், பிறப்பு இறப்பு வீதங்களைப்பற்றியுமான உண்மை நிலையை அறிய வேண்டியுள்ளது. திறம் மிக்க பிறப்பு—இறப்புப் பதிவு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலமே இவ்வுண்மைகளை அறியமுடியும்.

குடிமை, வாக்குரிமை, தனி மனிதனின் உரிமைகள் ஆகியவற்றை நிலைநிறுத்தப் பிறப்புப் பதிவேடுகள் மிகவும் பயன்படுகின்றன.

பள்ளியில் சேர, வேலையில் சேர, ஆயுள் ஈட்டுறுதிப் பலன்களைப்பெற முதலியவைகளுக்கு பிறப்புப் பதிவிலுள்ள ''பிறந்த தேதி'' உதவுகிறது; தேவைப்படுகிறது. அதே போல் சட்டபூர்வமான குடும்பச் சார்பை நிரூபிக்க தாய்-தந்தை யாவர் என்பதை நிரூபிக்கப் பிறப்புப் பதிவு உதவுகிறது.

அதேபோன்று, இறப்புப் பதிவேடுகளும் மருத்துவ-சுகாதாரப் பணிகளுக்கு இறப்புப் புள்ளி விவரங்கள் அளிக்கும் ஆதாரங்களாக விளங்கி மிகுந்த பலனளிக்கின்றன. மேலும் அவை, (1) இறந்தவரின் ஆயுள் ஈட்டுறுதித் தொகையைக் கேட்டுப் பெற, (2) ஓய்வூதியங்களைக் கேட்டுப்பெற, (3) இறந்தவரைப் பற்றிய பல உண்மைகளை (அதாவது இறந்த சூழ்நிலை, இறப்புக்காரணம், வயது ஆண்/பெண், சமூகம்) அறியப் பயன்படுகின்றன.

மக்கள் தொகைப் புள்ளி விவர இயல் வல்லுநர்க்கும் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் மிகவும் பயன்படுகின்றன. பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைக் கொண்டு மக்கள் தொகைப்புள்ளி விவர இயல் வல்லுநர்கள், மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கான பல்வேறு காரணங்களை ஆராய முடியும்.

மக்கள் தொகை மாற்றங்களை ஐந்து வகையாகக் கூறலாம். அவையாவன :—

1. உயர்ந்த அளவு பிறப்பு வீதமும் உயர்ந்த அளவு இறப்பு வீதமும்.

2. உயர்ந்த அளவு பிறப்பு வீதமும் குறைந்து வரும், எனினும் சுமாராகக் குறைந்த அளவு இறப்பு வீதமும்

3. உயர்ந்த பிறப்பு வீதமும் சுமாராகக் குறைந்த இறப்பு வீதமும்.

4. குறைந்துவரும் பிறப்பு வீதமும் மிகக் குறைந்த இறப்பு வீதமும்.

5. உயர்ந்தும், குறைந்தும் மாறி மாறிவரும் பிறப்பு-இறப்பு வீதங்கள்.

இந்தியாவில் இப்பொழுது, மக்கள் தொகையில் மேலே 3-வது ஆகக் கூறப்பட்ட வகை மாற்றம் நிகழ்ந்து வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தீவிரமாக எடுக்கப்படும் முயற்சிகளின் விளைவாக, இந்திய மக்கள் தொகையில், மேலே 4-வது ஆகக் கூறப்பட்ட வகை மாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிறப்பு-இறப்பு வீதங்களின் போக்கை ஆராய்வதற்கு ஒரு சிறந்த பிறப்பு-இறப்புப் பதிவு முறை மிகவும் அவசியமாகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில், திருமண வயதையும், பிள்ளைப்பேற்று வயதையும் முதல் இரண்டாவது பேறுகளின் அடிப்படையில் பிள்ளைப்பேற்றுத் திறன் வீதத்தையும் கணக்கிடுவதற்குப் பிறப்பு-இறப்புப் பதிவேடுகள், கருத்தடைக்குத் தகுதியுடைய தம்பதிகளின் பட்டியல் பதிவேடுகள் ஆகியன பெரிதும் துணை செய்கின்றன.

மக்கள் தொகையின் பிள்ளைப் பேற்றுத்திறன், இறப்பு, நோய் அளவுகளில் மாற்றம் ஏற்படுத்துவதே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கொள்கை ஆகும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பலனை நாம் அவ்வப்போது (காலமுறைப்படி) மதிப்பிட்டறிய வேண்டியுள்ளது. இந்த மதிப்பீடு, பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைப் பகுத்தாராய்வதன் மூலமே செய்ய முடியும். திறம் மிக்க மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குப் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்கள் சரியாக வைத்திருக்க வேண்டியது முதற் தேவையாகும்.

உலகிலுள்ள நாகரிக நாடுகள் ஒவ்வொன்றிலும் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரச் சேகரிப்புக்குச் சரியான முறை பின்பற்றப்படுகிறது. சரியான பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் தனி மனிதனுக்கு—சமுதாயத்துக்கு—நாட்டுக்குப் பல்வேறு வழிகளில் பயன்தருகிறது. மேலும் எல்லாப் பொதுச் சுகாதாரத் திட்டங்கள் பல்வேறு திட்ட வேலைகள் ஆகியவற்றின் தன்மையையும், திறனையும் ஆராய்வதற்கும் இப்புள்ளி விவரங்கள் பெரிதும் உதவுகின்றன.

## வேலையில்லாத் திண்டாட்டம்—இரண்டு விதம்

மாநிலத்தில் எல்லா வகுப்பினர்களிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிக அளவில் இருக்கிறது என்ற போதிலும், முற்பட்ட வகுப்பினர்களிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், பிற்பட்ட வகுப்பினர்களிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கூட வேலை கிடைப்பதற்காகப் பெரும் பாடுபடுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் வேண்டுவதெல்லாம் மதிப்புள்ள, நல்ல ஊதியம் கிடைக்கக்கூடிய வேலைகளே. பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கேட்பது தங்களுக்கு ஏதாவது ஒரு வேலை வேண்டும் என்பதாகும். முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் கேட்பது தங்களுக்கு ஒரு ‘நல்ல வேலை’ வேண்டும் என்பது.

பிற்பட்ட வகுப்பினர்களிடையே படிப்பு இல்லாதவர்களும், தொழில் நுட்பம் தெரியாதவர்களும் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வேலை கிடைத்தாலும்—உடல் உழைப்பு வேலையாகவோ தரக் குறைவான வேலையாகவோ அல்லது அருவருக்கத்தக்க வேலையாகவோ இருந்தாலும் சரி—மனமுவந்து எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.”

—தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு அறிக்கைப் பகுதி




# நாட்டை முன்னேற வைத்திடும் நற்பணியிலே

எரிபொருள் நிரப்புவதிலே நிபுணத்துவம் கண்ட **இண்டியனாயில்** பணியினை, உலகப் புகழ்படைத்த 20 விமான நிறுவனங்கள் பயன்படுத்திவருகின்றன. பாரத நாட்டின் போக்குவரத்து, தொடர்புத் துறைகளின் வளர்ச்சியிலே தனியிடம் வகிக்கிறது **இண்டியனாயில்** பணி. நாட்டின் விவசாய, தொழில்துறைகளுக்குச் செலுத்திவரும் பங்கோ அதற்குச் சற்றும் குறைந்ததல்ல.

பத்தே ஆண்டுகளுக்குள், எண்ணெய்ச் சுத்திகரிப்பிலும் விற்பனையிலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய நிறுவனமாக ஓங்கிநிற்கிறது **இண்டியனாயில்** -- நாட்டின் முழுமொத்தப் பெட்ரோலியத் தேவைகளிலே பாதிக்கு மேல் ஈடுசெய்கிறது.

உள்நாட்டு க்ரூட் ஆயிலை வினைப்படுத்தப் பற்பல சுத்திகரிப்பு ஆலைகள், மாணப்பெரிய குழாய்வழிப் போக்குவரத்து மண்டலம். நாடுநெடுக விழுது பரவிக் கிளைத்த சேமிப்பு, வினியோக அமைப்புகள் -- யாவுமிணைந்த இண்டியனாயில், நாட்டின் பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் உரிய ஆயிலை வற்றாத ஊற்றாய் வழங்கிவருகிறது.

நாட்டின் திட்டமிட்ட முன்னேற்றத்திற்கான ஒரு பங்காக, பெட்ரோலியம் பெற்றடைவதிலே, தன் காலூன்றித் தன்னிறைவு காணும் இலக்கை நோக்கித் தாயகத்தை இட்டுச்செல்ல **இடையறாது உழைத்துவருகிறது இண்டியனாயில்.**

INDIANOIL

பொருளாதார
வளமைக்கான
தேசிய ஸ்தாபனம்

**இண்டியன் ஆயில்
கார்ப்பொரேஷன்
லிமிடெட்**

TM

Dattaram-IOC-78

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்காகக் குழாய்க் கிணறுகள் அமைக்க எந்த அளவு உதவி செய்ய முடியும் என்பதனை ஆய்வு செய்ய உலக பாங்கு ஒரு குழுவினைத் தமிழகத்திற்கு அனுப்பியது எனத் 'தமிழரசு' (அக். 16, 1970) இதழில் வெளி வந்தது. அந்தக் குழுவின் முடிவுப்படி உலக பாங்கு தமிழ்நாடு அரசுக்கு உதவி செய்ததா?

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

விடை : ''நாம் அனுப்பியிருந்த திட்டம், உலக வங்கியின் கீழ் நடைபெறும் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் (International Development Association) ஏற்கப்பட்டிருப்பதை இப்பேரவைக்குப் பெரும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். மாநில நிலவள வங்கியின் தலைவரும், அரசு அதிகாரிகளும் 1971 ஏப்ரல், மே திங்களில் வாஷிங்டனில் நடைபெற்ற உரையாடல்களில் கலந்துகொண்டு, சென்ற பணியினை வெற்றிகரமாக முடித்து அதன் விளைவாக நமக்கு ரூபாய் 40 கோடி அளவுக்குக் கூடுதல் கடன் வசதி கிட்டிட ஏற்பாடுகள் செய்து முடித்துள்ளனர்'' என்று தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றப் பேரவை முன் ஆற்றிய வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளதைத் தங்களுக்கு நினைவுப்படுத்துகிறோம்.

வினா : ஜூலை 16, 1971 'தமிழரசு' இதழில் வெளியாகி உள்ள 'செக்கச் சிவந்த தக்காளி' என்ற பகுதியைப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். நான் கோ. 1 தக்காளி பயிர் செய்ய விரும்புகின்றேன். அதற்குரிய விதையை எங்குப் பெறலாம்? பெறும் முகவரியையும், அது கிலோ என்ன விலை என்பதையும் தெரிவிக்கும்படி மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

—பெரியசாமி,
காஞ்சிகோயில்.

விடை : கோ. 1 தக்காளி விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கலாம். அங்குக் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) [Deputy Agricultural Officer (Extension)] அவர்களிடம் கூறி வரவழைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளலாம். அல்லது கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

''நுண்ணறிஞர் (காய்கறி),
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.''

* * *

வினா : 'செக்கச் சிவந்த தக்காளி' கதையில் பலவகைத் தக்காளியை அறிமுகப் படுத்தியுள்ளீர்கள். அதன் விதைகள் எங்குக் கிடைக்கும் என்ற விவரத்தை அடுத்த இதழில் அறிமுகப்படுத்தும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

—எஸ். இராமச்சந்திரன்,
விக்ரமம்.

விடை : மேற்கூறிய விடையே தங்கள் கேள்விக்கும் பொருந்தும். ஆனால், 'ஆர்.இ.டி.சி.1' (R. E. T. C. 1.) என்ற தக்காளி விதை பெறவேண்டு



வேளாண்மை அமைச்சர், மானிய விலையில் தெளிப்பானை வழங்குகிறார்

மானால் பின்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

"முதல்வர்,
கிராமிய வளர்ச்சி
பயிற்சி நிலையம்,
கிருஷ்ணகிரி (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்.

* * *

**வினா:** நான் பொட்டல்புதூர் கிளை நூலகத்தின் வாயிலாக 'தமிழரசு' இதழ் படித்து வருகின்றேன். அதில் வெளியாகும் விவசாய விளக்கங்கள் விரிவான முறையில் இருக்கின்றன. ஆகவே, ஒரு ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலைச் சாகுபடி செய்ய வேண்டிய முறைகளைப்பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—ச. பிரான்சிஸ்,
பொட்டல்புதூர்.

**விடை:** தற்பொழுது மானாவாரியாகப் பயிர் செய்ய 'டி.எம்.வி. 10' என்ற நிலக்கடலை ரகத்தைப் பயன்படுத்துதல் மிகுந்த இலாபம் அளிக்கும். இந்த ரகத்தின் சாகுபடிக் குறிப்புகளின் முழு விவரமும் அறியத் தயவுசெய்து ஆகஸ்ட் 1-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 15-ஐப் படியுங்கள்.

* * *

**வினா:** கடலை போட எந்த அளவு, என்ன உரம் இட வேண்டும்? விதைபோட்ட எத்தனை நாட்கள் கழித்து யூரியாவை மேல் உரமாக 'ஸ்ப்ரே' செய்ய வேண்டும்?

வரிச்சிக்குடி கிராம வானொலி மன்றம், புதுவை மாநிலம்.

**விடை:** இறைவை நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 7 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 21 கிலோ சாம்பல் சத்து அளிக்க வேண்டும். இந்த அளவு சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 175 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தை (Mixture fertiliser) கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும்.

மானாவாரி நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்தும், 8 கிலோ மணிச் சத்தும், 12 கிலோ சாம்பல் சத்தும் போட வேண்டும்.



நிலக்கடலை மகசூல் பெருக இரசாயன உரமிடுங்கள்.

இச்சத்துக்களைப் பெற ஏக்கருக்கு 100 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தைக் கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும். அதன் பின் 15 நாட்கள் கழித்துச் சுண்ணாம்புச் சத்து (Calcium) நிலக்கடலைக்கு இடுவது இன்றியமையாதது. தரமான காய்கள் தோன்றவும், பருப்புகள் நன்கு முதிர்ச்சி பெறவும் சுண்ணாம்புச் சத்து தேவை. எனவே, நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சமும் அளித்தல் வேண்டும். அத்துடன் 'போராக்ஸ்' (Borax) போடுவதால் நிலக்கடலையின் காய்கள் பருமனாக ஆவதுடன், சுமார் 15 சத அதிக மகசூலும் கிடைக்கிறது. எனவே, நிலக்கடலை சாகுபடியாகும் நிலத்திற்கு 2 அல்லது 3



மானாவாரிக்கு ஏற்றது கே. ஆர். ஆர் 1 அல்லது கே. ஆர். ஆர். 2 எள்

ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 5 முதல் 7 கிலோ வரை 'போராக்ஸ்' இட வேண்டும்.

* * *

**வினா:** தற்பொழுது மானாவாரியாக எள் விதைக்க எந்த ரகத்தை விதைக்கலாம்? என்ன இரசாயன உரம் இட வேண்டும்? ஏக்கருக்கு எவ்வளவு விதை விதைக்க வேண்டும்?

—தங்கராசு, பெரம்பலூர்.

**விடை:** ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மானாவாரியாக எள் சாகுபடி செய்ய வேண்டுமானால், 'கே.ஆர்.ஆர். 1' (கரூர்-1) அல்லது 'கே.ஆர்.ஆர். 2' (கரூர்-2) ஆகிய ரகங்களைப் பயன்படுத்துவதே நல்லது. நிலத்தை 4 முதல் 6 தடவை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது, கடைசி உழவில் ஏக்கருக்கு 5 வண்டி தொழு எரு, 45 கிலோ அமோனியம் சல்பேட், 28 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், 2 கிலோ மாங்கனீஸ்சல்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். ஏக்கருக்கு 2½ கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைத்த 10-வது நாளும், 20 முதல் 25 நாட்களிலும் இரு முறை செடிகளைக் கலைத்து விடலாம். செடிக்குச் செடி 12×12 அங்குலம் விட்டு அதிகமாக இருக்கும் செடிகளை அகற்றுதல் நல்லது. 2-வது முறையாகப் பயிர்கலைப்புச் செய்யும் போது, முதற்களைஎடுக்கலாம். தேவையானால் விதைத்த 35 நாட்களுக்குள் 2-வது களை எடுக்கலாம்.

**வினா:** பெல்லாரி பெரியவெங்காயம் நாற்றுவிட சிறந்த பட்டம் எது? வரும் ஆவணி மாத வாக்கில் நாற்றுவிட பட்டம் உள்ளதா? விதை எங்கு கிடைக்கும்? ஒரு ஏக்கர் நடவு செய்ய எவ்வளவு விதை தேவை?

—எம். தியானமூர்த்தி,
கோபி.

**விடை:** பெல்லாரி வெங்காயத்தை ஆடி (ஜூன்-ஜூலை) மாதத்தில் நாற்றுவிட்டிருக்க வேண்டும். ஆடி மாதத்தில்

எவரேனும் நாற்று விட்டு வைத்திருந்தால் 30 நாட்கள் வயதுடைய நாற்றுகளை வாங்கி ஆவணி மாதத்தில் நடவு செய்யலாம். அவ்வாறு நாற்று கிடைக்காவிட்டால், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் நாற்று விடலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய 2·25 கிலோ விதையை 5 சென்ட் நாற்றங்காலில் நாற்று விட வேண்டும். தேவையான விதைகளைப் பெற முன்கூட்டியே உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள். பெல்லாரி வெங்காயச் சாகுபடி முறைகளை அறிய டிசம்பர் 16, 1970 'தமிழரசு' இதழில் வெளியாகி உள்ள ''வெங்காய மகிமை'' என்ற கட்டுரையைப் படியுங்கள்.

**வினா :** நான் ஒரு சிறு விவசாயி. நெற்பயிருக்கு மருந்து தெளிப்பதற்காக நானே ஒரு ஸ்ப்ரேயரை வாங்கி வைத்துக் கொள்ள விரும்புகின்றேன். இதற்கு அரசாங்கம் ஏதேனும் உதவி செய்யுமா?

—செல்ல பெருமாள், பழனி.

**விடை :** தனிப்பட்ட உழவர்கள் நெற்பயிருக்கு மருந்து தெளிக்க சொந்தத்தில் கையால் இயங்கும் தெளிப்பான்களை (Haud operated Sprayers) வாங்கிக் கொள்ள அரசாங்கம் மானியம் (Subsidy) கொடுக்கிறது. வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிப்பான்களில் மிகவும் குறைந்த விலையில் பாதியை மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மானியம் போக மீதித் தொகையை விற்பனை வரியுடன் கட்டினால் தெளிப்பான்களைப் பெற்றுக்கொள்ளலாம். தெளிப்பான்களை மானிய விலையில் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் மூலமாக மனு அனுப்புங்கள்.

# வட ஆர்க்காடு மாவட்டத்தில்

## வளர்ச்சிப் பணிகள்

பசுமைப் புரட்சியிலும், திருந்திய முறைச் சாகுபடி வேலைகளிலும், இலக்கிடப்பட்ட அளவுக்கும் மேலாகச் சாதனைகள் செய்வதிலும் வட ஆர்க்காடு மாவட்டம் குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றிவருகின்றது.

மாவட்டத்தில் மொத்தம் உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்களுள் 32 ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்கள் வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 35 ஊராட்சி ஒன்றியங்களில் சொந்தமாக விவசாயக் கிடங்குகள் கட்டப்பட்டுப், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 12 ஊராட்சி ஒன்றியங்களில் துணை விவசாயக் கிடங்குக் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 13 ஊராட்சி ஒன்றியங்களில் பாறை உடைக்கும் கருவிகள் வாங்கப்பட்டு, அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விளைச்சலைப் பெருக்கும் திட்டத்தின் கீழ், இம் மாவட்டத்தில், 1,25,000 ஏக்கரில் ஐ.ஆர். 8 பயிரிட வேண்டும் என்று அளவு வரையறுக்கப்பட்டதில் சாதனை அளவு 1,35,589 ஏக்கர் என்ற அளவுக்கு உயர்ந்தது. மற்றைய நெல் விதை ஏ.டி.டி. 27, கோ. 29 ஆகியவை 95,000 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டது. ஆனால், நடைமுறையில் 99,408 ஏக்கரில் இவை பயிரிடப்பட்டன. ராபி பருவத்தில் இவ்வகை நெல் விதைகள் மொத்தம் 1,50,000 ஏக்கரில் பயிரிடத் திட்டமிட்டிருந்ததில், நடைமுறையில் அந்த அளவைப் பெருமளவுக்கும் மீறி மொத்தம் 3,22,614 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் 1971 ஜூன் மாதம் முடிய 567 ஏக்கரில் மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன. வனப் பாதுகாப்புப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 1,400 ஏக்கரில் பணிகள் நடந்துள்ளன.

மாவட்டத்தில் புதுக் கிணறுகள் எடுத்து, பம்பு செட்டுகள் அமைப்பதற்காக, வேளாண்மை மறுநிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட, திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை ஒப்புதல் பெற அனுப்பப் பட்டுள்ளன. இத் திட்டத்தின்படி எடுக்கப்பட இருக்கும் மொத்தக் கிணறுகள் எண்ணிக்கை 8,350; மொத்த பம்பு செட்டுகள் 11,850 ஆகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிரமணித் தொண்டர்கள் எண்ணிக்கை 5,040 ஆகும். 36 ஊராட்சி ஒன்றியங்களிலும் 11 நகராட்சிகளிலும் சிரமணிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் மாவட்டத்தில் சிரமணிப் படையினர் 18 பள்ளிக் கட்டடங்கள் கட்டினர்; இரண்டு இணைப்புச் சாலைகள் அமைத்தனர். பேரறிஞர் அண்ணா நினைவுப்பள்ளிக் கட்டடங்கள் 30, திறந்த வெளி அரங்கப் பணிகள் 5 ஆகியனவும் முடிக்கப்பட்டுள்ளன. இப் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 2,67,588. இதில் அரசினர் செலவு ரூ 1,23,577 ஆகும். மேலும் 13 பணிகள் நடைபெற்று வருகின்றன.

1971–72ஆம்-ஆண்டில் சிரமணித் திட்டத்துக்கு ரூ. 90,000 ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 43 சிரமணி அறிவகங்கள் இயங்கி வருகின்றன.


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

# தொடர்ந்து வளர்கின்றன தொழில்கள்!



தமிழ்நாடு குறுகிய காலத்திற்குள் பொருளாதார நடவடிக்கைகளைப் பல திறப்பட்ட வழிகளில் பிரித்து, அரிய சாதனையை எய்தியிருப்பதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி போற்றற்குரியதாகும். பொருளாதார வளர்ச்சி வீதத்தை இயன்ற மட்டில் விரைந்து, பெருமளவுக்கு உயர்த்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் அரசு, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

எடுத்துக் காட்டாகத் தொழில் துறையில் பயன்படுத்திய மின் சாரத்தின் அளவு 1956-57-ல் 560 மில்லியன் யூனிட்டுகளாக இருந்ததற்கு மாறாக, 1969-70-ல் 2484 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. விற்பனையான மொத்த மின்சாரம் 4574 மில்லியன் யூனிட்டுகளில் தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 54:46 என்ற விகிதத்தில் உள்ளது.

1970-ஆம் ஆண்டில் மாநிலத்தில் 13 பொது லிமிடெட் கம்பெனிகளும் 136 தனியார் கம்பெனிகளும் பதிவாகியுள்ளன. இவற்றின் அனுமதி பெற்ற மொத்த மூலதனம் ரூ. 30·55 லட்சம். இவற்றின் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 54 லட்சம் ஆகும்.

'பி' காம்ப்ளெக்ஸ் உற்பத்தி—

மாநிலத்தில் 1970-ஆம் ஆண்டில் 371 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 10,758 தொழிலாளர்கள் அவற்றில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

மாநிலத்தில் புதிதாக 7,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியவையும் 20·78 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுபவையுமான 36 உரிமங்களுக்கு இந்திய அரசு 1970-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, 30·69 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுவதும் 6,700 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதுமான தொழில்கள் தொடங்க 25 அனுமதிக் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட தொழிற்சாலை உரிமங்களுள் 6 உரிமங்கள் துணிகள் உற்பத்தி, வெளுத்தல், தொழிற்சாலை உருளைச் சங்கிலிகள், பிஸ்கோத்துகள் முதலிய பொருட்கள் குறித்தவையாகும்,

சிகரெட்டுகள், மோட்டார் டயர்கள், டியூப்புகள், வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ், ரப்பர், இரசாயனங்கள், பிஸ்டன், பிஸ்டன் வளையங்கள், ஸ்கூட்டர்கள் முதலியவைகளைத்தயாரிப்பதற்கு 25 அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### முன்னேற்ற நாடுகளுடன் தொழில் உறவு

இயந்திரங்கள், மின்சாரப் பொருட்கள், இரசாயனம், தோல் முதலிய தொழில்களில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

1970-ஆம் ஆண்டில் புதுடில்லி தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இம் மாநில நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13 ஆகும். இதுவரை பதிவு செய்துள்ளவைகளின் மொத்தம் 63. பல்வேறு உற்பத்தித் தொழில்களில் ஈடுபட இம்மாநிலத்தின் தொழில் முனைவர்கள் அமெரிக்கா, செக்கோஸ்லோவேகியா, பிரிட்டன், கிழக்கு ஜெர்மனி, கிரீஸ், ஜப்பான் முதலிய நாடுகளுடன் தொழில் நுட்பத் தொடர்பு, உடனுழைப்பு உறவு கொள்வதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாநிலத்தின் தொழில் பொருளாதாரத்தில் 23 பெரிய தொழிலியல் உற்பத்திப் பொருட்கள் குறித்து 1960-ஆம் அடிப்படை ஆண்டில் உற்பத்தி 100 என்று வைத்துத் தொழில் உற்பத்திப் புள்ளி விவரங்களைப் பார்ப்போமானால் தமிழ்நாட்டில் அடுத்தடுத்த ஐந்தாண்டுகளில் தொழிலியல் வேகம் உயர்ந்து கொண்டே போவது தெரிய வரும்.

பெருகிவரும் தொழில்கள் மூலம் வருவாயும் பெருகி வருகின்றது. 1960-61-ல் தொழில் துறையிலிருந்து மாநில அரசுக்கு 16·03 சதவீதம் வருவாய் கிடைத்தது. 1969-70-ல் இது 21·14 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

தொழில் வளர்ச்சியில் வட்டாரத்திற்கு வட்டாரம் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை நீக்கும் பொருட்டு, மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் தொழில்களை முனைந்து வளர்க்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இவ்வகையில், தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகளில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குரிய கட்டண வீதங்களில் 15 சதவீதச் சலுகை அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இச் சலுகைக்காகத், தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகள் எவை என்பதையும் அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசு நிதியிலிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித் தொகை வழங்கத் தமிழ்நாடு அரசு, இந்திய அரசுக்குக் குறிப்பிட்ட சில பகுதிகளைப் பரிந்துரைத்துள்ளது. புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குக் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து சலுகை நிதி உதவி பெற வேறு சில பகுதிகளையும் பரிந்துரைத்துள்ளது.

### உப்புச் சார்ந்த தொழில்கள்

மணலியிலுள்ள எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலையில் தொழில் பெருக்கத்துக்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. பெட்ரோலியத் துணைப் பொருட்களின் அடிப்படையில் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளை மதிப்பிடுவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனம், மணலியிலுள்ள

பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றின் துணைப் பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து இந்திய இஞ்சினியர்ஸ் நிறுவனம் அளித்துள்ள ஆய்வு அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

புதிய மாநிலத் தொழில் வளர்ச்சிக் குழுவின் பரிந்துரைகளையொட்டி, பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழில் குறித்து ஒரு துணைக் குழுவையும் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் குறித்து ஒரு துணைக்குழுவையும், தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு துணைக்குழுவையும் அரசு அமைத்துள்ளது. முதல் இரு குழுக்களின் அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மூன்றுவது குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை ஆராயும் வகையில், அயல் நாட்டு வாணிபம் பற்றிய இந்திய நிறுவனத்தின் அறிக்கையைத் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழ் நாட்டில் பரந்த அடிப்படையில் தொழில்கள் அமைந்திருப்பதால், இந்தியத் தொழில் வளர்ச்சியில் முக்கியமான இடத்தைத் தமிழ்நாடு தற்போது பெற்றிருக்கிறது. மின்விசை, போக்குவரத்து, தொழில் நிதி உதவி, தொழில் நுட்ப நபர்களை உருவாக்கப் பயிற்சி வசதிகள் முதலியவை குறித்து அரசின் கொள்கைகள் காரணமாக மாநிலம் முழுவதிலும் தொழில் வளரவும், தொழில்கள் பரவவும் ஏற்ற சூழ்நிலைகள் அமைந்துள்ளன. மாநில, மத்திய அரசுகள் வழங்கியுள்ள பல்வேறு வசதிகளைச் சாதகமாகக் கொண்டு தனியார் துறை, மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியில் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. உற்பத்தியின் பல்வேறு துறைகளிலும் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## தீர்வுகாண வழி !

‘‘ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு பிரிவும் அந்தச் சாதியினரின் தொழில் திறன், கிராமியப் பொருளாதாரத்தில் அவர்களுடைய தொழிலின் முக்கியத்துவம் ஆகியவைகளுக்கு ஏற்பத் தனிப் பிரச்சினைகளை எதிர் நோக்கி நிற்கின்றன. இவர்களுடைய வருங்காலச் செழுமைக்குரிய தோது மிகக்குறைவாகவே இருந்தாலும் அது விவசாயச் செழிப்புடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. தொழில் வினைஞர்கள், மற்றும் ஊழியம் செய்யும் சமூகங்களை எடுத்துக் கொண்டால் போதிய ஊதியமில்லை என்பது அவர்களுடைய முறையீடாக இருந்து வருகிறது. இந்தச் சாதியினர் விவசாயத்திலோ தொழிலிலோ, ஊழியத்திலோ, கைவேலைத் தொழில்களிலோ எதில் ஈடுபட்டிருந்தாலும், இவர்களின் வறுமை நிலை நீங்கவேண்டுமானால் விவசாயத்தையும் பரம்பரைத் தொழில்களையும் நம்பி யிருக்கும் நிலை மாறிப் பெரும் அளவில் இவர்கள் வேறு தொழில்களை மேற்கொள்ள வேண்டும். கிடைத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, தொழில் மாறிச் செல்கின்ற இந்தப் பெயர்ச்சி மிக மெதுவானதாகவே இருக்கின்றது. நமது பொருளாதாரமே மாறுதல் கட்டத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம். இந்த மாற்றத்தை விரைவுபடுத்த முடியுமா என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி.’’

‘‘பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் எந்த அளவு வளர்ச்சியடைந்திருந்த போதிலும், வேலையில்லாத் திண்டாட்டம், அரைகுறை வேலை வசதி நிலைமை ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவை கணிசமான அளவில் உதவ இயலவில்லை. புதிய தொழில்களின்விளைவாக பிரச்சினைகள் தீர்ந்துவிடும்என்று எண்ணியது நடக்கவில்லை. புதியதாகத் தொடங்கப்பட்ட தொழில்கள், இயந்திரங்களால் இயக்கப்படுபவை, அல்லது பெரும் அளவு மூலதனம் தேவைப்படுபவை என்ற நிலைமையே அற்குக்காரணம். இவை ஏராளமான அளவில் தொழிலாளர்களை ஈடுபடுத்திக்கொள்ளும் தன்மை வாய்ந்தவை அல்ல. பெரும்பாலான புதிய தொழில்கள் அயல்நாடுகளின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டவை. எனவே அவற்றில் பெருமளவில் ஆள் பலத்தை ஈடுபடுத்துவதற்கு வசதிகளோ தேவைகளோ இல்லை. எனவே வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முறையில் அதே நேரத்தில் சமுதாயக் கட்டுக்கோப்புச் சிதைவுறுத வகையில் நமது தொழில்களும் வாழ்வியல் வழிகளும் பரவலாக அமைதல் வேண்டும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை வளர்த்து, கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவைகளையும் பரவலாக அமைத்தால்தான், இந்த வகையில் நல்ல பலன் காணமுடியும். நகரச் சார்பு மிகுந்து விடாதமுறையில், தொழில்கள் பரவலாக வளர வழி காண்பது முக்கியம். கச்சாப் பொருள் கிடைக்கும் இடங்களில் அல்லது உற்பத்திப் பொருட்களுக்குத் தேவை அதிகம் இருக்கும் இடங்களில், சிறு தொழில்களைப் பெருக்குவதும், உள்ளூர் மட்டத்தில் தொழில் மயமாக்குவதும் தான் இதற்குரிய வழி. கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு, இந்த வகைத் தொழில்களே தீர்வு காணமுடியும்.’’

**தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி**




# வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சியாளர், கன்னியாகுமரி. | 5,849 | 12 |
| ஷை | 767 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், நீலகிரி .. | 174 | 50 |
| மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு | 13,075 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், வட ஆர்க்காடு. | 997 | 89 |
| மாவட்ட ஆட்சியாளர், சேலம் .. | 5,076 | 61 |
| மாவட்ட ஆட்சியாளர், நீலகிரி .. | 100 | 00 |
| ஷை | 400 | 00 |
| ஷை | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் .. | 226 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு | 16,627 | 85 |
| மாவட்ட ஆட்சியாளர், மதுரை .. | 7,291 | 06 |
| பிற்பட்ட வகுப்பினர், நல அமைச்சர் அலுவலகம். | 93 | 00 |
| முதலமைச்சர் அலுவலகம் .. .. | 4,958 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர் (காசோலை). | 700 | 00 |
| துணை மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவர், செங்கல்பட்டு (காசோலை). | 200 | 00 |
| தாசில்தார், தென்காசி (காசோலை). | 656 | 18 |
| நிர்வாக அலுவலர், பேரூராட்சி, திருமங்கலம் (காசோலை). | 500 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உப்பிலியாபுரம், திருச்சி (காசோலை) | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், திருநெல்வேலி. | 200 | 00 |
| துணைத் தாசில்தார், பாளையங்கோட்டை (காசோலை). | 300 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், துறையூர், திருச்சி. (காசோலை). | 100 | 00 |
| திரு என். வி. சண்முகம், கலைவாணர் தெரு, நெய்வேலி. | 8 | 00 |
| ,, ராமசாமி, தர்மபுரி மாவட்டம். | 5 | 00 |
| ,, என். கண்ணன், கள்ளக்குறிச்சி, தென்ஆர்க்காடு மாவட்டம். | 51 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, பெண்ணாகரம், தர்மபுரி மாவட்டம். (காசோலை). | 50 | 00 |
| தென்சென்னை மின் விநியோகக் கழகம், (காசோலை). 1 பரிசுச் சீட்டு. | 1,000 | 00 |
| திரு வி. கார்த்திகேசன், எம்.எல்.ஏ., திருச்செந்தூர். | 100 | 00 |
| மாண்புமிகு சி. சுப்பிரமணியம், திட்ட அமைச்சர், மத்திய அரசு. | 59 | 00 |
| திருமதி மீனாக்ஷி சுந்தராம்பாள், நகரவை உறுப்பினர். | 10 | 00 |
| திரு ஜெயசீலன், வித்யாலயா ரோடு, சேலம். | 50 | 00 |
| ,, கலியமூர்த்தி முதலியார், லால்குடி. | 10 | 00 |
| தமிழ் வளர்ச்சி மன்றச் செயலாளர், சென்னை-1. | 10 | 00 |

| | | |
|---|---|---|
| ஆரியக்கௌண்டம்பட்டி தி.மு.க. கிளை. | 11 | 00 |
| நாமகிரிப்பேட்டை பாலசுப்ரமணியம். | 10 | 00 |
| நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம். | 25 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, பெண்ணுகரம் தர்மபுரி,(காசோலை). | 50 | 00 |
| துணைப் பதிவாளர், திருநெல்வேலி (காசோலை). | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம், திருநெல்வேலி, (காசோலை). | 600 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர் (காசோலை). | 250 | 00 |
| துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 130 | 75 |
| துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 100 | 00 |
| துணைப் பதிவாளர், தூத்துக்குடி (காசோலை). | 87 | 25 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, சரவணம்பட்டி (காசோலை). | 300 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 2,050 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 1,400 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 100 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் (காசோலை). | 600 | 00 |
| நிர்வாக அதிகாரி, பெரியகுடுவை பேரூராட்சி (காசோலை). | 300 | 00 |
| நிர்வாக அதிகாரி, புஞ்சை புளியம் பட்டிப் பேரூராட்சி (காசோலை). | 1,200 | 00 |
| சென்ட்ரல் டாக்கீஸ், திருநெல்வேலி (காசோலை). | 76 | 04 |
| நிர்வாகப் பொறியாளர், தூத்துக்குடி, (காசோலை). | 515 | 00 |
| தாசில்தார், செங்கோட்டை(காசோலை). | 503 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம் ஆலங்குளம் (காசோலை). | 250 | 00 |

| | | |
|---|---|---|
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் (காசோலை). | 700 | 00 |
| அடிஷனல் தாசில்தார், வீரகேரளம்புதூர், திருநெல்வேலி (காசோலை). | 250 | 00 |
| நகராட்சி ஆணையர், திருநெல்வேலி (காசோலை). | 1,653 | 00 |
| நியூ ராயல் டாக்கீஸ், திருநெல்வேலி (காசோலை). | 54 | 43 |
| நிர்வாக அதிகாரி, நெரிஞ்சிப்பேட்டை பவானி வட்டம் (காசோலை). | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி (காசோலை). | 597 | 00 |
| நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, ஆதனி. | 250 | 00 |
| தொழில் நுணுக்க அலுவலர்கள் சங்கம் (தொழில் அமைச்சர் மூலமாக). | 501 | 00 |
| நிர்வாக அதிகாரி, மேட்டுப்பாளையம், ஈரோடு. | 400 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர், பாவூர்சத்திரம். | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அலங்காநல்லூர். | 50 | 00 |
| நிர்வாக அலுவலர், பெரியநெகமம் பேரூராட்சி, பொள்ளாச்சி. | 1,000 | 00 |
| பாபுலர் டாக்கீஸ், திருநெல்வேலி. | 131 | 09 |
| ஆட்சி அலுவலர், தொழிற் பேட்டை, கிண்டி-16 (காசோலை). | 1,875 | 00 |
| கால்நடை வளர்ச்சித் துறை இயக்குநர். | 40 | 00 |
| துணைப்பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 100 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங்கோட்டை (காசோலை). | 250 | 00 |
| தாசில்தார், தென்காசி (காசோலை). | 45 | 86 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செங்கோட்டை (காசோலை). | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி (காசோலை). | 199 | 50 |
| ராசிபுரம் வட்ட ஊழியர், தாலூக்கா ஆபீஸ். | 25 | 00 |

(தொடரும்)

வரகரிசிச் சோறும்
வழுதுணங்காய் வாட்டம்
முரமுரென வேபுளித்த
மோரும்—திறமுடனே
புள்வேளூர்ப் பூதன்
புரிந்துவிருந் திட்டான் ஈது
எல்லா உலகும் பெறும்.

என்று வரகரிசிச் சோற்றின் சுவையை ஔவையார் பாராட்டிப் பாடியுள்ளார்.

பண்டைப் புலவரின் பாராட்டைப்பெற்ற வரகரிசிச் சோறு, இன்றைய மருத்துவ வல்லுநர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது. நீரிழிவு நோயினால் (Diabetes) பாதிக்கப்பட்டவர்களுக்கு வரகரிசிச்சோற்றைச் சிறந்த உணவாக மருத்துவ வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர். இவ்வாறு புலவராலும், மருத்துவ வல்லுநர்களாலும் புகழப்படும் வரகரிசியில் பின் கண்ட சத்துக்கள் உள்ளன.

வரகரிசியில் உள்ள சத்துக்கள்.

| பெயர். | | சதவீதம். |
|---|---|---|
| புரதச் சத்து | ... | 8·31 |
| கொழுப்புச் சத்து | — | 3·70 |
| மாவுச் சத்து | — | 65·66 |
| நார்ப் பொருள்கள் | — | 8·97 |
| இரும்புச் சத்து | — | 5·00 |
| சுண்ணும்புச் சத்து | — | 0·04 |

வரகு ஒரு திடமான பயிர். வேறு எந்தப் பயிர்களையும் லாபகரமாகப் பயிரிட முடியாத சத்தற்ற எளிய செவ்வல் மண்ணிலும், கரிசல் மண்ணிலும் கூட வரகு நன்கு வளர்ந்து மகசூல் அளிக்க வல்லது. களர்த் தன்மையையும், மற்றப் பயிர்களைவிட அதிக அளவுக்குத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது வரகு. பருவ நிலை பாதிக்கப்பட்டு வறட்சி வாட்டுகின்ற நிலையிலும் வரகு உழவர்களுக்கு வருமானம் அளிக்கும் சக்தி வாய்ந்ததாக உள்ளது.



# வறட்சியைத் தாங்கும் புதிய வரகு

வரகு தானியங்களைப் பூச்சிகள் தாக்குவதில்லையாதலின் அவைகளை நீண்ட நாட்களுக்குச் சேதமில்லாமலும், தரங்கெடாமலும், சேமித்து வைக்க முடியும். எனவே, வறட்சிக் காலத்தில் வரகு தானியத்தை நீண்ட நாட்களுக்கு உணவுக்காகச் சேமித்து வைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம். வரகு வைக்கோல், கால்நடைகளுக்குத் தீவனமாகவும், களர் நிலத்தை மாற்றி நல்ல நிலமாக ஆக்குவதற்குத் தேவையான பொருளாகவும் பயன்படுகிறது.

எண்ணற்ற ஏழை எளியவர்களுக்கு உணவாக இருந்து வரும் வரகு, தமிழ் நாட்டில் ஏறத்தாழ 2,60,000 ஹெக்டேர்களில் பயிராகி வருகிறது. வரகு பெரும்பாலும் மானாவாரிப் பயிராகவே சாகுபடியாகி வருகிறது. ஆனால் திருச்சி மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் மட்டும் வரகு இறைவையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டிலேயே, திருச்சி மாவட்டத்தில்தான் வரகு அதிகப் பரப்பளவில் சாகுபடியாகிறது. தென்னார்க்காடு, இராமநாதபுரம், சேலம் மாவட்டங்கள் வரகு சாகுபடியில் முறையே, 2-வது, 3-வது, 4-வது இடங்களைப் பெற்றுள்ளன. வரகு சாகுபடியின் மூலம், தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 2·5 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதிலிருந்து ஏழை எளிய உழவர்களுக்கு உணவு அளிக்கும் வரகின் முக்கியத்துவம் புலனாகின்றதல்லவா?

வரகு உற்பத்தியைப் பெருக்கவும், புன்செய் நில உழவர்களின் வருவாயை அதிகப்படுத்தவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை நெடுங்காலமாக ஆராய்ச்சி செய்து வந்தது. அதன் பயனாய் 'கோ-2 வரகு' என்னும் ஒரு புதிய ரகம் கிடைத்தது. பல்வேறு பரிசோதனைகளுக்குப் பின் கோ-2 வரகே, மற்ற வரகு ரகங்களைவிடச் சிறந்தது என்று முடிவு செய்து, உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

புன்செய் நில உழவர்களின் வாழ்வை வளமாக்குவதில் தமிழ் நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது என்பதற்கோர் எடுத்துக் காட்டாய் கோ-2 விளங்குகிறது என்றால் மிகையல்ல.

## கோ-2 வரகு ரகத்தின் சிறப்புகள்.

1. கோ-2 வரகு குறுகிய கால வயதுடையது. நாட்டு ரகங்களின் வயது 180 நாட்கள். கோ-1 வரகு 140 நாட்கள் வயதுடையது. பி.எல்.ஆர். 1 வரகின் வயது 130 முதல் 135 நாட்களாகும். ஆனால் கோ-2 வரகின் வயது 125 முதல் 130 நாட்களேயாகும். எனவே தற்பொழுது உள்ள வரகு ரகங்களில் கோ-1 வரகு தான் மிகவும் குறுகிய கால வயதுடையதாக உள்ளது.

2. கோ-2 வரகு நன்கு தூர் கிளைக்கக் கூடியது. ஒவ்வொரு பயிரிலும் 20 முதல் 25 தூர்கள் கிளைத்து, 20 முதல் 25 கதிர்கள் தோன்றக்கூடும்.

3. கோ - 2 வரகு மற்ற வரகு ரகங்களைவிடப் பெருமளவில் வறட்சியைத் தாங்கிக் கொண்டு, மகசூல் அளிக்கும் ஆற்றல் கொண்டது.

4. கோ - 2 வரகு, கோ-1

# எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே!

## வெற்றிகள் குவிந்தால் போதுமா?



- பசுமைப் புரட்சி பரவுகிறது!
- புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!
- தொழில்துறையில் புதிய, புதிய முயற்சிகள்!
- சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!
- வீட்டுமனைப் பட்டா!
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!
- எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!

அரசு
ஆடவர்
ஆரணங்கு

பொறுப்பை
உணர்த்தும்
சிவப்பு முக்கோணம்.

சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகர முடிகிறதா?



நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது மக்கள்தொகைப் பெருக்கம்தானே!

## இதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?



**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்**
**இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.**

வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து

வரகைவிட 42·8 சதம் அதிக தானிய மகசூல் அளிக்கவல்லது.

5. கோ-2 வரகு, பாதகமான பருவநிலையிலும் ஹெக்டேருக்கு 1,000 கிலோகிராம் தானிய மகசூல் கொடுக்கிறது. சிறிது மழையும், காலத்தில் பெய்து விட்டால் கோ-2 வரகு ஹெக்டேருக்கு 1,800 கிலோ வரை மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

இத்தகைய சிறப்புக் குணங்களை, கோ-2 வரகு பெற்றுள்ளதால், அதைப் பயன்படுத்தித் தமிழ் நாட்டின் வரகு உற்பத்தியைக் குறிப்பிடத் தகுந்த அளவில் உயர்த்த முடியும் என்பது உறுதியாகிறது. கோ-2 வரகின் மூலம் ஏக்கர் மகசூல் அதிகமாக ஆவதால், ஏழை எளிய புன்செய் நில உழவர்களுக்கு அதிக வருவாயும் கிட்டும் என்பது திண்ணம். எனவே வரகு சாகுபடி செய்யும் உழவர்கள் அனைவரையும் கோ-2 வரகு சாகுபடி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

## கோ-2 வரகு சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்.—கோ-2 வரகு ரகத்தை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விதைக்கலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் அக்டோபர் மாதம் வரையும் விதைக்கலாம்.

நிலம் தயாரித்தல்.—நிலத்தை 2 அல்லது 3 தடவை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இடவேண்டும். போதிய மழை கிடைக்கும் இடங்களில் ஏக்கருக்கு 40 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை அடி உரமாக இடவேண்டும்.

விதையளவு.—ஏக்கருக்கு 10 கிலோ கோ-2 வரகு விதை தேவைப்படும்.

விதைத்தல்.—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலந்து வரிசைகளுக்கு இடையே 18 அங்குலமும், பயிருக்குப் பயிர் 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விட்டு விதைக்க வேண்டும்.

கோ-2 வரகுடன் துவரையைச் சால்பயிராகச் சாகுபடி செய்யலாம். ஆறு அல்லது எட்டு அடிக்கு ஒரு சால் வீதம் துவரையை விதைக்கவேண்டும். வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். இவ்வாறு சால்பயிராகத் துவரையை விதைக்க எஸ். ஏ. 1 துவரையையோ கோ-1 துவரையையோ பயன்படுத்தலாம்.

பின்செய் நேர்த்தி.—விதைத்த 3 வாரங்களுக்குப் பிறகு பயிர் கலைத்தல், களையெடுத்தல் ஆகிய வைகளைச் செய்ய வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.—பொதுவாக கோ-2 வரகு, பூச்சி, நோய்களினால் தாக்கப்படுவதில்லை. அப்படி ஏதேனும் பூச்சியோ, நோயோ தாக்கினால் உங்கள் ஊர்நல ஊழியரையோ, துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ கலந்தாலோசித்து மருந்து தூவுதல் அல்லது தெளித்தல் வேண்டும்.

அறுவடை.—விதைத்த 125 முதல் 130 நாட்களில் அறுவடைக்கு வரும். கதிரில் உள்ள தானியங்கள் நன்கு முற்றிய பின், தாளுடன் அறுத்துப் போரடிக்க வேண்டும். நன்கு முற்றாத தானியத்திலும், உமியிலும், தாளிலும் ஒருவகை நஞ்சு ( Poison ) உள்ளது. எனவே தான் வரகு தானியம் நன்கு முற்றிய பின்பே அறுவடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது.

## வரகு தானியத்தைப் பயன் படுத்தும் முறை.

பொதுவாக அறுவடை செய்த உடனேயே வரகு தானியத்தை உணவுக்குப் பயன்படுத்தக் கூடாது. அதுவும் குறிப்பாக ஈரம் அதிகம் இருந்த பகுதிகளிலிருந்து அறுவடை செய்த வரகை உடனே உணவாக்கி உட்கொள்ளுதல் கூடாது. நன்கு முதிர்ந்த தானியங்களை நன்றாக வெய்யிலில் காய வைத்துக், கொஞ்ச நாட்கள் இருப்பு வைத்திருந்த பின்னரே உபயோகிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வரகு தானியத்தில் உள்ள நஞ்சு நீங்கிவிடும்.

வரகு தானியத்தின் உமி, அரிசியுடன் பிடிப்பு உள்ளதாய் இருக்கும் ; செம்மண் குழம்பில் கலந்து காயவைத்து உரலில் இட்டுக் குத்தி, அல்லது திருகைக் கல்லில் செம்மண்கட்டி அரைத்து உமியைப் போக்க வேண்டும். அவ்வாறு செய்தால் வெள்ளையான அரிசி கிடைக்கும்.

வரகு அரிசியைச் சோறு சமைக்கலாம் ; களி செய்வதற்கும் (கேழ்வரகுக் களி போல்) பயன்படுத்தலாம் ; உப்புமா, முறுக்கு போன்ற சுவையான உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கும் உபயோகிக்கலாம்.

## ஒரே கல்லில் இரண்டு மாங்காய் !

கோ-2 வரகு சாகுபடி, வளங் குன்றிய வயல்களிலிருந்தும் வருவாய் அதிகம் கிடைக்க வகை செய்கிறது. கோ-2 வரகுடன், துவரையைச் சால் பயிராகச் சாகுபடி செய்தால் துவரம் பருப்பு உற்பத்தியையும் பெருக்க முடிவதுடன், அதன் மூலமும் அதிக வருமானம் பெற முடியும்.

பருவநிலை சாதகமாக அமைந்து விட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 720 கிலோ வரகு தானியமும், 300 கிலோ துவரையும் கிடைக்கும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் ஒரே சாகுபடியில் வரகு தானியத்தையும், துவரையையும் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

எனவே, கோ-2 வரகுடன், துவரையையும் சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்கி, வருவாயையும் பெருக்கிக் கொண்டு வளமாக வாழுங்கள் என்று புன்செய் நில உழவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# தமிழ்நாடு தொழில் வாணிகத் துறை,

சென்னை - 5

## கைவினைப் பொருட்கள்

*நேர்த்தியான கவர்ச்சி மிக்க கைவினைப் பொருட்களுக்குத் தமிழ்நாடு தொழில், வாணிகத் துறையினரால் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்படும் விற்பனை நிலையங்களுக்கு வருகை தருக.*

1. மவுண்டு ரோடு, சென்னை
2. மகாபலிபுரம், செங்கல்பட்டு மாவட்டம்
3. நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம்
4. திருச்சிராப்பள்ளி
5. தஞ்சாவூர்
6. திருநெல்வேலி
7. கோயம்புத்தூர்
8. திண்டுக்கல், மதுரை மாவட்டம்
9. சேலம்

*விற்பனை செய்யப்படும் சில முக்கிய பொருள்கள்*

வெண்கலச் சாமான்கள், பித்தளைச் சாமான்கள், வேலைப்பாடமைந்த உலோகப் பொருள்கள், சிலைகள், சிற்பங்கள், தந்தப் பொருள்கள், நவீன பனையோலைப் பொருள்கள், பீங்கான் சாமான்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள், தரை விரிப்புகள், பத்தமடைப் பாய்கள், தஞ்சாவூர் வேலைப்பாடமைந்த தட்டுகள் முதலியன.

இயக்குநர்,
தொழில் வாணிகத் துறை,
சென்னை - 5




## 15. இறையும் தமிழ் கேட்கும் இங்கு

◐கொஞ்சுமொழிக் குஞ்சரியே ! கோகிலமே ! அஞ்சுகமே !
மஞ்சில் மறைநிலவே ! வஞ்சியே ! என்—நெஞ்சில்
உறையும் திருமகளே ! உன்மறுப்பால், உள்ளம்
இறையும் ; தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் கே. வி. தங்கவேலு, பொருளூர்.

கொள்ளைச் சிரிப்பால் குழல்நாணப் பேச்சுதிர்க்கும்
வெள்ளைமனப் பிஞ்சின் விழிகண்டே—வெள்ளிப்
பிறையும் ஒளிகேட்கும் ; பேச்சினிமை கண்டே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-15.

சாதிப் பிரிவகற்றித் தண்டமிழில் அர்ச்சனைகள்
ஓதுவிக்கக் கற்றவல்லார் உற்றுரைக்கும்—கோதில்
மறைமொழியைத் தேனாய் மகிழ்ந்துசெவி நீட்டி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மஹபூப் ஜான், எருமைப்பட்டி.

கண்மூடிக் கொள்கைகளைக் காலமெனும் வெள்ளத்தால்
மண்மூடிப் போகவிட்டு வன்றெண்டர்—பண்ணார்
மறைதிரு வாசகத்தின் மந்திரத்தை ஓதின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—திருமதி கோரி, இராசிபுரம்.

ஆலயத்தில் அன்னைதமிழ் அர்ச்சனைக்கும் ஆணையிட்டார்
காலம் கனிந்துவந்த காரணத்தால்—சிலம்
நிறைமிளிர, நெக்குருக நன்று யினிமேல்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி

எங்கும் தமிழ்மணக்க ஈங்கிருக்கும் நல்லாட்சி
தங்கள் குறிக்கோளாய்த் தாம்கொண்டார்—'' எங்கும்
இறைவாழும் கோயிலெல்லாம் இன்றமிழே '' என்றார்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வ. இராமநாதன், திருவேகம்பத்து.

தேவர் குறளும் திருவா சகநூலும்
மூவர் தமிழிசையும் முன்கேட்டால்—யாவர்
மறையும் மகிழிசையும் மற்றெங்கே கேட்பார்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் பொன்மாரி, ஆத்தூர்.

கல்லூரி மாணவர் கன்னித் தமிழ்கேட்க
மெல்ல நழுவுவதோர் வேடிக்கை !—எல்லாம்
அறிந்தவன் என்றே அனைவரும் போற்றும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மலை. மா. ஆறுமுகம், மணிமங்கலம்.

நாளும் தமிழ்கற்கும் நம்மரசின் மாண்புமிகும்
ஆளுநர் கே. கே. ஷா ஆர்வங்காண் ;—ஆளும்
கறையிலா நம்முதல்வர் கட்டளையால் மீண்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சுழ. அண்ணாமலை, கோவை.

---

◐ பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்.

திரு புலவர் கே. வி. தங்கவேலு,
(பொருளூர் அஞ்சல்),
பழனி (வட்டம்), மதுரை மாவட்டம்.

அன்னைத் தமிழ்மொழியில் ஆள்பவரின் சொற்பொழிவோ
என்னை மயங்கவைக்கும், ஏழிசையே !—இன்னும்
பிறையும் சடைமுடியும் பேரரவும் கொண்ட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆர். இராசு, வல்லக்குண்டாபுரம்.

நாயன்மார் ஆழ்வார்கள் நற்றமிழிற் பாட்டிசைத்துத்
தூய கடவுள் தொழுதநாள்—போய
குறையு மொழிந்தோடக் கொண்டாடி நன்றே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு

—நா. இளங்கோ, சென்னை-14.

தெய்வத் தமிழ்என்று திக்கெட்டும் போற்றுகையில்
தெய்வம் மறுக்குமோ தேன்தமிழைப்—பொய்யர்
குறைப்பட்டுக் கொண்டாலும் கோயில்களில் எல்லாம்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

செங்கரும்புச் சாறெடுத்துச் செந்தேனை யுங்கலந்து
தங்கக் கலயத்தில் தந்ததுபோல்-எங்கும்
குறளில் சுவைகூட்டும் கொள்கை அரசில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—து. நடராசன், மெய்ஞ்ஞானபுரம்.

அன்று தமிழ்வேந்தர் ஆக்கிவைத்த கோவில்களில்
இன்று தமிழுக் கிடமில்லை—என்ற
கறைநீங்கும் நம்மரசின் கட்டளையால் ; மீண்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—லலிதா அண்ணாமலை, கோயம்புத்தூர்-1.

அண்ணா மறைமலையார் ஆரூரார் பாரதியார்
பண்ணாய் உரையாடும் பைந்தமிழால்—விண்ணோர்
உறையும் பதிகழிந்(து) உள்ளாசை ஊக்க
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் நா. கோபாலகிருட்டிணன், திருச்சி-4.

மூவேந்தர் கேட்டதமிழ் ! முக்காலம் வென்றதமிழ் !
நாவேந்தர் அண்ணாவின் நல்லதமிழ்-பாவாய்
குறைவின்றிச் சொன்ன ‘ குறள் ’இருக்கும் மட்டும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. நடராசன், சுந்தராபுரம்.

செவிமணக்கும் ; எண்ணிய சிந்தை மணக்கும் !
புவிமணக்கும் ; நம்கலைஞர் பொற்புக்—கவியில்
மறைமணக்கும் ; நாமணக்கும் ; மாத்தமிழால் என்றால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மங்களம் கோபால், பொள்ளாச்சி.

மண்ணைத் தனைக்கும்உன் மாத்தமிழ் மூத்தவள்
பண்ணத்தி பாவத்தி பட்டத்தி ;-பெண்ணே !
மறைவாழ் தனிமொழி வேறிலைநீ பாட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—திருச்சி குகன், ஆண்டிமடம்.

தக்க விடையதனைத் தட்டாமல் பேரவையில்
சிக்கல் அவிழ்க்கின்ற சீருடனே-மிக்க
விரைந்தளிக்கும் நம்கலைஞர் வீற்றிருக்கும் போது
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. காந்தி, பி.எஸ்ஸி., பி.டி., தேவத்தூர்.

கோவினிலே செந்தமிழ்தான் கோலோச்சும் என்றேபூங்
காவினிலே வானொலியில் காதுற்றேன்—கோவில்
மறையோதும் ஆன்றோர் மகிழ்வர் நயப்பர்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

அருள்சுரக்கும் நோக்கும் அழகுதவழ் வாக்கும்
மருளகற்றும் போக்கும் ; வலிவும்—பெருமை
திறைதமிழாற் கண்டன்றோ நெஞ்சுவந்து நித்தம்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

தேவாரப் பாகும் திருவா சகத்தேனும்,
பாவார்ந்த ஆழ்வார்தம் பாசுரமும்—காவாக்
குறைவந்து சேருமெனும் குற்றம் உணர்ந்தால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அரிமதி தென்னகன், புதுச்சேரி.1.

வள்ளுவர் தேன்குறளை வானோங்கச் செய்வதெல்லாம்
தெள்ளு தமிழ்க்‘ கலைஞர் ’ தீரமன்றோ—வெள்ளைத்
துரையும் தமிழ்கற்கும் தூயஇம் மண்ணில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—செ. பெரியசாமி, குடகிப்பட்டி.

கல்லூரி, நன்மன்றம், காணும் அலுவலகம்
எல்லா விடத்தும் இருந்தமிழே—ஒல்லென்(று)
உறையும் படிச்செய்த ஒட்பம் மகிழ்ந்தே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

சொக்கச் சுவையூட்டுஞ் சொல்லார் கலைஞரது
தக்க தமிழாற்றல் தானுணர்ந்து—மிக்க
அறையும் வடமொழியை ஆவலுடன் விட்டு
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு.

ஈராண் டகவை இலங்கும் தமிழரசு
பாராளும் எங்கள் தமிழ்ப்பாவை—பேரால்
அறைகின்ற வெண்பா அமுதுண்ண வேண்டி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் சோ. பா. வேதாரண்யம்.

மூத்தமிழை முப்பாலைப் புத்தமுதை இப்பாரில்
வித்தகர்தம் வண்டமிழின் வேட்கையில்—சித்தம்
சிறைகொண்டு தேனுண்ணும் வண்டாக மாறி
இறையும் தமிழ்கேட்கும் இங்கு

—மானூர் ஆ. புகழேந்தி, கோவை.

உள்ளம் உருக்கும்! உணர்ந்திடிலோ மெய்சிலிர்க்கும்!
வெள்ளம் எதிர்த்தே விளையாடும்—அள்ளக்
குறையா இலக்கியங்கள் கொண்டிருக்கும் பாங்கால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

தெய்வத் தமிழ்வழங்காச் சின்னதொரு கோயிலையும்
எய்தாதெம் கால்கள் எனத்தமிழர்—மெய்யாய்
உறையும் மனத்தில் உறுதிமிகக் கொண்டால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு ·

—உலகன், ஈரோடு.

நிறைபொருளும் நற்சுவையும் நீள்பயனும் நேரே
குறைவின்றிக் கொட்டிக் கொழிக்கும்—இறைமை
உறையும் உயர்மொழி ஒன்றேகாண் அன்பே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு.

எண்ணால் எழுத்தால் எடுத்தாளும் நன்முறையால்
பண்ணால் புகழ்கொண்டோம் பாரிடையே—எண்ணி
மறையோர் மனந்திருந்தி மாத்தமிழில் ஓதின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—முத்து. ரெங்கராசன், கோம்பை.

செந்தீயில் வேகாமல் தெண்ணீர் எதிரேறி
வந்தமொழி எந்தமொழி வம்பரே—சிந்தை
குறைவால் மொழிக்கிழிவு கூறேல்! எமையாள்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. பூமா. அருப்புக்கோட்டை.

தெள்ளு தமிழ்மொழியின் தேவார வாசகத்தை
உள்ளம் கசிந்துருக ஓதிடுவீர்—எள்ளா(து)
இறைபாடும் அர்ச்சகரே என்றதனால் கோவில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இளங்கோ, ஆலங்குளம்.

ஆண்டவனைச் செந்தமிழால் அர்ச்சிக்க வேண்டுமென
ஈண்டு முதல்வர் இயம்பியதால்—வேண்டி
முறையாய்த் தமிழ்ப்பாவால் முன்னின்று போற்ற
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டம்பாக்கம்.

இனியதமிழ்ப் பாசுரத்தால் எங்கெங்கும் பாடிக்
கனியாய்ச் சுவைத்திடவே காண்போம்—பணியாய்
மறையும் அறியாமை, மாயுந்தீண் டாமை
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. கூத்தரசன், காவேரிநகர்.

ஆளுநர் கற்கும் அமுதத் தமிழ்மொழியை
நாளும் பயிலுவம் நாமென்னும்—சூளால்
மறைநான்கும் பாம்பும் மறந்தோடி வந்தே
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—வெ. ஆ. உத்தமபுத்திரன், வடுகபட்டி.

வண்டமிழில் நல்ல வழிபாடு செய்வதற்குக்
கொண்டுவந்த நம்மரசின் கொள்கையினால்—உண்டாம்
குறையிரந்து உள்ளுருகக் கூறிடுவார் வாயில்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

இன்பத் தமிழா லிறைவழி பாட்டினைத்
துன்பந் துடைக்குந் தமிழரசு—அன்பின்
முறையா லணைத்தே மொழியெனச் சாற்ற
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—தா. உ. சுப்பையன், பெரியபுத்தூர்.

கண்ணில் பொலிந்து கருத்தில் கலந்திருந்து
மண்ணில் தவழும் மணிநிலவாய்—அண்ணா
'துரை' வழித் தோன்றலாம் நற்கலைஞர் பேசின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் அரசு, வெண்ணாத்தூர்.

கடல்நீரும் காற்றும்நல் காருண்ட வானும்
உடலெரிக்கும் தீயும் உவக்கும்—உடன்போய்
மறைந்த பேரறிஞன் மாமன்றில் பேசின்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—முத்துராமலிங்கம், ஒடையகுளம்.

கோவில் அருச்சனைக்குக் கொண்டுவந்தார் தீந்தமிழை
நாவில் இனிக்குதடா நண்பா!—பாவில்
நிறைஞான அர்ச்சகர்கள் நேயமுடன் பாட
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆ. வேலு, சூராணம்.

சங்கத் தமிழ்நூலும், சான்றோரின் காப்பியமும்,
பொங்கும் திருக்குறளும் போதிக்கும்—தங்க,
மறைப்பொருளை மாந்துதற்கே மன்றமதி லாடும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—பாலதண்டபாணி, ரெட்டியாளூர்.

இறைவன் நமைப்படைத்தான் இன்தமிழைத் தந்தான்
மறையின் வழிநடக்க வைத்தான்—முறையாய்
நிறைபுலவர் நாவசைத்தால் நீலகண்ட னை
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

இல்லில் இயக்கத்தில் இங்குப் பிறந்தோர்வாய்ச்
சொல்லில் இதயத்தில் சொந்தமாய்—நல்ல
'மறை' தந்த செந்தமிழே மாண்பார் செயலால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

நாயன்மார் ஆழ்வார் நனிமிக நைந்துருகி
நாயகனைப் பாடியதும் நற்றமிழால்—நேயம்
உறையும் திருமுறைகள் உள்ளம் நிறைய
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—புலவர் து. அ. சீனிவாசன், சேலம்-6.

சொல்லும் பொருளும் துலங்கும் தமிழ்கேட்டுக்
கல்லும் உருகிக் கவிசொல்லும்—வல்லீ
செறியும் அமிழ்தன்ன தீஞ்சுவையும் சேர்ந்தால்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

மன்னர்கள் கேட்டு மகிழ்ந்திருந்தார்; பைந்தமிழைச்
சொன்னவர் எல்லாம் சுகித்திருந்தார்—என்ன
குறைகண்டீர்? ஓதுதற்குக் கொள்வீர் தமிழை
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—ஆர். கே. பி. இராசரத்தினம், புதுடெல்லி.

நாடுபுகழ் பேரறிஞர் நற்கலைஞர் நாவலரால்
பீடுமிகப் பெற்றதமிழ்ப் பேருலகில்—ஈடில்
அறநிலையத்(து) ஆள்வினையால் ஆலயங்கள் தோறும்
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.-2.

கோவில் மணியோசை கொஞ்சும் இசையினிலும்
கூவி அழைக்கும் குளிர்தமிழைக்—கோவில்
மறைமொழியாய் ஆக்கினார் மாக்கலைஞர் ஆகா!
இறையும் தமிழ்கேட்கும் இங்கு.

—இரா. வைரமுத்து, சென்னை-30.

# உலகப் பெருங் காடுகள்

'புவனா'




உலகப் பெருங்காடுகள் எத்தனை என்று உங்களுக்குத் தெரியுமா?'National Parks' என்று அழைக்கப்படும் இந்தக் காடுகள் வானுயர்ந்த மரங்களை உடையன வாகவும் உள்ளன. பொட்டல் வெளியாகவும், பாறைப் பகுதி யாகவும் இருக்கின்றன.

கொடிய விலங்குகளும், வேறு எங்கும் காணப்படாத விலங்கினங்களும் இக்காட்டுப் பகுதிகளில் உள்ளன.

முதலில் உலகிலுள்ள குறிப்பிடத் தகுந்த பெருங்காடுகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வோம் :—

வட அமெரிக்காவில் உள்ள காடுகள் விவரம் வருமாறு :—

ஐக்கிய நாடுகள்

1 எல்லோ ஸ்டோன் காடு, மான்டானா.

2 கிராண்ட் டெட்டன், [illegible]

3 யோசிமிட், கலிபோர்னியா
4 செக்வோயாரே கிங்ஸ் கன்யான், கலிபோர்னியா.
5 ராக்கி மவுண்டென், கொலராடோ.
6 கிராண்ட் கன்யான், அரிஸோனு.
7 பிக் பெண்ட், டெக்ஸாஸ்.
8 எவர் கிளெட்ஸ், ப்ளோரிடா
9 மவுண்ட் மக்கின்லே, அலஸ்கா
10. ஹவாய் வல்கனேஸ், ஹலேகலா, ஹவாய்.
11 க்ளேஸியர், மாண்டானு

கனடா

12 வாட்டர்டன் லேக்ஸ், ஆல்பெர்டா.
13 பான், ஆல்பெர்டா.

மெக்ஸிகோ

14 தி நேஷனல் பார்க்ஸ் ஆப் மெக்ஸிகோ.

ஆப்ரிக்கா

15 க்ருகர், ட்ரான்ஸ்வால்
16 உம்பலோஸிகேம் ரிசர்வ் ஹ்லுஹ்லுவே கேம் ரிசர்வ் நாடல்.

ரொடிஷியா

17 வாங்கி, மடாபெலலாண்ட்

ஸாம்பியா

18 காபூ -ஹூங்க்வா வாலி கேம் ரிசர்வ்

டான்ஸானியா

19 செரங்கெடி.
20 ருகா.
21 மிகூமி.

கென்யா

22 நைரோபி.
23 சாவோ.
24 அம்போசலி.

உகாண்டா

25 மர்ஷிசன் பால்ஸ்.
26 க்வின் எலிஸபெத்.
27 கிடபோ வாலி
28 தி காங்கோ & வாண்டா

ஐரோப்பா.

29 கெய்ரன்கார்ம்ஸ், பிரிட்டன்.
30 ஸ்விஸ், ஸ்விட்சர்லாந்து.
31 காமர்க், பிரான்ஸ்.
32 மான்டானு-டி-கவடென்கா, ஸ்பெயின்.
33 காடோ டொனுனு, ஸ்பெயின்
34 பாலஸ் ஆனஸ்தந்துரி, பின்லாண்ட்.
35 சரேக், பாஜைலாண்டா & ஸ்டோராபாலெட், ஸ்விடன்
36 பயலோவீஸா, போலண்டு.
37 டாட்ரா, செக்கோஸ்லவேக்கியா.
38 கிஸ்பால்டன், ஹங்கேரி.
39 க்ரான் பாரடைசோ, இத்தாலி.

தென் அமெரிக்கா.

40 ராங்கோ கிராண்டே, வெனிசுலா.
41 நாஹுல் ஹூபி, அர்ஜென்டைனு.
42 கலபோகஸ் தீவுகள், ஈக்வேடர்.

ஆசியா.

43 கார்பெட், இந்தியா.
44 காஜிரெங்கா, இந்தியா.
45 ரஹூனு, இலங்கை.
46 க்ரோநோட்ஸ், ரஷ்யா.
47 சிகோட்-அலேன், ரஷ்யா.
48 பூஜி-ஹகோன்-ஜப்பான்.
49 செடோனே-கை, ஜப்பான்.
50 காஹோ-யை, தாய்லாந்து.

டெக்ஸாஸில் உள்ள காட்டில் தான் உலகிலேயே உயரமான மரங்கள் உள்ளன என்று கண்டுபிடித்திருக்கிறர்கள்.

வடஅமெரிக்காவிலுள்ள ராக்கி மவுண்டன் காட்டில்தான் உலகிலேயே மிகப் பெரிய பூக்கள் உள்ளன. இக்காடுகளில் செக்குயொயாஸில் என்ற மரங்கள் உள்ளன. இவை மிக உயரமானவை.

நைரோபி, தாங்கனிகா முதலிய இடங்களில் உள்ள காடுகளில் கொடிய விலங்குகள் கூட்டம் ஏராளம்! ஏராளம்!

ஆப்பிரிக்க நாட்டிலுள்ள பெருங்காடுகளில்தான் அதிகமான அளவுகளில் விலங்குகளைக் காணலாம்.

உலகிலே மிகப் பெரிய விலங்காகக் காட்சி அளிக்கும் ஆப்பிரிக்க யானைகளை கென்யாவிலுள்ள அம்போஸிலி காடுகளில் காணலாம். இங்கே உள்ள யானைகளின் கூட்டம் போன்று வேறு எங்கும் காண முடியாது. மாலை நேரங்களில் ஆற்றோரம் தண்ணீர் குடிப்பதற்காக இவை வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி என்று கூறப்படுகிறது.

இயற்கை அன்னையின் இணையற்ற செல்வமாக விளங்கும் இந்தக் காடுகளில் நாம் கேட்டறியாத, பார்த்தறியாத பல்வேறு வகையான விலங்குகள் உள்ளன.

'நேஷனல் பார்க்ஸ்' என்று அழைக்கப்படும் இந்தக் காடுகளில் பாறைப் பகுதிகளாக உள்ளவை வட அமெரிக்க நாடுகளிலும், மிகப் பயங்கரமான காடுகளாக உள்ளவை ஆப்பிரிக்க நாட்டிலும் உள்ளன.

அறிவியல் ஆராய்ச்சிக்கும், நில நூல் ஆய்வுக்கும் இக்காடுகள் பெருந்துணையாக அமைந்துள்ளன.

உலகம் தோன்றியது முதல் இக்காடுகளின் தன்மைகள் பெருமளவில் மாறுதல் அடைந்து வளர்ந்துள்ளன என்பதைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

விலங்கியல் ஆராய்ச்சியாளர்களுக்கே ஒரு காலத்தில் புதிராக இருந்த விலங்குகளும் இக்காடுகளில் உண்டு.

உலகப் பெருங்காடுகள் பற்றிய முழுமையான விவரங்களை அறிய மிகப் பெரிய புத்தகம் ஒன்றை 'ரிச்சர்ட் காரிங்டன்' என்பவர் 'கிரேட் நேஷனல் பார்க்ஸ்' என்ற பெயரில் எழுதியுள்ளார்.

இந் நூலில் உலகப் பெருங்காடுகளின் பரப்பளவு, தன்மை, அங்குள்ள விலங்குகள், பறவைகள் முதலியவற்றை விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அன்பு உள்ளம்

பி.வி.கிரி



துள்ளி ஓடுது—கன்று
துவண்டு ஆடுது
அள்ளி அணைக்குது—பசுவும்
அன்பால் இணைக்குது !

குஞ்சு கூட்டிலே—காக்கை
கொஞ்சி ஊட்டுது
கொஞ்சிப் பேசுது—வெண் புரு
கூடி மகிழுது !

பட்டுக் குட்டிக்கு—பூனை
பாலைப் பொழியுது
குட்டிக் குரங்கிடம்—தாயும்
கூடிக் குலவுது !

அன்பு உள்ளத்தால்—உயிர்கள்
அனைத்தும் வாழுது
இன்ப வாழ்விற்கு—அன்பு
என்றும் வேண்டுமே


# வெள்ளி விழா மலர்

முன்னிலாப் புது முறையில்
தன்னந்தனிச் சிறப்போடு
எண்ணிலாப் படங்கள்
எழுத்தோவியங்களுடன்
தய ராகிறது.

விலை ரூ. 2-50.


அண்ணன் காட்டிய வழி ⑤
எல்லாரும் சொல்றபடி அண்ணாவின் முன்னாலேயே முடிவு செய்யலாம்
அண்ணாவைக் கேட்டுக் கொண்டு கூட்டம் நடத்தலாம்
நாங்கள் வருகிறோம்
என்ன வேலா நீயும் அண்ணாவைக் கேட்டு முடிவு செய்யலாம்னு சொல்லிட்டே
யார் அந்த அண்ணா?
எங்கள் பள்ளிக்கூடத் தமிழாசிரியர்
அண்ணான்னு சொல்றீங்களே
நாங்கள் எல்லாரும் அப்படித்தான் அழைப்போம்!
அவருக்கும் திருவள்ளுவர்மன்ற ஆண்டு விழாவுக்கும் என்ன சம்பந்தம்
இப்படி ஒரு மன்றம் நடக்கிறதே அவருடைய முயற்சியால்தான்
அதற்காக நம் உரிமைகளைப் பறிகொடுத்து விட வேண்டுமா?
என்ன வேலா யோசிக்கிறே?
அண்ணாவை எதிர்த்து....
ஏன் தயங்குறே வேலா? என்ன பயம்?
அண்ணாவுக்கு முத்துவைத்தான் பிடிக்கும், அவன் சொல்றதுதான் சரி என்பார்
அதை நாம் முறியடிக்கணும் அதுக்கு ஏதாவது திட்டம் வகுக்கணும்
நமக்கு எதிரா உள்ளவுங்களுக்கு ஆதரவு காட்டும் உங்கள் தமிழாசிரியரை முதலில் பழி வாங்கணும்
அவரை என்ன செய்ய முடியும்?
அவர் மேலேயே பொய் சொல்லி கெட்ட பெயர் ஏற்படுத்தினால்
?!
அபாரம்! அபாரம்! ஏன் வேலா பேசாமே இருக்கே? எதிரிகளைப் பழி தீர்ப்போம்
வெற்றி! வெற்றி நமக்கு
வெற்றி நமக்கு இல்லாமல் வேறு யாருக்கு?
வாங்க அண்ணா! வாங்க!
இவர்தான் அண்ணாவா?
தொடரும்
கதை: நம்பியின்தம்பி * படம்: குமார்